முதலாம் ஆண்டுச் சிறப்பிதழ்

Extra

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விழி : 01 ஆகஸ்ட் 2005 பார்வை : 12 விலை : ரூபா.25.00




உள்ளே....


மா. கருணாநிதி ■ இலங்கையின் ஆரம்பக் கல்வியில் நியாயத்தன்மையும் சமவாய்ப்பும்

செ.சேதுராஜா ■ இலங்கையின் பொதுக்கல்விச் செயற்பாடுகளில் பாடசாலை அதிபர்களது வகிபாகம்

உரையாடல் ■ தமிழரைப் பொறுத்தவரை காலனித்துவம் இன்னும் முடியவில்லை...

கி. அரங்கன் ■ நோம் சோம்ஸ்கி

தை. தனராஜ் ■ ஆசிரியரும் சிந்திக்கும் திறன்களும்

க. சுவர்ணராஜா ■ பாடசாலை மட்டத்திலான வாண்மை விருத்தி

# POOBALASINGHAM BOOK DEPOT

IMPORTERS, EXPORTERS, SELLERS & PUBLISHERS OF BOOKS,
STATIONERS AND NEWS AGENTS.

**Head Office :**
340, 202 Sea Street,
Colombo 11, Sri Lanka.
Tel : 2422321
Fax : 2337313
E-mail : pbdho@sltnet.lk

**Branches :**
309A-2/3, Galle Road,
Colombo 06, Sri Lanka.
Tel : 2504266
Fax : 4-515775

4A, Hospital Road,
Bus Stand, Jaffna.

60

# பூபாலசிங்கம் புத்தகசாலை

புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி,
இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்

தலைமை :
இல. 340,202 செட்டியார் தெரு,
கொழும்பு 11. இலங்கை.
தொ. பே. : 2422321
தொ. நகல் : 2337313
மின்னஞ்சல் : pbdho@sltnet.lk

கிளை :
இல. 309 A-2/3, காலி வீதி,
கொழும்பு 06. இலங்கை.
தொ. பே. : 2504266
தொ. நகல் : 4-515775

இல. 4 A, ஆஸ்பத்திரி வீதி,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவிழி

மாத இதழ்

[illegible]

AHAVIZHI

[illegible] Avenue, Colombo - 07

[illegible]




அகவிழி இந்த இதழுடன் பன்னிரண்டாவது இதழாகிறது. இந்த நேரத்தில் இதுவரை "அகவிழி" தொடர்ந்து வெளிவரக்காரணமாக இருந்த உள்ளங்களை நினைக்கின்றோம். மற்றும் தமது கட்டுரைகளை மட்டுமல்ல ஆலோசனைகளையும் வழங்கி அகவிழியின் உயிர்ப்புக்கும் உறுதிக்கும் காரணமானவர்களையும் இந்த இடத்தில் நினைவு கூறுகின்றோம்.

தமிழில் அகவிழி போன்ற இதழ் தொடர்ந்து வெளிவந்து தமிழ் நிலைப்பட்ட ஆசிரியர் சமூகத்தின் மத்தியில் புதிய சிந்தனை உருவாக்கத்துக்கும் மனோபாவ மாற்றத்துக்கும், ஆளுமை விருத்திக்கும் உரிய கருவியாகச் செயல்படுவதையே தனது பிரதான இயல்பாகக் கொண்டிருக்கிறது. இதற்கு ஆசிரியர் சமூகம் தொடர்ந்து தமது பூரண ஆதரவை வழங்கி வருவது சந்தோசம் தருகிறது.

இருப்பினும் கூட கல்விச் செயல்பாட்டின் அதன் முதன்மையாளராக இருக்கும் "ஆசிரியர் சமூகம்" தமது எதிர்காலக் கல்வித் தேவைகளைக் கருத்திற் கொண்டு, தாம் உயிர்ப்புமிகு செயற்பாட்டாளராக மாறுவதற்கு அகவிழி எந்தளவிற்கு அவர்களுக்கு உதவியுள்ளது என்பது பெரும் கேள்வியாகவே உள்ளது.

அகவிழி வெறுமனே வெளிவர வேண்டும் என்ற நோக்கில் மட்டும் வெளிவரவில்லை. இன்றைய சமூகத் தேவைகள், கல்வித் தேவைகள் எதிர்காலவியல் நோக்கில் கல்வியின் விரிவாக்கம் என, தொடரும் குறிக்கோள்கள் சார்ந்து செயல்வாதத்துக்கு துணை புரியும் விதத்திலேயே வெளிவருகின்றது. இதனை ஈடேற்றும் வகையில் ஆசிரியர்கள் அகவிழியின் கருத்துக்கள் சார்ந்து எதிர்வினைகள் மற்றும் தொடர் உரையாடல்கள் மேற்கொள்வது ஆரோக்கியமாக இருக்கும். சமூகம் சார்ந்த சிந்தனையும் செயலும் தான் சொற்பகரமான மாற்றத்தை விளைவிக்கும் ஆசிரியர்களாகத் திகழ உதவும். ஆகவே அகவிழி ஒவ்வொரு ஆசிரியர்களின் கற்றலின் பரப்பை அகலித்து ஆழப்படுத்தும் பாரிய பணியைக் கொண்டுள்ளது. இதன் மூலம் தான் மாணவர்களது கற்றல் தேடல் சார்ந்த பண்புகளை விருத்தி செய்ய முடியும்.

ஆகவே அகவிழி ஆசிரியர்களுக்கானது. ஆசிரியர்களின் உயிர்ப்புமிகு சிந்தனைக்கும் செயலுக்கும் ஆனது. அதற்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவது ஆசிரியர் ஒவ்வொருவரின் கடமை ஆகும். ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஆரம்பக் கல்வியில் நியாயத்தன்மையும் சமவாய்ப்பும்

**நான்காம் வகுப்பு அடைவுச் சோதனை வெளிக் கொணர்ந்த சில உண்மைகள்.**

கலாநிதி மா. கருணாநிதி
கல்விப்பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

## இலங்கையில் சமகல்வி வாய்ப்பு — பின்னணி

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையமானது (NEREC) 2002 ஆம் ஆண்டில் நான்காண்டுக் கல்வியைப் பூர்த்தி செய்த மாணவரின் அடைவு மட்டம் பற்றிய கணிப்பீடு ஒன்றினைத் தேசிய மட்டத்தில் மேற்கொண்டது. இந்த ஆய்வானது ஆரம்பக் கல்வியில் நிலவும் நியாயத்தன்மை, கல்வியில் சமவாய்ப்பு என்னும் விடயங்கள் பற்றிய சில உண்மைகளை வெளிக்கொணர்ந்துள்ளது.

"எல்லோருக்கும் கல்வி" தொடர்பாக 1931 இல் இலங்கையில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் இலங்கையின் ஆரம்பக் கல்வியிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இத்தகைய மாற்றங்களுக்கு உலகளாவிய ரீதியிலும் உள்நாட்டிலும் "எல்லோருக்கும் கல்வி என்னும் விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கருத்துப் பரிமாற்றங்களும் கொள்கைகளும் அடிப்படையாக அமைந்தன.

எல்லோருக்கும் கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் தொடர்பாக 1931-1948 இடைப்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. இக்காலப்பகுதியில் தொகுதிகள் தோறும் மத்திய பாடசாலைகள் நிறுவப்பட்டமை, நகரமக்கள் மட்டும் அனுபவித்துவந்த இடைநிலைக்கல்வி வாய்ப்புக்களைக் கிராம மக்களும் பெறக்கூடிய வாய்ப்புக்கள் உண்டாதல், கிராமங்களிலுள்ள திறமையான மாணவர்கள் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று மத்தியபாடசாலைகளில் கல்விகற்பதற்கான வாய்ப்பு, கல்வி முறையின் சகல நிலைகளிலும் இலவசக் கல்வியின் அறிமுகம், தாய்மொழிக் கல்வியை அறிமுகப்படுத்தியமை, கலைத்திட்ட உருவாக்கமும் சோதனைகளும் உள்ளூர் மயப்படுத்தப்படுதல் போன்றவை முக்கியமான மாற்றங்களாகக் கருதப்பட்டன.

எல்லோருக்கும் கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் தொடர்பாக 1931 — 1948 இடைப்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. இக்காலப்பகுதியில் தொகுதிகள் தோறும் மத்திய பாடசாலைகள் நிறுவப்பட்டமை நகரமக்கள் மட்டும் அனுபவித்து வந்த இடைநிலைக்கல்வி வாய்ப்புகளைக் கிராம மக்களும் பெறக்கூடிய வாய்ப்புக்கள் உண்டாதல். கிராமங்களிலுள்ள திறமையான மாணவர்கள் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று மத்திய பாடசாலைகளில் கல்விகற்பதற்கான வாய்ப்பு, கல்வி முறையின் சகல நிலைகளிலும் இலவசக் கல்வியின் அறிமுகம், தாய்மொழிக் கல்வியை அறிமுகப்படுத்தியமை, கலைத்திட்ட உருவாக்கமும் சோதனைகளும் உள்ளூர் மயப்படுத்தப்படுதல் போன்றவை முக்கியமான மாற்றங்களாகக் கருதப்பட்டன.

இலங்கையிலே எழுத்தறிவின்மையை முழுமையாக நீக்குதல், சகல நிலையிலும் எல்லோருக்கும் கல்வி வாய்ப்புக்களை உறுதி செய்தல் என்ற விடயங்கள் பற்றி 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் 27 (2) பிரிவு வலியுறுத்தியிருந்தது. ஐக்கியநாடுகள் சபையின் பொதுச்சபை 1989 இல் சிறுவர் உரிமை பற்றிய சமவாயத்தினை உருவாக்கிய வேளையில் அதன் 28 ஆம் 29ஆம் பிரிவுகள் மூலம் சிறுவரின் கல்வி உரிமைக்கு அழுத்தம் கொடுத்திருந்தது. மேலும் ஆரம்பக் கல்வி கட்டாயமானது. அக்கல்வி எல்லோருக்கும் இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டது. ஐ.நா சிறுவர் உரிமை பற்றிய சமவாயத்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரனைத் தொடர்ந்து இலங்கையிலும் பல மாற்றங்கள் உருவாவதற்கான திட்டங்கள் தோன்றின. 1990 இல் தாய்லாந்தில் நடைபெற்ற ஜொம்ரியன் மகாநாட்டில் "எல்லோரும் கல்வி பெறும் உரிமையுடையவர்கள்" என்ற மனித உரிமைப் பிரகடனம் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து எல்லோருக்கும் கல்விக்கான உலகப் பிரகடனமானது அடிப்படைக் கற்றல் தேவைகளை நிறைவு செய்வது பற்றி வலியுறுத்திக் கூறியதுடன் அத்தியாவசியக் கற்றலுக்குரிய அடிப்படை விடயங்களான எழுத்தறிவு, வாய்மொழி விளக்கம், எண்ணறிவு, பிரச்சினை தீர்த்தல், பெறுமானங்கள் மற்றும் மனப்பாங்கு விருத்தி பற்றியும் குறிப்பிட்டிருந்தது.

1991 இல் இலங்கையில் உருவாக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழு, கல்வியில் சமவாய்ப்பினை வழங்கும் நோக்குடன் 1995இல் கல்வியின் தராதர மேம்பாடு பற்றிச் சிந்தித்து ஆரம்பக் கல்வியில் பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது. ஐந்து ஆண்டுகள் ஆரம்பக் கல்வி பயிலும் பிள்ளை அறிவு, நடைமுறை வாழ்க்கைத் திறன்கள், கட்டுப்பாடு, ஒழுக்கம், பேச்சாற்றல் என்ற விடயங்களில் விருத்தியடைந்தவர்களாக விளங்குதல் வேண்டும் என்ற இலக்கினைக் கல்விச் சீர்திருத்தத்தின் மூலம் வலியுறுத்தியது. மேலும் தேர்ச்சி அடிப்படைக் கலைத்திட்டத்தின் ஊடாக தொடர்பாடல், சமயமும் ஒழுக்கமும், ஓய்வு நேரப் பயன்பாடு, சுற்றாடல் மற்றும் கற்பதற்குக் கற்றல் ஆகிய தேர்ச்சிகளை அடைதல் என்ற எதிர்பார்ப்பையும் கொண்டிருந்தது.

மேற்கூறிய அறிக்கைகளின் செல்வாக்கு இலங்கையிலும் பல மாற்றங்கள் தோன்றுவதற்கு வழிகோலின. 1991 இல் இலங்கையில் உருவாக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழு, கல்வியில் சமவாய்ப்பினை வழங்கும் நோக்குடன் 1995இல் கல்வியின் தராதரமேம்பாடு பற்றிச் சிந்தித்து ஆரம்பக் கல்வியில் பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது. ஐந்து ஆண்டுகள் ஆரம்பக் கல்வியைப் பயிலும் பிள்ளை அறிவு, நடைமுறை வாழ்க்கைத் திறன்கள், கட்டுப்பாடு, ஒழுக்கம், பேச்சாற்றல் என்ற விடயங்களில் விருத்தியடைந்தவர்களாக விளங்குதல் வேண்டும் என்ற இலக்கினைக் கல்விச் சீர்திருத்தத்தின் மூலம் வலியுறுத்தியது. மேலும் தேர்ச்சி அடிப்படைக் கலைத்திட்டத்தின் ஊடாக தொடர்பாடல், சமயமும் ஒழுக்கமும், ஓய்வுநேரப் பயன்பாடு, சுற்றாடல் மற்றும் கற்பதற்குக் கற்றல் ஆகிய தேர்ச்சிகளை அடைதல் என்ற எதிர்பார்ப்பையும் கொண்டிருந்தது.

## அடைவுச் சோதனைகள்

இலங்கையில் சகலருக்கும் கல்வி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் நியாயத்தன்மையைப் பேணி வந்துள்ளனவா என்பதனை அறியும் நோக்கில் பல்வேறு அடைவுச் சோதனைகள் நடத்தப்பட்டன. ஆரம்பக் கல்வி தொடர்பான புதிய கல்விச் சீர்திருத்தம் (1998) அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் எல்லோருக்கும் கல்வி பற்றிய நிலைமையை அறியும் நோக்கில் மாணவர் அடைவுபற்றிய மூன்று மதிப்பீடுகள் இடம்பெற்றன. இவற்றுள் முதலாவது மதிப்பீடானது 1995 இல் ஐந்தாம்தர மாணவர்களையும், இரண்டாவது மதிப்பீடு 1996 இல் மூன்றாம் வகுப்பு மாணவர்களையும், மூன்றாவது மதிப்பீடு 1998இல் மீண்டும் ஐந்தாம் தர மாணவர்களையும் அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டன. இத்தகைய மதிப்பீடுகள் ஆரம்பக் கல்வியானது திருப்திகரமாக இல்லையென்று எடுத்துக்காட்டியதுடன், எழுத்தறிவு, எண்ணறிவு மற்றும் வாழ்க்கைத் தேர்ச்சிகளில் மாணவர்கள் செயலாற்றல்கள் குறைவாக இருந்தன என்றும் தெரியவந்தது. இத்தகைய நிலை, மாவட்டம் மற்றும் பாடசாலை வகையின் அடிப்படையில் வேறுபட்டிருந்தன என்றும் எடுத்துக்காட்டின. இம்மூன்று சோதனைகளிலும் மாணவர் செயலாற்றல்கள் அமைந்த விதத்தினை அட்டவணை 1 விளக்குகிறது.

இங்கு மதிப்பிடப்பட்ட விடயங்களில் மாணவரின் அடைவுகள் சராசரி நிலைக்கும் கீழேயே உள்ளன என்பதனை அட்டவணை எடுத்துக் காட்டுகின்றது. இத்தகைய அடைவுச் சோதனைகளின் தொடர்ச்சியாகவே NEREC நடத்திய நான்காம் வகுப்புச் சோதனையும் அமைந்துள்ளது. புதிய கல்விச் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு நான்கு ஆண்டுகளின் பின்னர் மாணவரின் அடைவு அமைந்துள்ள விதத்தினைக் கணிப்பிடுதல் இதன் அடிப்படை நோக்கமாக இருந்தது. ஆயினும் இச் சோதனை பின்வரும் குறிப்பான நோக்கங்களையும் கொண்டிருந்தது.

1. ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்யும் 4ஆம் வகுப்பு மாணவரின் முதல் மொழி, இரண்டாம்மொழி (ஆங்கிலம்) மற்றும் கணிதத் தேர்ச்சிகளை அளவிடுதலும் தரப்படுத்தலும்.

அட்டவணை 1

மூன்றாம், ஐந்தாம் தர அடைவுப் பரீட்சைகளில் மாணவர் செயலாற்றல்கள்

| தரம் | எழுத்தறிவு | எண்ணறிவு | வாழ்க்கைத்தேர்ச்சி |
|---|---|---|---|
| 5ஆம் தரம் (1995) | 61.8 % | 45.1 % | 26.7% |
| 3ஆம் தரம் (1996) | 62.2 % | 53.2 % | 71.2% |
| 5ஆம் தரம் (1998) | 61.3% | 50.3% | 55.0% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஆரம்பக் கல்வியின் முதன்மை நிலை II இனைப் பூர்த்தி செய்யும் மாணவரின் அடைவு மட்டத்தை அளவிடுதல்.

3. மாகாணம், மாவட்டம், பால்நிலை, பாடசாலைவகை, கல்விமொழி, பாடசாலை அமைவிடம் ஆகிய மாறிகளை அடிப்படையாகக் கொண்டு மாணவரின் அடைவினைப் பகுப்பாய்வு செய்தல்.

4. மாணவரின் அடைவில் ஆசிரியர், பாடசாலை மற்றும் பெற்றோர் போன்ற காரணிகளின் பாதிப்பினை அறிதல்.

5. கல்வித் திட்டமிடுவோர், கலைத்திட்ட அபிவிருத்தியாளர் பயன்பெறுவோர் ஆகியோருக்கான பின்னூட்டல்களை வழங்குதல்.

**ஆரம்பக் கல்வி தொடர்பான புதிய கல்விச் சீர்திருத்தம் (1998) அறிமுகப் படுத்துவதற்கு முன்னர் எல்லோருக்கும் கல்வி பற்றிய நிலைமையை அறியும் நோக்கில் மாணவர் அடைவு பற்றிய மூன்று மதிப்பீடுகள் இடம் பெற்றன. இவற்றுள் முதலாவது மதிப்பீடானது 1995 இல் ஐந்தாம்தர மாணவர்களையும், இரண்டாவது மதிப்பீடு 1996 இல் மூன்றாம் வகுப்பு மாணவர்களையும், மூன்றாவது மதிப்பீடு 1998இல் மீண்டும் ஐந்தாம் தர மாணவர்களையும் அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டன.**

## பரீட்சைக்கெனத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர் தொகை

நாடளாவிய ரீதியில் 2002ஆம் ஆண்டில் நான்காம் வகுப்பில் (அரசாங்கப் பாடசாலைகளில்) கல்வி கற்ற 343179 மாணவரில் இருந்து எழுமாற்று அடிப்படையில் 16383 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். மாணவர் தெரிவின் போது 9 மாகாணங்களும் 25 மாவட்டங்களும் 92 கல்வி வலயங்களும் கவனத்தில் எடுக்கப்பட்டன. மொத்தமாக 939 பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டபொழுது அத்தெரிவின் பரம்பலானது 1AB பாடசாலைகளிலிருந்து 15.8%மும், 1C பாடசாலையிலிருந்து29.0% மும் இரண்டாம் வகைப் பாடசாலைகளிலிருந்து 32.2% மும் மற்றும் மூன்றாம் வகைப் பாடசாலை களிலிருந்து 19.8% மும் என்ற வகையில் அமைந்திருந்தது. மொழிவாரியாகப் பார்க்கும் பொழுது 30.7% தமிழ் மொழிமூல மாணவரும் (5028பேர்) 69.3% சிங்கள மொழி மூல மாணவரும் (11355) பரீட்சைக்குத் தோற்றினர். பால்நிலையின் அடிப்படையில் 49.6% (8118 பேர் ) பெண்களும் 50.4% (8265 பேர்) ஆண்களும் இடம்பெற்றனர். கிராமப்புறப் பாடசாலைகளிலிருந்து 81.0% மும் நகர்ப்புற பாடசாலைகளிலிருந்து 19%மும் தோற்றினர்.

இந்த அடைவுச் சோதனையானது முதல்மொழி, ஆங்கில மொழி, கணிதம் ஆகிய பாடங்களை உள்ளடக்கியது. மொழிகளிலே சொற்களஞ்சியம், கிரகித்தல், இலக்கணம், எழுத்து ஆகிய திறன்களும் கணிதத்தில் எண்ணக்கருக்கள் விதிமுறைகள் மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆகிய திறன்களும் இடம்பெற்றன. ஒவ்வொரு சோதனையும் 40 வினாக்களைக் கொண்டிருந்ததுடன் அவற்றுக்குரிய நேரமும் முறையே மொழிகளுக்கு 45 நிமிடமும் கணிதத்திற்கு ஒரு மணித்தியாலமும் ஒதுக்கப்பட்டிருந்தது.

நான்காம் வகுப்புச் சோதனைகள் மாணவரின் பாண்டித்தியநிலையை அளவிடுதலை நோக்கமாகக் கொண்டவை. பொருத்தமான வினா உருப்படிகளைத் தெரிவு செய்யும் வகையில் முதலாவது கட்டத்தில் ஒவ்வொன்றும் 40 வினாக்கள் கொண்ட 10 சோதனைகள் அமைக்கப்பட்டன. அவற்றினை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட முன்னோடிச் சோதனையிலிருந்து 02 வினாத்தாள்கள் அமைக்கப்பட்டு அவை மீண்டும் பரீட்சிக்கப்பட்டு, அதிலிருந்து 0.65 - 0.98 வரை சுட்டிகளைக் கொண்ட உருப்படிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இறுதிச் சோதனை உருவாக்கப்பட்டது. இச் சோதனையை அமைக்கும் பொழுது நான்காம் வகுப்பு முடிவில் மாணவர்கள் அடைந்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட திறன்களும் உள்ளடக்கப்பட்டன. சோதனை உருப்படிகளின் ஒழுங்கமைப்பு இலகுவானதிலிருந்து கடினமானது என்ற முறையில் இடம்பெற்றது.

## மாணவர் அடைவுகள் பற்றிய ஒப்பீடு

நான்காம் வகுப்புச் சோதனையில் மாணவர் பெறுபேறுகள் பற்றிய ஒப்பீடுகள் மூன்று அணுகுமுறைகளின் அடிப்படையாகக் கொண்டவை.

1. சராசரிகளின் அடிப்படையிலான ஒப்பீடு.
2. நியதிகளின் அடிப்படையிலான ஒப்பீடு.
3. பெறுபேறுகளின் நிலை.

முதலாவதாக, பாடங்களில் சராசரியையும் பாண்டித்தியநிலை அடைந்தோரின் சராசரியையும் ஒப்பிட்ட பொழுது தேசிய மட்டத்திலான முடிவுகள் அட்டவணை 2ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2**

| பாடம் | சராசரி | பாண்டித்திய நிலை |
|---|---|---|
| முதல் மொழி | 62.3% | 36.5% |
| கணிதம் | 60.8% | 37.9% |
| ஆங்கிலம் | 41.9% | 09.5% |

இங்கு எடுத்துக்காட்டப்பட்ட விபரங்களிலிருந்து ஆங்கில பாடத்தின் பெறுபேறுகள் ஏனைய இரண்டு பாடங்களிலும் பார்க்க மிகக் குறைந்த நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை 3**
**மூன்று பாடங்களிலும் பாண்டித்திய நிலையை அடைந்தோர் வீதம்.**

| மாகாணம் | இலக்கு | முதல்மொழி | நிலை | கணிதம் | நிலை | ஆங்கிலம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 80% | 53.5% | 1 | 52.3% | 1 | 19.5% | 1 |
| தென் | 80% | 42.6% | 2 | 44.2% | 2 | 12.7% | 2 |
| வடமேல் | 80% | 42.2% | 3 | 43.1% | 3 | 8.5% | 3 |
| சப்ரகமுவ | 80% | 40.2% | 4 | 42.7% | 4 | 10.2% | 4 |
| வடமத்தி | 80% | 35.6% | 5 | 40.6% | 5 | 8.1% | 5 |
| ஊவா | 80% | 33.9% | 6 | 33.0% | 6 | 7.6% | 6 |
| மத்திய | 80% | 33.8% | 7 | 35.3% | 7 | 8.4% | 7 |
| கிழக்கு | 80% | 23.7% | 8 | 25.2% | 8 | 5.6% | 8 |
| வடக்கு | 80% | 22.7% | 9 | 25.1% | 9 | 5.0% | 9 |

வரையறுக்கப்பட்ட அடிப்படைக் கற்றல் தேர்ச்சிகளை மாணவர்கள் அடைந்துள்ளமையை இனங்காணுதல் வேண்டுமென எடுத்துக் கூறியுள்ளது. இவ்வடிப்படையில் பார்க்கும் பொழுது, முதல்மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று பாடங்களிலும் பாண்டித்திய நிலையை அடைந்தோர் பற்றிய விபரங்கள் பின்வரும் அட்டவணை 3இல் தரப்பட்டுள்ளன.

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் பாண்டித்தியம் அடைதல் பற்றிய மூன்று முக்கியமான செல்நெறிகளை எடுத்துக்காட்டியுள்ளன.

1. முதல் மொழி கணிதம் ஆகிய பாடங்களில் அடைவு ஆங்கில மொழியிலும் பார்க்க உயர்வானது.
2. மூன்று பாடங்களிலும் பாண்டித்திய நிலையை அடைந்தோர் சதவீதம் குறைவாக உள்ளது.
3. முதல் மொழி மற்றும் கணிதபாட அடைவில் ஒத்தபோக்கு நிலவுதல்.

உள்ளன. கணிதம் மற்றும் முதல்மொழி ஆகிய பாடங்களில் சராசரிப்புள்ளிகள் மிக அண்மியவையாகக் காணப்படுகின்றன. மேலும் கணிதம் முதல்மொழி ஆகியவற்றுக்கான இணைவுக் குணகமும் மிக உயர்வாக (0.87) உள்ளது.

ஜொம்ரின் மகாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி அடிப்படைக் கல்விக் காலத்தின் போது மாணவர்கள் குறிக்கும் பாடத்தில் பாண்டித்திய நிலையை அடைந்தவர்களாகக் கருதப்படுவதற்கு 80.0% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். இலங்கையின் தேசிய கணிப்பீட்டு வழிகாட்டியும் (National Assessment Guide) இது பற்றிக் குறிப்பிடும்பொழுது ஆரம்பக்கல்விப் பாடசாலைக்காலத்தில் தேசியமட்டத்தில்

பொதுவாக நோக்கும் பொழுது எல்லா மாகாணங்களுக்கு இடையிலும் அடைவுகளில் வேறுபாடுகள் நிலவியபோதிலும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் முதல் மொழி சார்ந்த அடைவுகள் மிகக் கீழ்நிலையில் இருந்தமை கவனத்திற் கொள்ளவேண்டிய விடயமாகும். முதல்மொழியின் அடைவு குறைகின்றபொழுது கணிதபாட அடைவும் குறைகின்றது என்பதைப் புள்ளிவிபரம் தெளிவுபடுத்தியுள்ளது.

**அட்டவணை 4**
**தமிழ் சிங்கள மொழி மாணவரின் அடைவுகள் (சராசரிப் பெறுமதி)**

| மாகாணம் | முதல் மொழி | | கணிதம் | | ஆங்கிலம் | |
|---|---|---|---|---|---|---|
| | சி | த | சி | த | சி | த |
| மேல் | 67.4% | 60.9% | 66.9% | 56.3% | 42.6% | 42.5% |
| தென் | 65.3% | 43.6% | 65.0% | 44.5% | 44.0% | 42.3% |
| வடமேல் | 67.4% | 60.9% | 66.9% | 56.3% | 42.6% | 42.5% |
| சப்ரகமுவ | 66.5% | 50.2% | 65.3% | 61.6% | 43.4% | 36.1% |
| வடமத்தி | 63.5% | 62.7% | 65.4% | 48.1% | 41.3% | 39.9% |
| ஊவா | 61.9% | 49.2% | 61.0% | 42.7% | 40.1% | 35.4% |
| மத்திய | 65.7% | 51.7% | 64.8% | 47.0% | 43.2% | 38.2% |
| கிழக்கு | 57.3% | 52.9% | 54.7% | 49.2% | 32.8% | 36.5% |
| வடக்கு | ------- | 54.4% | ------- | 50.3% | -------- | 35.6% |

இரண்டாவதாக, எல்லா மாகாணங்களிலும் தமிழ் மொழி மூலம் கற்கும் மாணவரின் அடைவுகளைச் சிங்கள மொழிமூல அடைவுகளுடன் ஒப்பிடும்பொழுது இரண்டு மொழிமூல மாணவருக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் நிலவுகின்றன. பின்வரும் அட்டவணை 4 இதனை நன்கு தெளிவுபடுத்தியுள்ளது.

மேல் மாகாணம், வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூல மாணவரின் அடைவுகள் பற்றிய சராசரிப் பெறுமானங்களில் ஏறக்குறைய ஒத்தபோக்கு நிலவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய மாகாணங்களில் வேறுபாடுகள் பாரிய இடைவெளியுடன் கூடியவையாகக் காணப்படுகின்றன.

இந்த ஆய்வுக்கெனத் தெரிவுசெய்யப்பட்ட மாதிரியில் 69.3% சிங்கள மொழிமூல மாணவரும் 30.7% தமிழ்மொழிமூல மாணவரும் அடங்குவர் பொதுவான நோக்கில் இரண்டு மொழி மூலங்களைச் சேர்ந்த மாணவர்களும் எல்லாப்பாடங்களிலும் அடைவில் வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் பாண்டித்திய நிலையை அடைந்தோர் தொகை சிங்கள மொழிமூலத்தில் 32.9% மாகவும் தமிழ் மொழிமூலத்தில் 17.4% மாகவும் இருந்தது. இங்கு இரண்டு மொழிமூல மாணவரிடையேயும் 15.5% அளவில் வேறுபாடுகள் காணப்பட்டன.

தமிழ் மொழிமூல மாணவரின் பரம்பல் அடிப்படையில் வடமாகாணம், கிழக்கு மாகாணம், பெருந்தோட்டப் பிரதேசங்கள் மற்றும் "ஏனைய பிரதேசங்கள்" என நான்கு பிரதேசங்களை இனங்காணலாம். முதல்மொழி தொடர்பான அடைவுகளில் முதல் மூன்று பிரதேசங்களிலும் பார்க்க "ஏனைய பிரதேசப்" பாடசாலைகளின் சராசரிப் பெறுமானம் கூடுதலாக உள்ளது. இரண்டாம் மூன்றாம் இடங்களை முறையே வடக்கு கிழக்கு மாகாணங்களும் பெருந்தோட்டப் பிரதேசங்கள் நான்காம் இடத்தையும் பெற்றுள்ளன. ஏனைய இரண்டு பாடங்களிலும் அடைவுகளின் பெறுமானங்கள் ஏறக்குறைய ஒத்ததன்மையினவாக உள்ளன.

நான்காம் வகுப்பு மாணவரின் அடைவு பற்றிய கணிப்பீடுகளின் முடிவுகள் இலங்கையில் ஆரம்பக் கல்வியில் நியாயத்தன்மையும் கல்விச்சமவாய்ப்பும் எவ்வளவு தூரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. என்பதனை உணர்த்தியுள்ளன. பாடசாலை வகையின் அடிப்படையில் 1AB பாடசாலைகளின் வினையாற்றல்கள் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றன. 1C மற்றும் மூன்றாம் வகைப்பாடசாலைகளின் வினையாற்றல்கள் ஏறக்குறை ஒத்ததன்மையினவாக உள்ளன. இரண்டாம் வகைப் பாடசாலைகள் மிகவும் கீழ்நிலையில் இருக்கின்றன. இதிலிருந்து 1AB பாடசாலைகள் ஆரம்பக் கல்விக்கான வாய்ப்புக்களைக் கூடுதலாகவும் 1C மற்றும் மூன்றாம் வகைப் பாடசாலைகள் ஓரளவுக்கு இடைத்தரமான வாய்ப்புகளையும், இரண்டாம் வகைப் பாடசாலைகள் மிகக் குறைந்த வாய்ப்புக்களையும் வழங்குகின்றன எனலாம். ஏனைய பாடசாலைகளிலும் பார்க்க இரண்டாம் வகைப் பாடசாலைகளின் வினையாற்றல்கள் குறைந்து காணப்பட்டமைக்குப் பின்வரும் காரணிகள் செல்வாக்குச் செலுத்தின.

தமிழ் மொழிமூல மாணவரின் பரம்பல் அடைப்படையில் வடமாகாணம், கிழக்கு மாகாணம், பெருந்தோட்டப் பிரதேசங்கள் மற்றும் "ஏனைய பிரதேசங்கள்" என நான்கு பிரதேசங்களை இனங்காணலாம். முதல்மொழி தொடர்பான அடைவுகளில் முதல் மூன்று பிரதேசங்களிலும் பார்க்க "ஏனைய பிரதேசப்" பாடசாலைகளின் சராசரிப் பெறுமானம் கூடுதலாக உள்ளது. இரண்டாம் மூன்றாம் இடங்களை முறையே வடக்கு கிழக்கு மாகாணங்களும் பெருந்தோட்டப் பிரதேசங்கள் நான்காம் இடத்தையும் பெற்றுள்ளன. ஏனைய இரண்டு பாடங்களிலும் அடைவுகளின் பெறுமானங்கள் ஏறக்குறைய ஒத்த தன்மையினவாக உள்ளன.

1. பாடசாலைகளில் மாணவர் தொகை வீழ்ச்சியடைந்து சென்றமை. ஆசிரியர் மாணவர் தொகையில் சமநிலை காணப்படவில்லை.
2. இரண்டாம் வகைப் பாடசாலைகள் அநேகமானவை பின்தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ளன. இப்பாடசாலைகளைச் சென்றடைதல் கடினமானது.
3. பாடசாலைகளின் அடிப்படை வசதிகள், வகுப்பறை வசதிகள் கற்பித்தல் சாதனங்கள் போதாது.
4. தளபாடம், மின்சாரம், மலசலகூட வசதிகள் போதாது.
5. இலவச பாடநூல் விநியோகத்தில் காலதாமதம்.
6. அநேகமான பாடசாலைகளில் பல்வகுப்புக் கற்பித்தல் நடைபெறுதல்.
7. சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் இப் பாடசாலைகளுக்குச் செல்லுதல் குறைவு.

பால்நிலையின் அடிப்படையில் பார்க்கும் பொழுது இங்கு தெரிவு செய்யப்பட்ட மாதிரியின் அடிப்டையில் 50.4% ஆண்களும் 49.6% பெண்களும் இடம்பெற்றுள்ளனர். சகல பாடங்களின் அடைவுகளிலும் பால்நிலை வேறுபாடுகள் பொருண்மையான மட்டத்தில் காணப்படுகின்றன. பாண்டித்தியநிலையை அடைந்துள்ளோர் விகிதசாரத்தில் பெண்கள் 29,8% ஆண்கள் 26.2% ஆகும். இருபாலருக்கும் இடையேயான வேறுபாடு 3.6% மட்டுமே முன்னர் நடைபெற்ற ஓர் ஆராய்ச்சியின்படி பால்நிலை அடிப்படையில் வேறுபாடுகள் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டாலும் நான்காம் வகுப்புப் பரீட்சையில் பால்நிலை வேறுபாடுகள் உள்ளமை அறியப்பட்டுள்ளது.

## முடிவுரை

மேற்கூறிய அவதானங்களின் அடிப்படையில் இலங்கையின் ஆரம்பக் கல்வியில் நியாயத்தன்மை மற்றும் கல்விச் சமவாய்ப்பு என்பனவற்றை உறுதிப்படுத்துவதன் பொருட்டு ஆரம்பக்கல்வி வழங்கப்படும் முறைகளில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. தேசிய மட்டத்தில் மாணவரின் அடைவுகள் குறைவாக இருப்பதற்கான காரணங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்ந்தறிந்து பரிகார நடவடிக்கைகளுக்கான செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இதுவரையில் மாகாணமட்டத்திலும் தரவுகள் ஒழுங்காகப் பேணப்படுவதுடன் அவை அடிக்கடி இற்றைப்படுத்தலும் வரவேற்கத்தக்கது. பாடசாலைகளைப் பொறுத்தவரையில் அவை தாமிட்ட முறையில் மாணவரின் அடைவுகளில் கவனம் செலுத்துவதுடன் அடைவினை மேம்படுத்தும் செயற்பாடுகளில் ஊக்கங்காட்டுதல் வேண்டும்.

கற்றல் விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு கற்பித்தலுக்கும் பரிகாரக் கற்பித்தலுக்கும் கொடுக்கப்படுதல் வேண்டும். குறிப்பாக முதல்மொழி, கணிதம் ஆகிய பாடங்களில் மாணவர் அடைவுகளை மேம்படுத்தும் விதத்தில் இவை அமைதல் வேண்டும்.

> இலங்கையின் ஆரம்பக் கல்வியில் நியமத்தன்மை, சமத்துவம், கல்வி ஏற்பாட்டில் வினைத்திறன் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதன் பொருட்டு ஆரம்பக் கல்வி வழங்கப்படும் முறைகளில் தரமான செழுமை வேண்டப்படுகிறது. தேசிய மட்டத்தில் மாணவரின் அடைவுகள் குறைவாக இருப்பதற்கான காரணங்களை ஆய்ந்தறிந்து பரிகார நடவடிக்கைகளுக்கான செயற்றிட்டத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இதனையிட்டு மாகாண மட்டத்திலும் தரவுகள் ஒழுங்காகப் பேணப்படுவதுடன் அவை அடிக்கடி இற்றைநிலைப் படுத்தலும் வரவேற்கத்தக்கது.

மாகாண, மாவட்ட மற்றும் வலய மட்டங்களில் அடைவுகளுக்கான இலக்குகள் உருவாக்கப்பட்டு அதற்குரிய உபாயங்கள் வகுக்கப்பட்டு ஆசிரியர்களுக்குப் பயிற்சியும், சாதன அறிவுறுத்தல்களும் வழங்கப்படுதல் வேண்டும். அதிலிருந்து மேலதிக விளைத்திறன்மிக்க கண்காணிப்பும் மேற்பார்வை ஒழுங்குகளும் இடம்பெறுதல் வேண்டும். பாடசாலைத் தரநிலைக் கணிப்பீட்டினை வலுவூட்டும் நடவடிக்கையாகக் கொள்ளலாம். இவற்றின் தரவு மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும் பயனுடையது.

நாடளாவிய ரீதியில் இரண்டாம் வகைப் பாடசாலைகளில் காணப்படும் குறைகளைத் தீர்ப்பதற்கு தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதிகமான இரண்டாம் வகைப் பாடசாலைகளில் இடம்பெறும் பிரச்சினைகள் ஏலவே குறிப்பிடப்பட்டுள்ளன. இவை நிவர்த்தி செய்யப்படுவதுடன் இப்பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியரின் மனப்பான்மைகளிலும் மாற்றம் அவசியம். இரண்டாம் வகைப் பாடசாலைகள் அமைந்துள்ள பின்தங்கிய பிரதேசங்களில் ஆசிரியர்கள் போதிய காலம் பணியாற்ற ஊக்குவித்தல் பயன்தரும்.

இந்த ஆய்வின் மூலம் வெளிவந்த மிகமுக்கிய விடயம் கல்விமொழியின் அடிப்படையில் அடைவுகளில் காணப்படும் பாரிய வேறுபாடுகளாகும். தமிழ் மொழிமூலம் கற்கும் மாணவர்கள் அதிகமாக உள்ள மாவட்டங்களில் இனங்காணப்பட்ட அடைவுக் கல்வி வலயங்களில் விசேட செயற்றிட்டத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுத் தீவிர கண்காணிப்புடன் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் புதிய சீர்திருத்தங்களுக்கு ஏற்ற வகையில் கற்பித்தல் முறைகளில் பயிற்சி, கற்றல் - கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்துதல், அடைவுச் சோதனைகளை அமைக்கும் முறைகள், கணிப்பீட்டு நுட்பங்கள் போன்ற விடயங்களில் குறுகிய கால விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் மேற்கொள்வதுடன் மாணவர் முன்னேற்றங்களைப் பெற்றோருக்கு அறிவிக்கப்படுதலும் நன்மை தரும்.

(இக்கட்டுரையானது கொழும்பு பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட ஆராய்ச்சி அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.)

❑

---

> எழுத்து நவீன தமிழிலக்கிய ஆய்வில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்திருக்கும் நான் அதன் ஊற்றுக்களையும் மூலங்களையும் தேடிப் பார்க்கும் நோக்கில் செவ்வியல் இலக்கியத்துப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே அரும்பி மலர்ந்த [illegible] தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டிலே அரும்பிய சில செயல்நெறிகளும் கருத்தோட்டங்களும் இருபதாம் நூற்றாண்டிலே மலர்ச்சி பெற்று மேலும் செழுமையடைவதைக் கண்டு மகிழ்ந்தேன்.
>
> கலாநிதி. க. கைலாசபதி
>
> [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொதுக்கல்விச் செயற்பாடுகளில்

# பாடசாலை அதிபர்களது வகிபாகம்

## யாழ்ப்பாண மாவட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு பார்வை

இலங்கையின் கல்வி வரலாறு அன்றாடத் தன்மையினையே அதிகம் உள்ளடக்கியதாகும். காலத்திற்குக் காலம் தேசியரீதியில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மையமாகக் கொண்டே இலங்கையின் கல்விக் கொள்கைகளும் செயற்பாடுகளும் மாற்றமடைந்து வந்துள்ளதனை அவதானிக்கலாம். இம்மாற்றங்கள் அரசியல் சுழிகாற்றுக்களால் மொழி மற்றும் இனப் பாகுபாட்டு நெடியுடன் அரங்கேறும் நடைமுறைகள் இன்னமும் தொடர்ந்தவண்ணமேயுள்ளன. உண்மையான, நீடித்து நிலைக்கக்கூடிய கல்விச் செயற்பாடுகளுக்கான சிந்தனைகள் அவ்வப்போது முகிழ்ந்தெழுந்தபோதிலும் நடைமுறையில் அவை தொடர்ச்சியற்ற துண்டங்களாக இடைநடுவில் மறைந்துபோயின. கல்வியினூடாக நிலையான அபிவிருத்தியினையும் சமூக அபிவிருத்தியினையும் பன்மைத்துவக் கலாசாரப் பண்புகளையும் ஒட்டுமொத்த இனங்களிடம் தேசியம் பற்றிய உணர்வினையும் இவற்றிற்கான வகைகூறலினையும் வளர்த்தெடுப்பதற்கு இலங்கையின் கல்வி தவறிவிட்டது.

இலங்கையின்கல்விவரலாற்றில்மிக்க முன்னேற்றகரமான அம்சமாகக் கொள்ளமுறைப்படும்' 'அனைவர்க்கும் இலவசக் கல்வி'' க்கான வாய்ப்பானது கல்வியின் ஓர் அடிப்படை அம்சமான எழுத வாசிக்கத் தெரிந்தோர் வீதத்தின் உகப்பான ஓர் உயர்நிலைக்கு (91%) கொண்டுவந்தமையோடு மக்களுக்கு மகிழ்ச்சிகரமான வாழ்வளிக்கும் தனது பணியினை நிறைவேற்றத் தவறிவிட்டது. எதிர்காலவியல் தொடர்பான பண்புகள் இலங்கையின் கல்வியில் இல்லாமல் போனமையும், குறுகிய அரசியல் மயப்பட்ட கல்விச் செயற்பாடுகளும் அரசியல் தலைவர்களிடமும் அரசியல் கட்சிகளிடமும் வகைகூறும் கடப்பாட்டுப் பண்புகள் காணப்படாமையும் கல்வியை அதன் உரிய இலக்கை எய்தவிடாது தடுத்துள்ளன.

இலங்கையின் கல்வி வரலாற்றில் மிக்க முன்னேற்றகரமான அம்சமாகக்கொள்ள முறைப்படும் "அனைவர்க்கும் இலவசக் கல்வி" க்கான வாய்ப்பானது கல்வியின் ஓர் அடிப்படை அம்சமான எழுத வாசிக்கத் தெரிந்தோர் வீதத்தின் உகப்பான ஓர் உயர்நிலைக்கு (91%) கொண்டு வந்தமையோடு மக்களுக்கு மகிழ்ச்சி கரமான வாழ்வளிக்கும் தனது பணியினை நிறைவேற்றத் தவறி விட்டது. எதிர்காலவியல் தொடர்பான பண்புகள் இலங்கையின் கல்வியில் இல்லாமல் போனமையும், குறுகிய அரசியல் மயப்பட்ட கல்விச் செயற்பாடுகளும் அரசியல் தலைவர் களிடமும் அரசியல் கட்சிகளிடமும் வகைகூறும் கடப்பாட்டுப் பண்புகள் காணப்படாமையும் கல்வியை அதன் உரிய இலக்கை எய்தவிடாது தடுத்துள்ளன.

திரு.செ.சேதுராஜா
அதிபர்
யா /நெல்லியடி ம.ம.வி

இலங்கையின் கல்வியில் வரலாற்று ரீதியாகக் காணப்பட்டு வந்த மாசுக்கள் (Polutions) கல்வியில் இரட்டைத் தன்மையினை வளர்த்து வலுப்பெறச்செய்துள்ளன. இலங்கையின் கல்வியில் ஆரோக்கி யமான, முற்போக்கான, விஞ்ஞானரீதியான புரட்சியேற்படாததன் விளைவாக கல்வியில் சமவாய்ப்பு (Equity) என்பது பிறந்தவுடன் மரணித்த சிசுப் போலாகிவிட்டதெனலாம். இலவசக் கல்வியால் ஏற்பட்ட ஓர் தாக்கம் ஆரம்ப காலகட்டங்களில் ஓர் சமூகப்பெயர்ச்சியை உண்டுபண்ணிய அளவில் ஓர் நீண்ட கால இடைவெளியை மெதுவாகக் கடந்து மீண்டும் "வசதி படைத்தோருக்கே வளமான கல்வி வாய்ப்பு" என்னும் கட்டத்தில் காலாவதியாகியுள்ளதெனலாம். இந்நிலையில் இலங்கையின் கல்வியானது இன்று பல மாற்றங்களை வேண்டி நிற்பதுடன் அதற்கான முயற்சிகளும் மேற்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வகை ரீதியில் வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகள் | |
|---|---|
| பாடசாலை வகை | எண்ணிக்கை |
| 1AB | 138 |
| 1C | 255 |
| தரம் 2 | 569 |
| தரம் 3 | 1005 |
| **மொத்தம்** | **1967** |

| மாவட்ட ரீதியில் தற்காலிகமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை | |
|---|---|
| மாவட்டம் | மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை |
| யாழ்ப்பாணம் | 74 |
| திருகோணமலை | 22 |
| மன்னார் | 19 |
| மட்டக்களப்பு | 14 |
| முல்லைத்தீவு | 10 |
| வவுனியா | 07 |
| கிளிநொச்சி | 06 |
| அம்பாறை | 04 |
| **மொத்தம்** | **156** |

கொள்ளப்பட்டுவருவதனை அவதானிக்கலாம். இம்மாற்றங்கள் கூட (புதிய கல்வி ஏற்பாடுகள்) பூரணத்துவமற்ற பண்புகளையும் பொருத்தமற்ற செயற்பாடுகளையும் கொண்டவையாக அமைவதுடன் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தவறான கல்விச் செயற்பாடுகளின் விளைவுகளால் பிரதிநிதித்துவ மற்றும் பிரதேச ஏற்றத் தாழ்வுகளையும் கொண்டுள்ளன.

குறிப்பாக இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளின் கல்வி நடவடிக்கைகள் இலங்கையின் ஏனைய பகுதிகளைவிடப் பின்தங்கிய நிலையிலிருப்பதுடன் பாரதூரமான பாதிப்புகளையும் அனுபவித்து வருகின்றன. இந்நிலையின் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக யுத்தத்தின் பிடியிலிருந்துவரும் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்விப்புலத்தின் மீது கவிந்துள்ள அழுத்தங்களையும் அதற்கான பாடசாலையின் கல்விக்கட்டமைப்பின் முதல்நிலை முகாமையாளர்களாக விளங்கும் பாடசாலை அதிபர்கள் ஆற்றவேண்டிய பங்கு பணி பற்றி நோக்குவது பொருத்தமானதும். இலங்கையில் மொத்தமாக 9790 அரச பாடசாலைகள் உள்ளன. இவற்றில் 1967 பாடசாலைகள் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளன.

- இவற்றில் 1545 பாடசாலைகள் நிரந்தர இடங்களில் இயங்கி வருகின்றன.
- 265 பாடசாலைகள் இடம்பெயர்ந்த மக்களுக்காகத் தற்காலிக இடங்களில் இயங்கிவருகின்றன.
- 156 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இவற்றில் ஆகக் கூடுதலாக யாழ்ப்பாணத்தில் 74 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

இலங்கையின் கல்வியில் வரலாற்று ரீதியாகக் காணப்பட்டு வந்த மக்களின் கல்வியில் இரட்டைத் தன்மையினை வளர்த்து வலுப்பெறச்செய்துள்ளன. இலங்கையின் கல்வியில் ஆதிக்கமான முற்போக்கான விருத்தி ரீதியான, ஏழை, சிறுபான்மை சமூகத்தினரை [illegible] கல்வியில் சமவாய்ப்பு என்பது பிறந்தவுடன் மரணித்துப் போய்விட்டதென்னலாம். இலவசக் கல்வியின் [illegible] தாக்கம் அரசியல் காரணங்களில் ஒரு சமூகப் பெயர்ச்சியை உண்டுபண்ணினாலும் அறிவில் ஒரு நீண்ட கால இடைவெளியை [illegible] மீண்டும் சக்தி மிக்க அதிகார வர்க்கங்களுக்கே கல்வி வாய்ப்பு என்னும் கட்டத்தில் அகப்பட்டுவிட்டதெனலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் கல்வி வலயத்தில் மாத்திரம் 21 பாடசாலைகள் 10 வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டுள்ளன. இந்த 21 பாடசாலைகளில் 16 பாடசாலைகள் உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறப்படும் பிரதேசத்திற்குள் வருகின்றன. 5 பாடசாலைகள் உயர்பாதுகாப்பு வலய எல்லையில் உள்ளன. ஆசிரியர் பற்றாக்குறை வடக்குகிழக்கு மாகாணத்தில் 5198 ஆகவுள்ளது. தமிழ் மொழிப் பாடசாலைகளிலேயே இது தீவிரமாகவுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் வடக்குகிழக்கு மாகாணத்தின் கல்வி நிலை திருப்தியில்லாத நிலையிலிருப்பதானது சகலராலும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இதனிலும் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வி நடவடிக்கைகளும் கல்வியடைவுகளும் மிகவும் பின்னடைவுக்குள்ளாகியிருப்பதனை அனைவரும் சிலாகித்துப் பேசி வருகின்றனர். பாடசாலைகளின் முகாமைத்துவக் கலாசாரமும் மாணவர்களது கற்றல் கலாசாரமும் கணிசமானளவுக்கு மாற்றமடைந்துள்ள இன்றைய நிலையில் இப்பிரதேசத்தின் கல்விப்பின்னடைவுக்கான காரணங்களையும் அப்பின்னடைவுப் போக்கினைத் தடுத்து நிறுத்தி கல்வித்தரத்தினை மேம்படுத்துவதில் பாடசாலை முகாமையாளர்களான அதிபர்கள் தம்பணியில் ஆற்றவேண்டிய கடமைகள் பற்றி நோக்குதல் பொருத்தமுடையதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆசிரியர் வெற்றிடங்கள் —2005 | |
|---|---|
| மாவட்டம் | ஆசிரியர் எண்ணிக்கை |
| யாழ்ப்பாணம் | 1037 |
| கிளிநொச்சி | 446 |
| மன்னார் | 382 |
| முல்லைத்தீவு | 424 |
| வவுனியா | 560 |
| மட்டக்களப்பு | 1087 |
| திருகோணமலை | 691 |
| அம்பாறை | 571 |
| மொத்தம் | 5198 |

கல்வியினையே வாழ்க்கைக்கான கருவூலமாகக் கொள்கின்ற யாழ்ப்பாண மக்களின் மனோபாவம், கலாசார, பண்பாட்டுப் பாரம்பரியம், அறிவுத்தேடலிலான ஆர்வம், விடாமுயற்சி, வறுமையாயினும் செம்மை, மொழி வாண்மை முதலான குணாதிசயங்கள் நாடளாவிய ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் உள்ளார்ந்த ஒரு கௌரவ நிலையினை இப்பிரதேசத்து மக்கள் கடந்த காலங்களில் அனுபவிக்க காரணிகளாக அமைந்தன. திறமைக்கும், தகுதிக்கும் முதலிடம் கொடுத்தும் இவற்றில் முதலிடம் வகித்தும் மிளிர்ந்த மக்கள் இன்று இவற்றில் பின்தங்கியிருப்பதற்கான பலமான காரணங்கள் இருக்கவே செய்கின்றன.

### 1. நீண்டகாலப் போர்ச் சூழல்

கடந்த 25 ஆண்டுகாலமாக இப்பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் அமைதியற்ற சூழலும் போர் அனர்த்தங்களும் இப்பிரதேசத்தின் கல்விக் கட்டமைப்பினை பலமாகப் பாதித்துள்ளன. இப்பிரதேசத்தின் பாடசாலையில் கால்வாசி எண்ணிக்கையுடைய பாடசாலைகள் தற்காலிகமாக இடம்பெயர்ந்தும் மூடப்பட்டுமுள்ளன. மக்கள் மாவட்டத்திற்கு வெளியேயும், உள்ளேயுமாக இடம்பெயர்ந்து தற்காலிக இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். கணிசமான தொகையினர் வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறியுள்ளதுடன் ஒரு குறிப்பிட்ட தொகையினர் யுத்தப் பாதிப்புக்களால் மரணித்தும் ஊனமடைந்துமுள்ளனர். பெருமளவில் வளமான நிலங்கள் உயர்பாதுகாப்பு வலயங்கள் என்னும் போர்வையில் ஆக்கிரமிப்புக்குள்ளாகி மக்களது வாழ்வியல் கட்டுமானமானது தகர்க்கப்பட்டுள்ள நிலையில் கல்விக்கான கட்டுமானங்கள் பலவீனப்படுவது இயல்பான ஒன்றாகும். மேலும் போர் அனர்த்தங்களாலும் அவல வாழ்வின் அழுத்தங்களாலும் மக்களதும், மாணவச் சிறார்களதும் உளவளம் பாதிப்படைந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட நிகழ்வுகளின் விளைவுகளையே இன்று நாம் கல்வியிலும் அனுபவிக்கத் தொடங்கியுள்ளோம்.

கல்வியினையே வாழ்க்கைக்கான கருவூலமாகக் கொள்கின்ற யாழ்ப்பாண மக்களின் மனோபாவம், கலாசார, பண்பாட்டுப் பாரம்பரியம், அறிவுத் தேடலிலான ஆர்வம், விடாமுயற்சி, வறுமையாயினும் செம்மை, மொழி வாண்மை முதலான குணாதிசயங்கள் நாடளாவிய ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் உள்ளார்ந்த ஒரு கௌரவ நிலையினை இப்பிரதேசத்து மக்கள் கடந்த காலங்களில் அனுபவிக்க காரணிகளாக அமைந்தன. திறமைக்கும், தகுதிக்கும் முதலிடம் கொடுத்தும் இவற்றில் முதலிடம் வகித்தும் மிளிர்ந்த மக்கள் இன்று இவற்றில் பின்தங்கியிருப்பதற்கான பலமான காரணங்கள் இருக்கவே செய்கின்றன.

| யாழ்மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் | |
|---|---|
| பாடசாலை வகை | எண்ணிக்கை |
| 1AB | 39 |
| 1C | 46 |
| வகை 2 | 148 |
| வகை3 | 174 |
| மொத்தம் | 407 |

### 2. புத்திஜீவிகள், கல்விக் கரிசனையாளர்களது வெளியேற்றம்

கடந்த கால்நூற்றாண்டு காலமாக ஏற்பட்டு வந்த வாழ்வியல் அமுக்கங்களால் கணிசமானளவு புத்திஜீவிகளும் கல்வியின் பால் நாட்டமுள்ள மக்கள் பலரும் இப் பிரதேசங்களைவிட்டு வெளி நாடுகளுக்கும் வேறு பிரதேசங்களுக்கும் இடம்பெயர்ந்துள்ளனர். இதன் காரணமாக கல்வி மீது நாட்டமுள்ள மக்களது எண்ணிக்கை கணிசமானளவு குறைவடைந்து விட்டமையால் அதன் விளைவுகள் இப்போது வெளிவரத் தொடங்கியுள்ளன.

### 3. புலம்பெயர்ந்த மக்களது உழைப்புக்களின் உட்பாய்ச்சல்.

போர்ச்சூழல் மற்றும் பொருளாதார நோக்கங்கள் காரணமாகப் புலம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை ஒப்பீட்டிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகமாகும். இதன் பக்கவிளைவாக அம் மக்களது உழைப்புக்கள் அவர்கள் சார்ந்த குடும்பங்களின் பணப்புழக்கத்தினை அதிகரித்தமையாலும், சமூகப்பழக்க வழக்கங்களிலும் பண்பாட்டு அம்சங்களிலும் வலிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலீட்டிற்கும் மாசுறுத்தும் செயற்பாடுகளாலும் யாழ்ப்பாண மாணவர்களது கற்ற சமூகத்திற்குரிய பண்பாடுகள் அற்றுப்போவதற்கான அறிகுறிகள் தென்படத்தொடங்கியுள்ளமையானது கல்வியில் பாரிய அக்கறை கொண்டுள்ள நாட்டத்தினை தளர்வடையச் செய்துள்ளது. கல்வி மேன்மைக்கும் பொருளாதார மேன்மைக்குமிடையேயான நவீன நோக்கின் தொடர்பினை விளங்கிக் கொள்ளாமல் உதாசீனம் செய்யும் பண்பினைக் கொண்ட பழைய மக்கள் தொகை விரிவடைந்து செல்வது இப்பிரதேசத்தின் கல்விக்கான பாரிய அச்சுறுத்தலை அமைகின்றது. கற்ற சமூகத்தினர் கூட அறிவுத் தொழிலாளர் இந்த தற்காலிக நிலைப்பாட்டத்தினால் கரைபடும் நிலையினை அவதானிக்க முடிகின்றது.

### 4. பாடசாலைகளின் வினைத்திறன்கள் குறைவடைந்து செல்கின்றமை

கல்வியின் நவீன போக்குகள், அதன் இலக்குகள் உலகளாவிய மாற்றங்கள் உணரப்பட வேண்டியது கட்டாயமானது. கல்வியின் விரிந்த இலக்குகளை அடைவதற்கான பிரதான கருவிகள் பாடசாலைகளேயாகும். சமூகத்தின் கலாசாரப்பண்புகளையும், பாரம்பரியங்களையும் அவற்றின் முதன்நிலை திரிபடையாது பேணி வலுப்படுத்தி வளர்த்தெடுப்பதுடன் மனித விழுமியங்களுக்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் அடிப்படையான திறன்களை மாணவர்களிடம் வளர்த்தெடுக்கும் பாரிய பொறுப்பு பாடசாலைகளுக்குள்ளது. இவற்றிற்கேற்ப பாடசாலைகளும் அவற்றின் திட்டங்களையும் செயற்பாடுகளையும் வடிவமைத்து வினைத்திறன் மிக்கவையாக மிளிர்தல் வேண்டும். பாடசாலை ஆசிரியர்கள் வினைத்திறனும், அர்ப்பணிப்பும், உதாரணப்பண்புகளும் கொண்டோராதல் வேண்டும். ஆசிரியத்துவம் அவர்களில் தலைமைத்துவப்படுத்தல் வேண்டும்.

துரதிஷ்டவசமாக இன்று ஆசிரியர்கள் பலரிடம் இப்பண்புகள் நலிவடைந்து காணப்படுவதாகவும் அன்றைய இக்காலத்தின் கல்வித்தேவைக்கேற்ற ஆற்றல்களைப் பெற்றுக் கொள்வதில் அவர்களது வினைத்திறன் குறைபாடுகளே இப்பிரதேசத்தின் கல்வி நிலை பின்தங்கியமைக்கான பிரதான காரணமெனவும் குறைகூறப்படுகின்றது. எவ்வாறெனினும் யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவுகின்ற யாழ்ப்பாணக் கல்விப்பாரம்பரியத்திற்கு முரணான ஒட்டுமொத்தமான சிக்கல்களும் செயற்பாடுகளுமே மாணவர்களது இன்றைய கல்விப்பின்னடைவுகளுக்கும் பண்பாட்டுக் குறைபாடுகளுக்கும் காரணமாகும். இவற்றில் பாடசாலைகளின் முகாமைத்துவக் கலாசாரங்கள் முக்கிய இடம்வகிக்கின்றன.

கல்வியின் நவீன போக்குகள், அதன் இலக்குகள் உலகளாவிய மாற்றங்கள் உணரப்பட வேண்டியது கட்டாயமானது. கல்வியின் விரிந்த இலக்குகளை அடைவதற்கான பிரதான கருவிகள் பாடசாலைகளேயாகும். சமூகத்தின் கலாசாரப்பண்புகளையும், பாரம்பரியங்களையும் அவற்றின் முதன்நிலை திரிபடையாது பேணி வலுப்படுத்தி வளர்த்தெடுப்பதுடன் மனித விழுமியங்களுக்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் அடிப்படையான திறன்களை மாணவர்களிடம் வளர்த்தெடுக்கும் பாரிய பொறுப்பு பாடசாலைகளுக்குள்ளது. இவற்றிற்கேற்ப பாடசாலைகளும் அவற்றின் திட்டங்களையும் செயற்பாடுகளையும் வடிவமைத்து வினைத்திறன் மிக்கவையாக மிளிர்தல் வேண்டும். பாடசாலை ஆசிரியர்கள் வினைத்திறனும், அர்ப்பணிப்பும், உதாரணப் பண்புகளும் கொண்டோராதல் வேண்டும்.

### பாடசாலைகளின் முகாமைத்துவ கலாசாரங்கள்

**வினைத்திறன் மிக்க பாடசாலையின் பண்புகள்.**

- ஒரு சிறந்த அதிபர் முகாமையாளராக இருப்பார்.
- அர்ப்பணிப்புள்ள கடமையுணர்வுள்ள ஆசிரியர் குழாம் இருக்கும்.
- அபிவிருத்திக்கான குறைந்தபட்ச வளங்களை கொண்டிருக்கும்.
- ஆரோக்கியமான சமூகத் தொடர்பு
- மாணவர் அடைவுகள் உயர்நிலையில் இருக்கும்.
- ஒழுக்க சீலம் மாணவர்களிடம் உயிரோட்டமுடையதாக இருக்கும்.
- பொறுப்புணர்ந்த தொழில் நுட்ப வல்லுனர்கள் இருப்பர்.
- நவீன கல்வி முன்னெடுப்புக்கள் காணப்படும்.
- மாணவர் வரவு சீராகவும் உயர்நிலையிலிருக்கும்.
- ஆசிரியர்களது வாண்மைத்திறன் உயர்நிலை நோக்கி நகரும்.
- பாடசாலைக் கட்டமைப்பு நெகிழ்வானதாகவும் நுட்பமாகவுமிருக்கும்.
- சமுதாய மேம்பாட்டுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.
- கற்கைத்துறைசார் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும்.
- பாடசாலையின் இணைப்பாடவிதான செயற்பாடுகளும் அடைவுகளும் உயர்நிலையிலிருக்கும்.
- பாடசாலையின் கீர்த்திநாமம்(Goodwil) வளர்ச்சி பெறும்.

### இவற்றை அடைவதற்குப் பாடசாலை அதிபர்கள் ஆற்றவேண்டிய வகிபங்குகள் யாவை?

மேற்குறிப்பிட்ட பண்புகள் பாடசாலையில் வளர்த்தெடுக்கப்பட வேண்டுமெனின் அங்கு பல்துறைத் திறன் கொண்ட ஓர் முகாமைத்துவர் இருத்தல் அவசியமானதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமைத்துவம் என்பது ஒரு நிறுவனத்தின் அதன் குறியிலக்குகளை எய்தும் பொருட்டு அதன் வளங்களிலிருந்து உச்சப்பயனைப் பெற்று வழிநடத்திச் செல்வதெனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம். நிறுவனங்கள் அடிப்படையில் இரண்டு வகைப்படுகின்றன.

1. பொருளுற்பத்தி மற்றும் வர்த்தக, பொருளாதார நடவடிக்கைகளோடு தொடர்புடைய நிறுவனங்கள்.
2. சேவைகளை வழங்கும் நிறுவனங்கள்.

பாடசாலைகள் மக்களுக்கான சேவையினை வழங்கும் நிறுவனங்களாகும். பொருளுற்பத்தி மற்றும் சேவைகளை வழங்கும் நிறுவனங்களது பொதுவான முகாமைத்துவக் கருமங்கள் அடிப்படையில் ஒன்றாயினும் அடையப்பட வேண்டிய அவற்றின் இலக்குகளைப் பொறுத்து அவற்றின் செயற்பாடுகளில் சில மாறுதல்கள் பின்பற்றப்படுகின்றன.

"கல்வி என்பது தொழிநுட்ப, பொருளாதார ரீதியில் மாத்திரமன்றி மனிதகுலத்தின் வாழ்வுக்கான தடைகளை நீக்கி விடுதலை செய்வதற்குமான ஆதாரமாக அமைதல் வேண்டும்" எனும் கொள்கையின் வழி காலத்திற்குக் காலம் அதன் செயற்பாடுகளிலும் மாற்றங்களையும் தாங்கி வருகின்றது. ஆரம்பகாலங்களில் மனிதவளத்தினால் மனிதவளத்தினை விருத்தி செய்யும் ஒரு செயற்பாடாகக் கொள்ளப்பட்ட கல்விச் செயற்பாடுகள் உலகளாவிய சமூக, பொருளாதார மாற்றங்களுடனும், வளர்ச்சிகளுடனும் அவற்றிற்கு ஈடாக வளர வேண்டிய தேவையேற்பட்டுள்ளது. மனிதவளச் செறிவினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட கல்விச் செயற்பாடுகள் அதன் உச்சப்பயன் எல்லையை அடைந்த நிலையிலும் அடையப்படாது எஞ்சியுள்ள கல்வியின் உச்சஇலக்குகளை மூலதனச் செறிவுமிக்க வளங்களின் பாவனையினூடாகப் பெறவேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கல்விச் செயற்பாடுகளின் அடிப்படைக் களமாக அமையும் பாடசாலைகளின் முகாமைத்துவமானது புதிய சிந்தனைகளுடனும், உத்திகளுடனும் முன்னெடுக்கப்படவேண்டியது அத்தியாவசியமாகின்றது. இதற்குப் பாடசாலை அதிபர்களிடம் கல்வி தொடர்பான உலகளாவிய கருத்துத் தெளிவும் தூரதிருஷ்டியும் (Vision), நிறுவனம் தொடர்பான விளக்கமும் செயற்படுதிறனும் இன்றியமையாது வேண்டப்படுகின்றன.

கல்வி என்பது தொழிநுட்ப, பொருளாதார ரீதியில் மாத்திரமன்றி மனிதகுலத்தின் வாழ்வுக்கான தடைகளை நீக்கி விடுதலை செய்வதற்குமான ஆதாரமாக அமைதல் வேண்டும் எனும் கொள்கையின் வழி காலத்திற்குக் காலம் அதன் செயற்பாடுகளிலும் மாற்றங்களையும்தாங்கி வருகின்றது. ஆரம்பக்காலங்களில் மனிதவளத்தினால் மனிதவளத்தினை விருத்தி செய்யும் ஒரு செயற்பாடாகக் கொள்ளப்பட்ட கல்விச் செயற்பாடுகள் உலகளாவிய சமூக, பொருளாதார மாற்றங்களுடனும், வளர்ச்சிகளுடனும் அவற்றிற்கு ஈடாக வளர வேண்டிய தேவையேற்பட்டுள்ளது. மனிதவளச் செறிவினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட கல்விச் செயற்பாடுகள் அதன் உச்சப்பயன் எல்லையை அடைந்த நிலையிலும் அடையப்படாது எஞ்சியுள்ள கல்வியின் உச்சஇலக்குகளை மூலதனச்செறிவுமிக்க வளங்களின் பாவனையினூடாகப் பெறவேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டுள்ளது.

அதிபர்களது பொதுவான பாடசாலை முகாமைத்துவக் கருமங்கள் முறையாக நிறைவேற்றப்படுவது கட்டாயமானதாகும். திட்டமிடுதல், இயைபுபடுத்தல், அமுலாக்குதல், கண்காணித்தல், மதிப்பிடுதல் என்பன இன்றியமையாத கருமங்களாகக் கொள்ளப்படுகின்ற போதிலும், இன்றைய பாடசாலைகளில் நிலவுகின்ற கல்விப் பிரச்சினைகள், சமூக எதிர்பார்ப்புக்களைச் சீர்செய்து வெற்றிபெறுவதற்கு இக்கருமங்களுக்கும் மேலாக அதிபர்கள் ஆற்ற வேண்டிய வகிபங்குகள் (Roles) பலவுள்ளன.

### 1. சிறந்த முகாமையாளர்

அதிபர் என்பவர் சிறந்த முகாமையாளராக இருத்தல் வேண்டும். நிறுவனத்தின் நோக்கினையும் இலக்குகளையும் தெளிவாகப் புரிந்துகொண்டு அவற்றை எய்துகின்ற வழிகளை ஏற்படுத்துபவராகவும் தானும் வினைத்திறனுடன் கருமமாற்றிக்கொண்டு ஏனைய பணியாளர்களையும் வேலை செய்யத் தூண்டுபவராகவும் இருத்தல் வேண்டும். பாடசாலை வளங்களை தேவை முன்னுரிமை அடிப்படையில் உச்சப்பயன்படுத்துபவராகவும் இருத்தல் வேண்டும். சிறப்பான தொடர்பாடல், ஊக்குவித்தல் நுட்பங்களினூடாக மனிதவளவிருத்தியினை உண்டுபண்ணுபவராக இருத்தல் வேண்டும். கல்வி மற்றும் நடைமுறை விடயங்களின் பால் தெளிந்த அறிவும், தீர்க்க தரிசனமும், எதிர்காலவியல் தொடர்பான ஆற்றலும் கொண்ட அதிபர்களே சிறந்த முகாமையாளர்களாக விளங்கக் கூடியவராவர்.

### 2. அர்ப்பணிப்புடன் கருமமாற்றும் முன்னோடி

எதிர்கால சமூகத்தை உருவாக்குகின்ற பாடசாலைகளின் அதிபர்கள் தமது நேரத்தையும் சிரத்தையினையும் பாடசாலைக்காகவும், மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்காகவும் அர்ப்பணிக்கும் பண்புடையயோராதல் வேண்டும். அதிபரது அர்ப்பணிப்பின் எதிரொலியானது பாடசாலையில் பணியாற்றுகின்ற ஏனைய ஆசிரியர்களையும் பணியாளர்களையும் அர்ப்பணிப்புள்ளவர்களாக ஆக்கவல்லது. அதிபரது முன்மாதிரியின் செல்வாக்கு ஆசிரியர்களிலும் நேரான மாற்றத்தினை ஏற்படுத்தும் கல்வியும் அர்ப்பணிப்பும் ஒன்றிலொன்று இறுகப் பிணைந்துள்ள மாறிகளாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கற்றல் — கற்பித்தல் செயற்பாட்டின் உந்துவிசையாளர்.

பாடசாலை என்னும் நிறுவனம் பெரும்பாலும் மனிதவளத்தோடு தொடர்புடையதாகும். பாடசாலையின் உயிரோட்டம் அங்கு கல்விகற்கும் மாணவர்களேயாகும். மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்காகவே அங்கு அனைத்தும் இடம்பெறுகின்றன. எனவே கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வினைத்திறனுடன் நடைபெறுவதுவே பாடசாலையின் வெற்றிக்கு அடிப்படையாக அமைகின்றது. எனவே பாடசாலை அதிபரென்பவர் செறிவான கற்றல் கற்பித்தலை உறுதிசெய்பவராக இருப்பார்.

4. வளங்களை விருத்தி செய்பவர்

பாடசாலைகளில் பாடவிதான மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்குப் பாடசாலைகளில் குறைந்தபட்ச வசதிகளையேனும் பேணப்படுவது இன்றியமையாததாகும். சாத்தியமான வழிகளில் தேவையான வளங்களைப் பெற்றுக்கொள்வது இன்றைய காலகட்டத்தில் இன்றியமையாததாகும். அதுமட்டுமன்றி செறிவுமிக்க கற்றல் கற்பித்தல் தேவைகள் அதிகரித்து வருகின்றன. பாடசாலைகளில் அவற்றின் செயற்பாடுகளுக்குத் தேவையான பௌதிகவளங்களையும் மனித வளத்தினையும் பெற்றுக்கொள்வதும் பராமரிப்பதும் பயன்படுத்துவதும் பாடசாலை அதிபரது கடமையாகும்.

5. ஒழுக்க விழுமியங்களை ஊக்குவிப்பவர்

கல்வியின் இலட்சியம் ஒழுக்கசீலமாகும். பாடசாலைகளில் ஊக்குவிக்கப்பட்டு முன்னெடுக்கப்படுகின்ற ஒழுக்கவிழுமியச் செயற்பாடுகள் மாணவர்களுக்கு வாழ்நாள் முழுவதற்கும் வழிகாட்டி உதவி ஒரு ஆரோக்கியமான சமூக உருவாக்கத்திற்கு உதவுகின்றது. தற்காலத்தில் ஒழுக்க விழுமியங்கள் பற்றிய அறியாமையும் பாடசாலைகளினதும் சமூகத்தினதும் அசமந்த நிலைக்குப் பெருங்காரணமாக மாறியுள்ளன. இதற்காகப் பாடசாலைகள் மாணவர்களது நெறிபிறழ்வு நடத்தைகளுக்கான வகைகூறும் பொறுப்பினைத் தட்டிக்கழிக்கும் மனோபாவத்தில் உள்ளன. இன்றைய காலகட்டத்தில் சமூகத்தில் பொருளாதார, கலாசார இலக்குகளும் எதிர்பார்ப்புகளும் மாறுபாடடைந்து யாழ்ப்பாணத்துக் கல்விக் கலாசாரம் நலிவடைந்துள்ள நிலையில் பாடசாலைகள் சிறப்பான சமூகத்தை உருவாக்கும் வகையில் ஒழுக்க விழுமிய வளர்ச்சிக்குத் திட்டமிட்டுச் செயலாற்றுதல் வேண்டும்.

எதிர்கால சமூகத்தை உருவாக்கும் நிலையில் பாடசாலைகளின் அதிபர்கள் தமது நேரத்தையும் சிரத்தையினையும் பாடசாலைக்காகவும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகவும் அர்ப்பணிக்கும் பண்புடையோராதல் வேண்டும். அதிபரது அர்ப்பணிப்பின் எதிரொலியானது பாடசாலையில் பணியாற்றுகின்ற ஏனைய ஆசிரியர்களையும் பணியாளர்களையும் அர்ப்பணிப்புள்ளவர்களாக ஆக்க வல்லது. அதிபரது முன்மாதிரியின் செல்வாக்கு ஆசிரியர்களிடமும் நேர்மை மாற்றத்தினை ஏற்படுத்தும். கல்வியும் அர்ப்பணிப்பும் ஒன்றோடொன்று இறுக்கப் பிணைந்துள்ள காரணிகளாகும்.

பாடசாலைகளில் இதற்கான கல்விச் சூழலை ஏற்படுத்துவதும், நடைமுறைப்படுத்துவதும் அதிபரின் கடமையாகும்.

6. ஆளணி வளவாளர்

பாடசாலையின் கல்வித்தரமும், ஒழுக்க விருத்தியும் ஆசிரியர் வாண்மை விருத்தியின் தன்மையைப் பொறுத்ததாகும். மாறிவரும் கல்விச் சூழலுக்கும் வளர்ந்துவரும் கல்வித் தேவைகளுக்குமேற்ப ஆசிரியர்களது வாண்மையும் உயர்த்தப்படுதல் வேண்டும். ஆசிரியர்களுக்கான வாண்மைவிருத்திப் பயிற்சியைப் பாடசாலை மட்டத்தில் முன்னெடுப்பதுவும் ஆசிரியர்கள் தொழில் மற்றும் கல்வித் தகுதிகளில் மேம்படுவதற்கு வழிகாட்டுவதும் அதிபரது கடமையாகும். வினைத்திறன்மிக்க ஆசிரியர் குழாம் கல்வி அபிவிருத்திக்கான அடிப்படையாகும்.

7. இணைப்பாடவிதான ஏற்பாட்டாளர்

நன்றான கல்வியடைவுகளை மாத்திரம் தலைமைத்துவப் பண்புமிக்க ஆரோக்கியமான மாணவ சமுதாயத்தினை உருவாக்கிவிட முடியாது. உடல், உள, அறிவு, ஆற்றல் ரீதியாக திறன்களையுடைய மாணவர்களை உருவாக்குவதற்குப் பாடசாலைகளில் இணைப்பாடவிதான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்து மாணவர்களைப் பங்குகொள்ளவைப்பது இன்றியமையாததாகும். வகுப்பறைக்கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்குக் கொடுக்கப்படுகின்ற அதேயளவு இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். இதற்கான ஏற்பாடுகளின் முன்னேற்றம் அதிபரது பூரண கலைத்திட்டம் தொடர்பான கண்ணோட்டத்திலும் செயற்றிறனிலேயுமே தங்கியுள்ளது.

8. புதுமை புகுத்துபவர்

உலகமயமாக்கல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் மாற்றங்கள் இன்றைய கல்வி நடைமுறைகளில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. தகவல் தொழில்நுட்பமும் தகவல் தொடர்பாடலும் கல்வியிலே புதிய சக்தி ஓட்டத்தினை உருவாக்கியுள்ளன. கல்வியென்பது ஆசிரியமையம், மாணவர்மையம் என்னும் வளர்ச்சிப் படிகளைத் தாண்டி வாழ்வுத்தொழிற்பாடுகள் என்னும் பரிமாணத்தை நோக்கி மாறிவருகின்றது. கற்றலுக்கான வரைவிலக்கணங்களும் கருவிகளும் புதுமையும் பெற்றுவரும் இன்றைய காலகட்டத்தில் பாடசாலை அதிபர்கள் இதற்கான சூழ்நிலைகளையும் வசதிகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திக் கொடுப்பவராகவும் தானே அதற்கு முன்மாதிரியாளராகவும் இருத்தல் வேண்டும்.

**9. சிறந்த சமூகத்தொடர்பாளர்.**

பாடசாலை என்பது சமூகத்தின் கண்ணாடியாகும். பாடசாலைச் சமூகத்தின் நிலைமைகள் பாடசாலை நடவடிக்கைகளிலும் பிரதிபலிக்கவே செய்யும். சமூகத்திற்கும் பாடசாலைக்கும் இடையே ஆரோக்கியமான தொடர்பாடலும், இயைபுபடுத்தலும் இருப்பது இன்றியமையாததாகும். இதனை ஏற்படுத்திப் பின்பற்றவைக்கும் பொறுப்பு பாடசாலை அதிபரைச் சார்ந்ததாகும்.

பாடசாலை அதிபர்களது வகிபங்குகளை இன்னவைதான் என வரையறுத்துக்கூறுவது கடினமாகும். நாளாந்தம் மாறிவரும் சூழ்நிலைக்கும் மாற்றங்களுக்குமவைவாகக் கல்வித்தேவைகளும் கல்வி நடவடிக்கைகளும் மாற்றமடைவதனால் அவற்றிற்கேற்றாற்போல் அதிபர்களது வகிபங்குகளும் மாற்றமடைகின்றன. ஒரு சிறந்த அதிபரது குணாதிசயம் யாதெனில் உலக மாற்றங்கள் தொடர்பான அவதானமும், பகுப்பாய்வுணர்வும் தொழிற்பாடுமாகும். விழிப்புணர்வுடைய அதிபரது பாடசாலையும் விழிப்புடையதாக இருக்கும். பிரச்சினைகளை இனங்கண்டு காரணங்களை பகுத்தாராய்ந்து தீர்வு காண்பதும் அபிவிருத்திப் பணிகளை தீர்க்கமுடன் முன்னெடுப்பதுவும் இந்த விழிப்புணர்வின் பாற்பட்டதாகும். ஒரு பாடசாலையின் சிறப்பு அந்தப்பாடசாலை அதிபரது சிறப்பிலேயே தங்கியுள்ளது. அதிபர் தனது பங்குகளைச் சிறப்புற நிறைவேற்றுவாராகில் பாடசாலை சிறந்து விளங்கும் ❑

---

*பாடசாலையில் இடம் பெறும் கல்விசார், சமூக இணைப்பாடவிதான செயற்பாடுகளில் வெற்றியைக் காட்ட முடியாத மாணவர்கள் சிலர் வகுப்பறையில் காணப்படுகின்றனர். அவர்களுக்குப் பாடசாலை தினமும் தோல்வியைச் சந்திக்கும் மைய இடமாக அமைகின்றது. இதனால் அவர்களின் வாழ்க்கையில் வெற்றி தோல்வி விகிதாசாரம் கணிசமான அளவு குறைந்து கொண்டு செல்கின்றது. பாடசாலையில் மாணவன் பெறும் வெற்றிக்கும் அவனது நடத்தைக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும்*

*அதிகமான பிழையான நடத்தையுடைய மாணவர்கள் பாடசாலையில் வெற்றியுணர்வைப் போதிய அளவு பெறாதவர்களாகவே உள்ளனர் என்றும் ஆய்வுகள் காட்டுகின்றன. சில மாணவர்களைப் பொறுத்தவரை அவர்களின் கற்றல் இடர்பாடு காரணமாக வகுப்புக் கலைத் திட்டத்தின் தேவைகளை அவர்களினால் நிறைவேற்ற முடிவதில்லை. அவர்கள் கற்றலில் ஆர்வம் காட்டாததோடு அதனால் ஏற்பட்ட மன உளைச்சலிருந்து விடுபட பிழையான நடத்தைக் கோலத்தினைக் காட்டுகின்றனர். வேறு சிலர் அவர்களின் ஆளுமைப் பண்புகள் காரணமாக சகமாணவர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்டோ அல்லது உதாசீனப்படுத்தப்பட்டோ விடுவதினாலும் இவ்வாறான நடத்தைகளை வெளிக்காட்டலாம்.*

*இம்மாணவர்கள் வெளிக்காட்டும் கோபம் எதிர்த்துப் பேசல் போன்ற நடத்தைப் பிரச்சினைகள் அவர்களின் மனிமுறிவையும் கற்றலில் ஆர்வமின்மையையும் காட்டுகின்றன. இவர்களைத் தம்பக்கம் மற்றவர்களின் கவனத்தைத் திருப்புவதே வெற்றி அல்லது வெகுமதி என்றுகருதுகின்றார்களே தவிர வகுப்பில் பொருத்தமான நடத்தைகளை வெளிக்காட்டல், போதனா நோக்கங்களை அடைதல் என்பவற்றால் அல்ல.*

***கலாநிதி ப.கா.பக்கீர் ஜ..:பார்***

*வெற்றிகரமான கற்பித்தல்*

*வகுப்பறை முகாமைத்துவம்*

*பக்கம் 167 - 2004*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் சாராக் கற்றல் முறைகள்

சோ. சந்திரசேகரம்
பேராசிரியர் — கல்வியியல் துறை
கொழும்புப் பல்கலைக்கழகம்

இக்கட்டுரை விளக்க முற்படும் விடயம் ஆசிரியர் அல்லது ஆசிரியரின் கற்பித்தலுடன் தொடர்பற்ற நுட்பங்கள் முறைகள் (non-Pedagogical methods) ஆகும். பிள்ளைகளின் கற்றலை மேம்படுத்தும் முயற்சிகள் மற்றும் பிள்ளைகளின் கல்வித்தராதரங்களை உயர்த்தும் நோக்குடனான கல்விச் சீர்திருத்தங்கள் யாவும் ஆசிரியர் கல்வி முறைமை அல்லது ஆசிரியர் பயிற்சி, ஆசிரியரின் தொழில் சார் விருத்தி என்பவற்றிலேயே கூடிய அக்கறை செலுத்துகின்றன. உள்ளடக்க அறிவு, விடய அறிவு, அல்லது பாட அறிவு, வகுப்பறைக் கற்பித்தல் முறைகள், வகுப்பறை முகாமைத்துவத் திறன்கள் என்பவற்றோடு ஆசிரியர்கள் கற்பித்தலில் அக்கறை, ஈடுபாடு என்னும் அம்சங்களையும் இணைத்துக் கொண்டால் வகுப்பறைக் கல்வி சிறப்பாக அமையும்; கல்வித் தராதரங்கள், மாணவர்களின் கல்வித் தரம் உயரும் என்ற கருத்தின் அடிப்படையில் கல்விச் சீர்திருத்தங்கள் செய்யப்படுகின்றன.

இன்றைய இலங்கையில் கல்விச் சீர்திருத்தங்கள் கல்வியின் தராதர மேம்பாட்டை முக்கிய நோக்காகக் கொண்டவை. இதனடிப்படையிலேயே ஆரம்பக் கல்வி நிலையில் விளையாட்டு முறை, செயற்பாட்டு முறை, குழு முறை, உயர் நிலையில் செயற்றிட்ட முறை, ஆங்கில பாடத்தைக் கற்பித்தல் (12—13 ஆம் தரங்களில்) என்றும் சீர்திருத்தங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. இவையனைத்தையும் கருத்திற் கொண்டு ஆசிரியருக்குத் தேவையான பயிற்சியும் திசைமுகப்படுத்தலும் முக்கியத்துவம் பெற்றன. சுருங்கக் கூறின் இன்றைய பாடசாலை முறைமையில் ஆசிரியர் இல்லையேல் பாடசாலை இயங்க மாட்டாது.

இன்றைய இலங்கையில் கல்விச் சீர்திருத்தங்கள் கல்வியின் தராதர மேம்பாட்டை முக்கிய நோக்காகக் கொண்டவை. இதனடிப்படையிலேயே ஆரம்பக் கல்வி நிலையில் விளையாட்டு முறை, செயற்பாட்டு முறை, குழு முறை, உயர் நிலையில் செயற்றிட்ட முறை, ஆங்கில பாடத்தைக் கற்பித்தல் (12-13 ஆம் தரங்களில்) என்றும் சீர்திருத்தங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. இவையனைத்தையும் கருத்திற் கொண்டு ஆசிரியருக்குத் தேவையான பயிற்சியும் திசைமுகப்படுத்தலும் முக்கியத்துவம் பெற்றன. சுருங்கக் கூறின் இன்றைய பாடசாலை முறைமையில் ஆசிரியர் இல்லையேல் பாடசாலை இயங்க மாட்டாது. ஆசிரியர் பற்றாக்குறையும் அவர்களைத் தேவையான இடங்களில் வேலைக்கு அமர்த்தலும் புதிய ஆசிரியர்களை நியமித்தலும் கல்வி முறையின் பிரதான கல்விப் பிரச்சினைகளாகக் கொள்ளப்படுகின்றன. ஆசிரியரும் அவர் கையாளும் கற்பித்தல் முறைகளும் அதனுடைய அணுகுமுறையும் பாடசாலைக் கல்வியில் பிரதான இடத்தைப் பெறுகின்றன. இதில் உண்மையுண்டு. ஆசிரியர்கள் இல்லாத அல்லது வராத பாடசாலைகளில் கல்விச் செயற்பாடு எதுவும் நடைபெறமாட்டாது. ஆசிரியர் செயற்பாடுகள் உள்ளவரையின் மாணவர் கற்றலும் நடைபெறுவதாகவே இருக்கும். ஆசிரியர் தமது கற்பித்தல் முறைகளை அர்த்தமுள்ளதாக முறைப்படுத்த வேண்டுமாயின் அதற்கான பௌதிக வசதிகள் வகுப்பறையில் இருக்கவேண்டும். வசதியான வகுப்பறை, போதிய இடவசதி, தளபாடங்கள், கற்பித்தல் சாதனங்கள் என இத் தேவைகள் பலவாகப் பெருகும். ஆனால் இத்தகைய வசதிகளும் வாய்ப்புக்களும் கிராமப்புறப் பிள்ளைகளுக்குக் கிட்டுவதில்லை. அங்கு ஆசிரியர்கள் தொடக்கம், மற்றும் மேற்கூறப்பட்ட சகல வசதிகளிலும் ஒரு பற்றாக்குறை காணப்படுகிறது.

வழமையான முறைசார்ந்த பாடசாலை முறைமையும், அங்கு கையாளப்படும் கற்பித்தல் முறைகளும் எப்போதுமே பின்தங்கிய பிரிவினர்களின் பிள்ளைகளுக்கு எதிரானதாகவும் பாதிக்க வைப்பனவாகவும் இருக்கின்றது என்ற கருத்தை 1970 கள் தொடக்கம் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். பாடசாலைக் கல்வியின் முக்கியத்துவத்தை அதிகளவில் கேள்விக் கிடமாக்கியவர்கள் Illich (1968) Pauls Freire (1972) ஆவர். வளர்ச்சியடைந்த நாடுகளில் இந்த மரபுவழிப் பாடசாலை முறைமையில் பல முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் பழைமையான முறைமையே இன்றும் தொடர்கிறது.

ஜேர்மனியில் பின்பற்றப்படும் இருவழிப் பாடசாலை முறைமையானது தொழில்கல்விப் பாடசாலையில் இருந்து பொதுப் பாடசாலைக்கும் பொதுப் பாடசாலையில் இருந்து தொழில்சார் பாடசாலைக்கும் மாணவர்கள் மாறிச் செல்லும் முறையில் நெகிழ்ச்சியான ஏற்பாடுகள் உள்ளன. அவ்வாறே ஐக்கிய அமெரிக்காவில் ஒவ்வொரு பாடசாலை மாவட்டத்திலும் இன்று சமுதாயக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. அவை பல்வேறுபட்ட தொழில்சார் மற்றும் நூல்கல்விக் கற்கை நெறிகளை வழங்குகின்றன. சமுதாயக் கல்லூரிகளிருந்து பெறும் மதிப்பெண்களை மாணவர்கள் வேறு கல்வி நிலையங்களுக்கு எடுத்துச் செல்ல முடியும். இவற்றை விட ஐக்கிய அமெரிக்காவின் கல்வி முறை மாணவர்களுக்குக் கற்கின்ற வாய்ப்பையும் வழங்குகிறது. இதனால் மாணவர்கள் தமது கல்விக் காலத்தை வகுப்பறையில் மட்டும் செலவிடாது வேலைத்தளங்களிலும் பல்வகை அனுபவக் கல்வியைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. அமெரிக்கக் கல்வி முறைமை இத்தகைய ஒரு புதிய கலாசாரத்திற்கு வழிவகுத்துள்ளது. ஆனால் வளர்முக நாடுகளில் சகல கல்வி நிலையங்களும் மிகுந்த கட்டுப்பாடுள்ளதும் நெகிழ்ச்சியற்ற விதி முறைகளைக் கொண்டனவாகவும் விளங்குகின்றன. இந்நாடுகளில் முகாமைத்துவக் கலாசாரம் கல்வி முறையைக் கட்டுப்படுத்தியே ஆக வேண்டும் என நம்புகின்றது. முறைமையில் சீர்திருத்தத்தைக் காணும் தொலை நோக்கு எதுவும் அங்கில்லை.

ஐக்கிய அமெரிக்காவின் கல்வி முறை மாணவர்களுக்குக் கற்கின்ற வாய்ப்பையும் வழங்குகிறது. இதனால் மாணவர்கள் தமது கல்விக் காலத்தை வகுப்பறையில் மட்டும் செலவிடாது வேலைத்தளங்களிலும் பல்வகை அனுபவக் கல்வியைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. அமெரிக்கக் கல்வி முறைமை இத்தகைய ஒரு புதிய கலாசாரத் திற்கு வழிவகுத்துள்ளது. ஆனால் வளர்முக நாடுகளில் சகல கல்வி நிலையங்களும் மிகுந்த கட்டுப்பாடுள்ளதும் நெகிழ்ச்சியற்ற விதி முறைகளைக் கொண்டனவாகவும் விளங்குகின்றன. இந்நாடுகளில் முகாமைத்துவக் கலாசாரம் கல்வி முறையைக் கட்டுப்படுத்தியே ஆக வேண்டும் என நம்புகின்றது. கல்வி முறைமையில் சீர்திருத்தத்தைக் காணும் தொலை நோக்கு எதுவும் அங்கில்லை.

ஏற்கனவே கூறியவாறு ஆசிரியர்களை அமர்த்தும் கொள்கையானது 13 தரப் பாடசாலைகளுக்கும் செல்வந்தர்களது பிள்ளைகளின் பாடசாலைகளுக்கும் சார்பானவையாக விளங்குகின்றன. இப்பாடசாலைகள் சிறந்த ஆசிரியர்களையும் பெறமுடிகின்றது. அக்கறையற்ற ஆசிரியர்களை வெளியேற்றவும் முடிகின்றது.

அதேவேளையில் செல்வந்த வகுப்புக்களைச் சேர்ந்த தொழில் ஈடுபாடற்ற ஆசிரியர்கள் சிறந்த பாடசாலைகளில் அனுமதிபெற்று விடுகின்றனர். தீவிரவாதக் கல்விச் சிந்தனையாளர் இவ்வாறு ஆசிரியர்கள் அமர்த்தப்படுவதில் சமூக வகுப்பின் பாதிப்பு இருப்பதாகவும் செல்வந்தர் வகுப்புக்குச் சாதகமானதாக இருப்பதாகவும் குறிப்பிடுவர். சமூக பொருளாதார அசமத்துவநிலை மேலும் வலுப்பெறுவதற்கு இந்நிலைமைகள் காரணமாக இருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

பழைமையான பாடசாலை முறைமையானது பாடசாலையிலும் பாடசாலைக்கு அப்பால் வீட்டிலும் தனியார் போதனை நிலையங்களிலும் கல்விபெற வசதியுள்ளவருக்குச் சிறந்த கல்விச் சேவையைப் புரிவதாகக் கூறப்படுகின்றது. கல்வித் தகுதிகளையும் பொருளாதார, வசதிகளையும் கொண்ட பெற்றோர்களே இவ்வசதிகளைத் தமது பிள்ளைகளுக்கு வழங்க முடியும். வளர்முக நாடுகளில் பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டில் பாடசாலைகளை விடத் தனியார் போதனையே அதிக முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. சகல உயர்வகுப்பும் பிள்ளைகளும் கணிதம்,ஆங்கிலம் கணினிக்கல்வி மற்றும் அழகியல் கல்வியைத் தனிப்பட்ட போதனாசிரியரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடிகின்றது. இத்தகைய தனியார் போதனை பிள்ளைகளுக்கு அவசியமான திறன்களையும் ஆற்றல்களையும் வழங்கித் தமது பொருளாதார, சமூக அந்தஸ்தை மேம்படுத்திக் கொள்ளவும் உதவுகிறது.

இவ்வாறு பாடசாலைகளுக்குச் சமாந்திரமாக இயங்கும் தனியார் போதனை முறைமையின் நன்மைகள் பெரும்பாலான கிராமப் புற மற்றும் பின்தங்கிய வகுப்புப் பிள்ளைகளுக்குக் கிட்டுவதில்லை இப்பிள்ளைகளின் கல்வித் தராதரம் பற்றிய பிரச்சினை அலட்சியம் செய்யப்படுகிறது. வறியவர்களின் பிள்ளைகள் முற்றாகவே தரம் குறைந்த வினைத்திறனற்ற பாடசாலை மையக் கல்வியிலே தங்கியிருக்க வேண்டியிருக்கின்றது. மாணவர்களின் கல்வி செயற்கைத் தன்மையுடையன. நடைமுறை வாழ்க்கைக்குப் பொருத்தமற்றதாகவும் கருத்தற்றதாகவும் இருப்பதால் பல தீவிவரவாதக் கல்வியாளர்கள் விமர்சிக்கின்றனர். இதன் காரணமாகவே இப்பிள்ளைகள் தமது கல்வியை இடைநிறுத்த வேண்டிய தாகின்றது. அவர்களுடைய பொருளாதார வறுமையை விட இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தகதியில் இயங்கும் பாடசாலை முறைமையே இடைவிலகலுக்குக் காரணம் என்பது இந்த ஆய்வாளர் கருத்து. வறியவர்கள் தமது பிள்ளைகளின் பாடசாலைகளில் பெறும்கல்வி நடைமுறை வாழ்க்கைக்குப் பயனற்றது. அதனால் தமது வாழ்க்கையில் எந்தவித மாற்றமும் நிகழப் போவதில்லையெனக் கருதுவதாகத் தெரிகிறது. சுருங்கக் கூறின் இன்றைய பாடசாலை முறைமையின் பல்வேறு பண்புகள் வழமையான கற்பித்தல் முறைகள் பின்தங்கிய வகுப்பினருக்குப் பொருத்தம் குறைந்தவை என்பதையே சுட்டிக் காட்டுகின்றன.

வறியவர்களின் மேம்பாட்டிற்கான புதிய கல்விச் சிந்தனையானது "கற்பித்தலை" விடுத்துக் கற்றலுக்கு - கற்போனுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றது. புதிய சிந்தனை சாதாரண சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களை வலுப்படுத்துவதற்கான அடிப்படை உபாயமாக எடுக்கப்படுகிறது. புதிய சிந்தனையானது இப்பிள்ளைகள் நெகிழ்ச்சியுடனும் வெளிப்பாடுகளுடனும் கற்றலில் ஈடுபட வாய்ப்பளிக்கிறது. கற்பித்தலை விடுத்துக் கற்றல் முக்கியத்துவம் பெறும்போது முன்னரே சுட்டிக்காட்டப்பட்ட வளப் பற்றாக்குறையும் பிரச்சினையின் தீவிரத்தைக் குறைக்கிறது. புதிய சிந்தனையானது பாடசாலைக்கும் வகுப்பறைக்கும் அப்பால் மாணவர்கள் தற்கால சமூக பொருளாதார நிலைமைகளுக்குத் தேவையான திறன்களையும் அறிவையும் பெற்றுக் கொள்வதை எவ்வாறு பற்றிய புதிய கருத்துக்களை வெளியிடுகின்றது. மாணவன் தனது குடும்பம் வேலைத்தளம், சுற்றாடல், பண்பாடு என்பவற்றுக்குத் தேவையான திறன்களையும் ஆற்றல்களையும் பெற்றுக் கொள்வதை இப்புதிய சிந்தனை வலியுறுத்துகின்றது. இன்றைய பாடசாலை வழங்கும் பாடவிடயமானது இத்தகைய திறன்களையும் ஆற்றல்களையும் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கவில்லை. இவற்றையும் பெற்றுக் கொள்ள மாணவர்கள் தாமாக, சுயமாக, பணியாற்றவும் இயங்கவும் தமது படைப்பாற்றலைக் கண்டறியவும் புதிய கற்றல் முறை ஒன்று (Apm - achieve Learning System) தேவைப்படுகின்றது. இதற்கு மாணவர்கள் யதார்த்த உலகுடன் இடைத்தாக்கத்தில் ஈடுபட உதவுகிறது.

இம்முறைசாரா கற்றல் முறைகள், ஆசிரியரை மையமாகக் கொண்ட வகுப்பறைக்கற்பித்தல் முறைகளிலிருந்து வேறுபட்டவை. **Pedagogy** என்ற ஆங்கிலப் பதம் கற்பித்தல் விஞ்ஞானம் **Science of teaching** என்பதைக் கருதுகின்றது. கற்பித்தல் என்றவுடனேயே அதில் ஆசிரியர் முக்கியத்துவம் பெறுகின்றார். கற்பித்தல், ஆசிரியர், என்ற இரண்டும் எப்போதும் உயர் தரத்தினருக்காக உருவாக்கப்பட்டன. கல்வி சாதனங்கள், வளவே இவற்றுக்கு அப்பால் சாதாரண பிள்ளைகள் கற்பதற்கான பொருத்தமான முறைகள் என்ன என்பதைக் கண்டறிய வேண்டுமென தீவிரமாக சிந்தனையாளர்கள் வலியுறுத்துவர்.

யுனெஸ்கோ ஆய்வொன்றின்படி 18 வயது இளைஞன் ஒருவனின் காணப்படுகின்ற அறிவுத் தொகுதி - அவ்வயதில் அவனுக்குத் தெரிந்த விடயங்களில் 20 சதவீதமானவற்றைத்தான் வகுப்பறையில் கற்றிருப்பான். ஏனைய அறிவு சகலதும் அவனால் வேறு வழிமுறைகளினூடாகப் பெறப்பட்டவையாகும். இவ்வகையில் பார்க்கும்போது, ஆசிரியர் என்பவருக்கு அப்பால் அறிவை உள்வாங்கும் ஏனைய முறைகளும் காணப்படுகின்றன.

பிள்ளைகள் பாடசாலைகளில் அனுமதி பெறு முன்னரே பலவகை அறிவையும் திறன்களையும் பெற்றுக் கொள்கின்றார்கள். முறைசாராக் கற்றல் வழிமுறைகளினூடாகச் சகல சமூகங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் பேசக் கற்றுக் கொள்கின்றார்கள். அவர்கள் பாடசாலைக்கு வருமுன்னர் பெற்றுக் கொள்ளும் மொழி அறிவைப் பயன்படுத்தியே வகுப்பறையில் ஆரம்பக்கல்வி வழங்கப்படுகின்றது. காலங்காலமாக விவசாயத்துறை சார்ந்த திறன்களும் இவ்வாறு முறைசாரா வழி முறைகளின் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்டன.

இம்முறைகள் புராதனமானவை எனக் கருதப்பட்டாலும் இன்றைய சமூகங்களிலும் இவை தொடர்ந்தும் அதிக அளவில் பயன்படுத்தப்படுவதை முன்குறிப்பிட்ட யுனெஸ்கோ ஆய்வு சுட்டிக் காட்டுகின்றது. இவ்வாறு என்னென்ன விடயங்கள், திறன்கள், உளப்பாங்குகள் பிள்ளைகளால் உள்வாங்கப்படுகின்றன என்பதற்கு ஏராளமான உதாரணங்கள் உண்டு.

ஆனால் இத்தகைய கற்றல் முறைப்படுத்தப்படாதவை (Unorganized) அத்துடன் இது எழுந்தமானமாக (Random) நடைபெறுகின்றது. இதன் காரணமாக, இத்தகைய கற்றல் மந்த கதியில் மெதுவாகவே நடைபெறுகின்றது. எனவே இவ்வழிமுறைகள் பற்றிப் புதிய

வழமையான பாடசாலை முறைமையானது பாடசாலையிலும் பாடசாலைக்கு அப்பால் வீட்டிலும் தனியார் போதனை நிலையங்களிலும் கல்வியில் அக்கறையுள்ளோர் தமக்குச் சிறந்த கல்விச் சேவையைப் பெறுவதாகக் கூறப்படுகின்றது. கல்வித் தகுதிகளையும் பொருளாதார வசதிகளையும் கொண்ட பெற்றோர் தமது இவ் வசதிகளைத் தமது பிள்ளைகளுக்கு வழங்க முடியும். வளர்முக நாடுகளில் பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டில் பாடசாலையை விடத் தனியார் போதனையே அதிக முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. சமூக உயர்மட்டப் பிள்ளைகளும் கணிதம் ஆங்கிலம் கணினிக்கல்வி மற்றும் அழகியல் கல்வியைத் தனியார் போதனாசிரியரிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை யொன்று தேவை: அத்துடன் அவை பற்றிய மீள்வரையறையொன்றும் தேவை. ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் அமையும் இவ்வகைக் கற்றலில் முயன்று தவறும் அம்சம் தவிர்க்கப்படல் வேண்டும். முறைசாரா வழிமுறைகளைக் கல்வி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் போது, தீர்மானிக்கப்பட்ட விளைவுகளை அவை தருவனவாக இருத்தல் வேண்டும்.

இவ்வாறான ஆசிரியர் சாராக் கற்றல் முறைகள் பின்வரும் தத்துவங்களைக் கொண்டமைதல் வேண்டும்.

- பாடசாலையில் கற்ற சில ஆண்டுகளின் பின் மாணவர்கள் ஆசிரியர்களின் குறைந்த பட்ச உதவியுடன் சுயமாகக் கற்கும் ஆற்றலைப் பெறுகின்றனர்;
- அதற்கேற்ப போதனையும் வழிகாட்டலும் தரமானதாக அமைதல் வேண்டும்; பொருத்தமான அனுபவங்கள் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்;
- கற்போன் செயற்படுவதற்கான ஆற்றலை வளர்ப்பதாகக் கற்றல் அமைய வேண்டும்;
- கற்றல் முறைகள் கற்போனையும் அவனது சுற்றாடலையும் வலுப்படுத்த வேண்டும்;
- கற்றல் முறைகள் 'அமர்ந்து அமைதியாக இயக்கமற்று' கற்பதை வலியுறுத்தாது செயற்பாட்டுடன் கூடிய பரிசோதனை முறைக் கற்றலாக அமைய வேண்டும்.
- மாணவர்கள் பிற வகுப்பு மாணவர்களுடனும் ஊடாட வாய்ப்புக்கள் இருத்தல் வேண்டும்.

இன்று பல பாடசாலைகளில் இடம்பெறும் கள ஆய்வுகள், கள விஜயங்கள், சந்தை அளவீடுகள் என்பனவும் இவற்றை உள்ளடக்கிய செயற்றிட்ட முறையும் இவ்வகையான கற்றல் முறைகளே. ஆனால் இவை முறையான கற்பித்தல் முறைகளோடு இணைந்தவை; மேலதிகமாகப் பயன்படுத்தப்படுபவை. ஆனால் முறைசாராக் கல்வி முறைகளை ஆதரிப்பவர்களின் கல்விச் சிந்தனையின் படி வழமையான வகுப்பறை கற்பித்தல் முறைகள் இரண்டாம் இடத்தையே பெறுகின்றன. உதாரணமாக இன்றைய ஆரம்பக் கல்வி நிலையில் முதலிரு வகுப்புக்களில் பயன்படுத்தப்படும் விளையாட்டு முறை, செயற்பாட்டு முறை பெருமளவுக்கு இவ்வாறான சிந்தனையைப் பின்பற்றியே உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் இடை நிலைக் கல்வியிலும் உயர்நிலைக்கல்வியிலும் வகுப்பறைக் கற்பித்தலுக்கும் விரிவுரை முறைக்குமே பிரதான இடம் வழங்கப்பட்டுள்ளது.

இன்று பல பாடசாலைகளில் இடம்பெறும் கள ஆய்வுகள், கள விஜயங்கள், சந்தை அளவீடுகள் என்பனவும் இவற்றை உள்ளடக்கிய செயற்றிட்ட முறையும் இவ்வகை யான கற்றல் முறைகளே. ஆனால் இவை முறையான கற்பித்தல் முறைகளோடு இணைந்தவை. மேலதிகமாகப் பயன்படுத்தப்படுபவை. ஆனால் முறைசாராக் கல்வி முறைகளை ஆதரிப்பவர்களின் கல்விச் சிந்தனையின்படி வழமையான வகுப்பறை கற்பித்தல் முறைகள் இரண்டாம் இடத்தையே பெறுகின்றன. உதாரணமாக இன்றைய ஆரம்பக் கல்வி நிலையில் முதலிரு வகுப்புக்களில் பயன்படுத்தப்படும் விளையாட்டு முறை, செயற்பாட்டு முறை பெருமளவுக்கு இவ்வாறான சிந்தனையைப் பின்பற்றியே உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் இடை நிலைக் கல்வியிலும் உயர்நிலைக்கல்வியிலும் வகுப்பறைக் கற்பித்தலுக்கும் விரிவுரை முறைக்குமே பிரதான இடம் வழங்கப்பட்டுள்ளது.

வகுப்பறையில் பிள்ளைகள் இயக்கமின்றி அமர்ந்து ஆசிரியர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, அவர்கள் செயற்பாட்டில் ஈடுபட்டு சுயமாக இயங்கிக் கற்பது சிறந்தது என்பதற்கு அண்மைக்கால மருத்துவ ஆய்வுகளிலிருந்து ஆதாரம் கிட்டியுள்ளது. பிள்ளைகளின் கற்றல் பிரச்சினைகளுக்குக் காரணம் அவர்களுடைய கவனிக்கும் ஆற்றலில் உள்ள குறைபாடு (Attention Deficit). இதனால் ஐக்கிய அமெரிக்காவில் 50 இலட்சம் பிள்ளைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். மெதுவாகக் கற்கும் பிரச்சினை (Slow Learning ) ஏற்படக்காரணம் 'ஒரு பக்கத்து மூளை' மட்டுமே இயங்குகின்றது என மூளை தொடர்பான அண்மைக்கால ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. Brain Gymnastics எனப்படும் எளிமையான உடலியக்கச் செயற்பாடு பிள்ளைகளின் கற்றல் செயலாக்கத்தை - குறிப்பாக வாசிப்பு, எழுத்து சார்ந்த திறன்களை மேம்படுத்துகின்றது என மற்றுமொரு ஆராய்ச்சி தெரிவிக்கின்றது. Educational Kinesiology கல்விசார் உடல்தசையியல் ஆய்வு) மேலும் பல்வகை விவேகம், ஏழுவகை விவேகம் பற்றிய ஆராய்ச்சிகளும் செயற்பாட்டுக் கற்றலின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுகின்றன.

இப்பின்புலத்தில் செயற்றிட்ட முறை, மாணவர்கள் ஒன்றிணைந்து கூட்டுச் சேர்ந்து கற்றல் (Cooperative Learning ) வேலைத்தளங்களில் பயிற்சியும் அனுபவமும் பெறுதல், பங்கேற்பு முறை, பிள்ளைக்குப் பிள்ளை கற்பித்தல், புலனாய்வினூடாகக் கற்றல் என்பன வழமையான வகுப்பறைக் கற்பித்தலுக்கு மாற்றாக எடுத்துக் கூறப்படும் வகுப்பறை சாராத கற்றல் முறைகளாகும்.

- செயற்றிட்ட முறை இன்றைய பாடசாலைக்கல்வியில் ஒரு சிறு அம்சமே. ஆனால் புதிய சிந்தனையின்படி முழுப்பாட ஏற்பாடும் செயற்றிட்ட முறையை மையமாகக் கொண்டு அமைய வேண்டும். வழமையான வகுப்பறைக் கற்பித்தலை விட இதற்கு அதிக முன்னாயத்தம் தேவை. இதுவே செயற்றிட்ட முறையின் முக்கிய பிரச்சினை. அத்துடன் இதனை நடத்தி முடிப்பதிலும் பல சிரமங்கள் உண்டு. ஒரு கனேடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவப் பல்கலைக்கழகத்திலும் (McCaster University ) டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளில் உள்ள சில பல்கலைக்கழகங்களிலும் முழுப் பாட ஏற்பாடும் செயற்றிட்ட முறையை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

- கூட்டாகச் சேர்ந்து கற்றல் என்பது ஆசிரியரின் வழிகாட்டலின் கீழ் பிள்ளைகள் தங்களுக்குள் சிறுகுழுக்களாக ஊடாடி ஒருவரிடமிருந்து ஒருவர் கற்பதைக் குறிக்கும்.

- வேலைத்தளப் பயிற்சியும் அனுபவமும் என்பது சகல பொருளாதார அமைப்புகளின் ஒத்துழைப்புடன் கைத்தொழில் நிறுவனங்கள், வங்கிகள், அரச சார்பற்ற அமைப்புகள், அரசாங்க அமைப்புக்களில் நடைபெறுவது, பிள்ளைகள் வேலை உலகு பற்றிய அனுபவத்தைப் பெற இவ்வேற்பாடு உதவும். வேலைத்திறன்களைப் பெறுவதை விட அனுபவத்திற்கே முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. கிராமப் புறப் பிள்ளைகள் நவீன முறை விவசாயம், கால்நடை வளர்ப்பு பற்றிய அனுபவங்களைப் பெறுவர்.

- பங்கேற்பு முறையில் பாடசாலைகளில் இடம்பெறும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் அவற்றை ஒழுங்கமைப்பதிலும் சகல மாணவர்களும் ஈடுபடுவதைக் குறிக்கும். இச்செயற்பாடுகள் புறச் செயற்பாடுகளாகக் (Extra Curricular) கருதப்படாது பாடவேற்பாட்டுடன் இணைந்த செயற்பாடாகக் (Cocurricular) கொள்ளல் வேண்டும்.

- பிள்ளைகளுக்குப் பிள்ளை கற்பித்தல் என்னும் செயற்பாடு இந்தியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல கல்விச் செயற்றிட்டங்களிலும் சாம்பியாவின் தேசிய நிதியிலும் செயற்படுத்தப்பட்டன. வங்காள தேசத்தில் சகல ஆரம்பப் பாடசாலைகளிலும் உள்ள 3-5 தரங்களில் இம்முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வகுப்பறையில் அனைத்தும் பின்பற்றப்படும். இம்முறைப்படி பிள்ளைகள் குறிப்பிட்ட விடயத்தைப் பிற பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் நோக்குடன் ஒழுங்கமைத்தும் கொள்கின்றனர்.

**செயற்றிட்ட வகைகள்**

பிரச்சினைச் செயற்றிட்டம்

விடய ஆய்வு

இட ஆய்வு

கள நிலைச் செயற்றிட்டம்

வாழ்க்கை வரலாற்றுச் செயற்றிட்டம்

அழகியற் செயற்றிட்டம்

தற்போதைய நிலைமை பற்றிய ஆய்வு

வங்காளதேசத்தில் ஆரம்பநிலைப் பிள்ளைகளுக்குச் சுகாதாரக் கல்வியை வழங்க இம்முறை பயன்படுத்தப்படுகின்றது. யுனிசெப் (Unicef) நிறுவனம் தயாரித்துள்ள துண்டுப் பிரசுரங்களைப் பிள்ளைகள் சோடி சோடியாக இணைந்து கற்கின்றனர். பிள்ளைகள் இவ்விடயம் பற்றி வீட்டில் பெற்றோர், சகோதரர்கள், சகோதரிகள் ஆகியோருடன் கலந்துரையாடுவர். பிளஸ்லோனின் கல்வி மையம், இலண்டன் பல்கலைக்கழகத்தின் பிள்ளை சுகாதார நிறுவனம், பிரிட்டிஸ் கௌன்சில் ஆகிய அமைப்புக்கள் இக்கற்றல் முறையை ஊக்குவித்து விரிவுபடுத்தியும் வருகின்றன. இக்கற்றல் முறை பற்றி யுனெஸ்கோ ஏராளமான பிரசுரங்களை வெளியிட்டுள்ளது.

இன்றைய முறை சார்ந்த பாடசாலைக் கல்வி முறையில் இவ்வாறான கற்றல் முறைகள் பலவற்றை இலகுவான முறையில், விளையாட்டு முறை, செயற்பாட்டு முறை, குழுமுறைக் கற்றல், வெளிக்கள விஜயங்கள், கற்றலை, வரலாற்று அறிஞர்களைச் சென்று அணுகி அறிதல், விளையாட்டுப் போட்டிகளை இலக்கிய விழாக்கள், சங்க நடவடிக்கைகள் (Club Activities) என்பன சில உதாரணங்கள். ஆசிரியர்களும் பெற்றோர்களும் இவற்றில் கல்விசார் முக்கியத்துவத்தை இந்த விளக்கப்பட்ட எண்ணக்கருவாக்கத்தின் அடிப்படையில் மறுபரிசீலனை செய்தல் வேண்டும்.


**முகவரி மாற்றம்**

அகவிழி இணையத் தொடர்புகளுக்கு...

**AHAVILI**

3, Torrington Avenue, Colombo - 07.


Tel : 011-2506272 Fax : 011-2585190

E-mail : ahavili@viluthu.org Web : http://ahavili.viluthu.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரைப் பொறுத்தவரை காலனித்துவம் இன்னும் முடியவில்லை...



பேராசிரியர் வி. நித்தியானந்தம் 35 ஆண்டுகளிற்கும் மேலாக பொருளியலை கற்பிக்கும் ஆசிரியர். அதைவிட சமூகவியல் அரசியல் பொருளாதாரம் உள்ளிட்ட புலமை உசாவல்களுடன் கூடிய ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டு வருபவர். இலங்கை மட்டத்திலும் சர்வதேச மட்டத்தில் உயிர்ப்பு மிகு புலமைசார் ஊடாட்டத்தில் தீவிரமாக இயங்குபவர்.

சமீபகாலமாக தமிழர் கல்வி மீதான மாற்றுப் பார்வைகளை முன்வைப்பதில் முனைப்பாக உள்ளார்.

அகவிழிக்காக ஆசிரியர் ப. இராஜேஸ்வரன் பேராசிரியருடன் விரிவான உரையாடலை மேற்கொண்டார்.

(ஆ—ர்)

**நீங்கள் கடந்த 35 வருடங்களுக்கும் மேலாக பொருளியலைக் கற்பிக்கும் பேராசிரியராக இருந்துள்ளீர்கள். பல்வேறு ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளீர்கள். இந்த அனுபவங்களின் நிலை நின்று தமிழரின் கல்வி முறைமை பற்றித் தங்களின் துலங்கல் என்ன?**

தமிழரின் கல்வி நிலை என்கின்ற போது நீங்கள் எந்தக் காலப் பகுதி என்பதை குறிப்பிடவில்லை. ஆனால் என்னுடைய சேவைக்காலத்துடன் தொடர்புபடுத்தி கூறுவதானால் சேவை தொடங்கிய 1967ம் ஆண்டினைத் தொடக்கநிலையாகக் கொள்ளலாம். போலத் தெரியவில்லை. சற்றுப் பின்னோக்கிய நிலையின் மேற்கத்திய காலனித்துவத்தின் முடிவுக்காலம் என்று கூறலாம் என நினைக்கிறேன். காலனித்துவ முடிவு காலத்திலிருந்து ஈழத் தமிழர் மத்தியிலான கல்வி முறையைப் பார்க்கின்ற பொழுது அது இலங்கை என்ற தேசிய மட்டத்துடன் இணைந்த வகையில் தான் அது முன்னேறி வந்துள்ளது. ஆனால் கல்வி முறைமை தேசியத்துடன் இணைந்து கொண்டாலும் கூடத் தேசிய மட்டப் பொருளாதார முகாமையிலோ அல்லது தேசிய மட்டப் பொருளாதார முகாமையிலோ அல்லது தேசியமட்டப் பண்பாட்டு முகாமை என்ற வட்டத்திற்குள்ளோ தமிழர் வந்திருந்ததாகக் கூறமுடியாது. அந்த அடிப்படையில் தான் ஈழத் தமிழருடைய கல்வி முறையில் ஒரு முரண்பாடு ஏற்படுவதை உணர முடிகிறது. இத்தகைய முரண்பாடு ஆரம்ப நிலையிலேயே ஏற்பட்டு வருகின்றது. எனவே பெரும்பான்மை இனத்தவரின் கல்வி தேசியப் பொருளாதாரக் கொள்கையுடனும் பண்பாட்டுப் பரிணாமத்துடனும் ஒத்திசைவானதொன்றாயிருக்கத் தமிழர் கல்வி அவற்றுக்கு முற்றிலும் புறம்பான ஒரு நிலையில் தான் இனம் காணப்பட வேண்டிய தாயிருந்தது.

**கல்வி வரலாறு எழுதியல் என்று வரும்பொழுது சமூகப் பொருளாதாரக் கண்ணோட்டம் எந்தளவுக்கு உறுதுணையாக இருக்கும்?**

உண்மையில் கல்வி என்று வருகின்ற பொழுது சமூகப் பொருளாதாரம் தான் மூலாதாரமான தொன்றாக இருக்க வேண்டும். ஏனென்றால் கல்வியை மனித மேம்பாடு என்ற நிலையென்றும் வைத்துத்தான் நோக்குகின்றோம். மனித மேம்பாடு என்ற நிலையைப் பலவழிகளில் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். அதாவது அறநெறி சார்ந்த நிலையிலே அறிவு சார்ந்த நிலையென்றும் பொருளாதார அபிவிருத்தி சார் நிலையென்றும் கூற முடியும். எனினும் இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை எந்த ஒரு சமூகம் அடைகின்றதோ அந்தச் சமூகத்தில் ஏனைய வளர்ச்சிகள் தானாகவே ஏற்படுமென்பதாகும். மொத்த உள்நாட்டு உற்பத்திகள் ஒரு நாட்டின் அபிவிருத்தி குறிகாட்டி என்று கொள்ளுமாயின் அதற்கெதிராகக் கூறப்படுகின்ற ஒரு குற்றச்சாட்டு என்னவெனில் பொருளாதார வளர்ச்சி அல்லது அபிவிருத்தியை இன்னொரு பொருள் முதல் மீதான கண்ணோட்டத்தில் மாத்திரம் பார்க்கிறபொழுது வாழ்க்கையின் விழுமியங்கள் என்கின்ற பல்வேறு அம்சங்கள் விடுபட்டு போகின்றன என்பதாகும்.

> காலனித்துவ முறை, சுயத்திலிருந்து ஈழத் தமிழர் மத்தியிலான கல்வி முறையைப் பற்றிக் கூறின் மொழிநூ அது இல்லை என்ற ரீதியில் மட்டுந்தான் இன்னைந்த வகையில் தான் அது முன்னேறி வந்துள்ளது. ஆனால் கல்வி முறையைத் தேசியத்துடன் இணைத்துக் கொண்டேழும் க... த் தேசிய மட்டப் பொருளாதார முன்னையிலோ, அல்லது தேசிய மட்ட பொருளாதார முகாமையிலோ, அல்லது தேசியமட்ட பண்பாட்டு முகமை என்ற மட்டத்திற்குமோ ஈழத் தமிழர் வந்திருந்தார்க் கூறமுடியாது. அந்த அடிப்படையில் தான் ஈழத்தமிழருக்கு கல்வி முறையில் ஒரு முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்று உண்ர முடிகிறது. இந்த ஏனைய முரண்பாடு ஆராய நிலையில் தேசிய மட்டத்தில் வருகின்றது.

ஈழத்தமிழரை எடுத்துக் கொண்டால் தமிழ் மொழியின் வளத்தை, அவர்களது இசையின் இனிமையை, தமிழர் பண்பாட்டின் பெருமையை மொத்த உள்நாட்டு உற்பத்தி எவ்வகையிலும் பிரதிபலிக்காது. அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கொண்டு இவற்றையெல்லாம் மதிப்பிட்டு விட முடியாது. எனினும் இன்னொரு கூறுகின்ற அதே நேரத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் விழுமியங்களுக்கும் மத்தியில் நிலவியிருக்கக் கூடிய ஒரு தொலைவு இணைப்பையும் நாம் மறந்துவிடக்கூடாது. அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அதனை ஆதாரமாகக் கொண்ட பொருள் முதல் வளமும் நேரடியாக ஒரு நாட்டிலுள்ள குறிப்பிட்ட சமூகத்தின் மொழிவளம், இசை, பண்பாடு போன்றவற்றின் மீது செல்வாக்கு செலுத்துவதில்லையென்று கூறினாலும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளம், அந்த சமூகத்திற்கு எத்தனைக்கு கிடைக்கின்றதோ அத்தனைக்கு அந்தச் சமூகத்தில் ஏனைய விழுமியங்கள் அம்சங்கள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்படுவதற்கு வாய்ப்புண்டு.

உதாரணமாக அபிவிருத்தியடைந்த ஆங்கில நாட்டை எடுத்துப்பார்த்தால் ஆங்கில மொழி, இசை, பண்பாடு போன்றவையெல்லாம் ஒரு குறிப்பிட்ட தராதரத்தை அடைந்து உலகளாவிய ரீதியில் அவை அங்கீகாரம் பெறுவதற்கும் பரிந்துரைப் பொருளாதாரச் செழிப்பு முக்கிய பங்களிப்புச் செய்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. அதாவது முதலில் பொருளாதாரத்தை வளர்த்தெடுத்து அதனடிப்படையில் சமூகத்தையும் கட்டியெழுப்பிக் கொண்டபோது வேண்டப்படும் விழுமியங்களை நிறுவி அவர்களுக்கு உரிய அங்கீகாரம் பெறுவதும் சமகாலமாக சாத்தியமாயிற்று. தமிழ் மொழி, இலக்கியம், இசை என்பவை எல்லாம் பெருமை வாய்ந்தது, தொன்மை வாய்ந்தது என்று கூறினாலும் எவை நவீனமயமாக்கப்படாவிடின் அவை தமது யதார்த்த முக்கியத்துவத்தை இழந்து விடும். அதாவது காலத்திற்கேற்றவாறு நவீன உத்திகளைக் கையாண்டு அவை மறு உயிர்த்துடிப்புடன் பேண வேண்டியது அவசியமாகும். அவ்வாறு செய்வதற்கு உரிய அளவான முதலீடுகள் வேண்டப்படுகிறபடியால் அத்தகைய முதலைத் தேவையை உற்பத்தியிலான மிகை வாக்கம் தான் பூர்த்தி செய்ய வேண்டும்.

அவ்வாறு நோக்குமிடத்து ஈழத் தமிழரும் தமது சமூகப் பொருளாதார மேன்மையை எத்தளவுக்கு அதிகரிக்க முடியுமோ அதற்கேற்ப மொழி, பண்பாடு மற்றும் விழுமியங்கள் என்பவையும் வளர்ச்சியடையும் என்பதில் சந்தேகம் இல்லை. வெளிநாடுகளிற் சென்று குடியேறியிருக்கும் ஈழத் தமிழர் அதிகரித்த உற்பத்தி என்பவை சிறந்த விழுமியங்கள் உருவாக்க முடியுமென்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றனர். அவர்கள் உள்நாட்டவரிடம் இல்லாத விழுமியங்களையும் பழக்க வழக்கங்களையும் முன்னெடுப்பதையும் ஆதாரமாகக் கொண்டு அவர்கள் வளர்ச்சியடை நத சமூகத்தின் ஒரு பகுதியாக மாறி இருப்பதையும் கண்டு கொள்ள முடிகிறது. ஆகவே ஈழத்தமிழரின் தாயகத்திலும் பொருள் முதல் அபிவிருத்தியையும், அதனுடன் இணைந்த சமூக அபிவிருத்தியையும் நிறுவிக் கொள்ள முடியுமாயின் அச் சமூகமும் மிகுந்த முன்னேற்றமுள்ள தொரு சமூகமாக எழுச்சியடையுமென்பதில் சந்தேகமில்லை.

**காலனித்துவ ஆட்சி ஏற்பட முன்னர் நிலவிய கல்வி முறையும் அது சார்ந்த பொருளாதாரமும் எவ்வாறு மாற்றமடைந்துள்ளன?**

காலனித்துவ முறைக்கு முன்னர் என்று கூறுகின்ற பொழுது ஈழத்தமிழரைப் பொறுத்தவரை காலனித்துவம் இன்னும் முடியவில்லை என்றே கூற வேண்டும். ஒரு நேரம் மேற்கத்திய காலனித்துவம் நிலவி இருந்ததென்றால் அதைத் தொடர்ந்து சிங்கள காலனித்துவம், அதாவது சிங்களக் காலனித்துவம் என்பது நிலைத்துள்ளது. தமிழர் கல்வி முறை இந்தக் காலனித்துவ வரையறைக்குள் தான் இன்னமும் வளர்ச்சியடைந்து வருகின்றது. 1833 ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோல்புறூக் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து ஆங்கில மொழி பணித்துறை மொழியாக இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனால் தொழில் வாய்ப்புகள் தெற்கில் பெருகிய நிலையில் அதனைப் பயன்படுத்திய சாராரில் ஈழத்தமிழர், அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர் முன்னணியில் நின்றனர். ஏனெனில் அவர்கள் மிசனரிமாரின் கல்விச் செயற்பாடுகள் காரணமாக ஆங்கில மொழி அறிவினை ஏற்கனவே பெற்றுக் கொண்டவர்களாயிருந்தனர்.

உண்மையில் ஈழத்தமிழர் வாழ்ந்திருக்கின்ற பிரதேசங்களுக்கு அப்பால் தான் கல்வியின் மூலமான பயன்பாட்டின் பிரயோகம் கூடியளவிற்கு இடம்பெறுகின்றது. அந்த வகையில் காலனித்துவத்திற்கும் கல்வி வளர்ச்சிக்குமிடையிலான அல்லது கல்வி உருமாற்றத்திற்குமிடையிலான தொடர்பு இன்னமும் நீடித்த வண்ணம் உள்ளது என்றே கூறலாம்.

எனவே அவர்கள் தமது பகுதிகளிலிருந்து வெளியேறி இலங்கையின் இதர பகுதிகளில் தொழில் வாய்ப்புப் பெறும் நிலை ஏற்பட்டது. இந்நிலை இன்றுவரை நீடித்துள்ள தொன்றாயினும், இன்று தனியே அரச பணித்துறைப் பதவிகளுக்கு மாத்திரமன்றிப் பலவித வேலை வாய்ப்புகளுக்கும் ஈழத்தமிழர் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேற வேண்டியுள்ளது. ஆனால் ஆங்கிலம் வேண்டுமென்ற கோஷமும் , தமது சொந்தச் சகபாடிகளுக்கன்றி ஏனையோருக்குச் சேவை செய்வதென்பதும் எவ்வகையிலும் மாறவில்லை.

***காலனித்துவக் கல்வி முறைக்கும் மரபுவழிமுறைக் கல்வி முறைக்கும் மத்தியில் பொருளியல் நோக்கில் இனம்காணப்படக் கூடிய வேறுபாடுகள் யாவை?***

காலனித்துவ கல்வி முறை என்று கூறுவது சரி. மரபுரீதியான கல்வி முறை என்ற நீங்கள் கருதுவது எதுவெனக் எனக்கு சரியாகப் புரியவில்லை. அதாவது மரபு முறை என்று கூறுகின்ற பொழுது சாதாரணமாக ஏனைய நாடுகளில் உள்ள கல்வி முறையை நீங்கள் கருதுகிறீர்களா, அல்லது எங்களுடைய பண்பாட்டுடன் இணைந்து வருகின்ற கல்வி முறையை கருதுகிறீர்களா என்பது தெளிவாக இல்லை. மரபு ரீதியான கல்வி முறை என்பதைப் பொருளாதார ரீதியான ஒரு கோணத்தில் எடுத்துக் கொண்டு அதற்கு விடை கூறலாமெனக் கருதுகின்றேன்.

*கல்வி என்று வருகின்ற பொழுது சமூகப் பொருளாதாரம் தான் மூலாதாரமான தொன்றாக இருக்க வேண்டும். ஏனென்றால் கல்வியை மனித மேம்பாடு என்ற நிலையென்றும் வைத்துத்தான் நோக்குகின்றோம். மனித மேம்பாடு என்ற நிலையைப் பலவழிகளில் பார்க்க முடியும். அதாவது அறநெறி சார்ந்த நிலையே அறிவு சார்ந்த நிலையென்றும் பொருளாதார அபிவிருத்தி சார் நிலையென்றும் கூற முடியும். எனினும் இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை எந்த ஒரு சமூகம் அடைகின்றதோ அந்தச் சமூகத்தில் ஏனைய வளர்ச்சிகள் தானாகவே ஏற்படுமென்பதாகும்.*

பொருளியல் அடிப்படையில் மரபு ரீதியான கல்வி என்று கூறுகின்ற பொழுது அது உண்மையில் ஒரு நாட்டின் மனித மூலதனத்தைக் கட்டியெழுப்புவதைக் குறித்து நிற்கும். மனித மூலதனமானது மக்கள் கற்றுக் கொள்ளும் கல்வி, பெற்றுக் கொள்ளும் பயிற்சி, திரட்டிக் கொள்ளும் அனுபவம் என்பவற்றின் மூலம் ஆக்கப்படுவதொன்றாகும். ஒரு நாட்டில் உள்ள இயற்கை வளங்களை பயன்படுத்தியும் பௌதிக வளங்களை ஆக்கி அவற்றைக் கொண்டும் அவற்றை உரிய தொழில் நுட்பத்துடன் இணைத்து உற்பத்தியை மேற்கொள்ளலாம். மனித மூலதனம் இல்லாமல் இயற்கை வளத்தைப் பொருளியல் ரீதியாகப் பெயர்ப்பதோ அல்லது பௌதிக மூலதனத்தை உற்பத்தி நோக்கித் திருப்பி விடுவதோ அல்லது தொழில் நுட்பத்தைப் பௌதிக மூலதனம் , இயற்கை வளம் என்பவற்றுடன் சேர்த்து மக்களுக்கு வேண்டிய வகையில் சேவைசெய்யுமாறு பயன்படுத்திக் கொள்வதோ முடியாத ஒரு காரியம். இதுவே பொருளியல் ரீதியாக மரபு ரீதியான கல்வி என்பதற்குக் கொடுக்கின்ற விளக்கம் எனலாம்.

ஆனால் காலனித்துவக் கல்வி முறைமை எதிர்பார்க்கைக்கு ஏற்றதொரு வகையில் இயங்குவதற்கு இடம் கொடுக்கவில்லை. காலனித்துவக் கல்வி முறையின் கீழ் மனித மூலதனம் ஏதோ வகையில் ஆக்கப்படுகின்றது. கல்வி எப்பொழுது ஏதாவது ஒரு வகையில் ஆக்கப்படுகின்றதோ அப்பொழுதே மனித மூலதன ஆக்கச் செய்முறையும் தொடங்கி விடுகின்றது. உருவாக்கப்படும் மனித மூலதனத்தின் வகை வேறுபட்டு, இருக்கலாம். ஆனால் மனித மூலதனம் எப்பொழுது ஆக்கப்படுகின்றதோ அப்பொழுதே மனித மூலதன ஆக்கத் செய்முறையும் தொடங்கி விடுகின்றது. உருவாக்கப்படும் மனித மூலதனத்தின் வகை வேறுபட்டு இருக்கலாம். ஆனால் மனித மூலதனம் ஆக்கப்படுகின்றது எனினும் மனித மூலதனம் சூழவுள்ள இயற்கை வளங்கள், ஆக்கப்படும் பௌதீக மூலதனம் உள்வாங்கக் கூடிய தொழில்நுட்ப அறிவு என்பவற்றுடன் இணைந்து மக்களுக்கு உண்மையில் வேண்டப்படுகின்றது. உற்பத்தியை ஆக்குகின்றதாவெனில் அவ்வாறு அது செய்யவில்லை. ஏற்கனவே நான் கூறியதுபோல இந்த மனித மூலதனம் எமது தாயகப் பிரதேசத்திலன்றிப் பிறிதொரு பகுதிக்கு அதாவது தெற்கிற்கோ அல்லது இன்றைய நிலையில் பிற புலம்பெயர் நாடுகளுக்கோ எடுத்துச் செல்லப்பட்டு அங்குதான் பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றது. ஆகவே இவ்வாறானதொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாட்டை மரபு நிலைக்கல்வி முறைக்கும் காலனித்துவ கல்வி முறைக்குமிடையில் காண முடிகின்றது.

**தமிழ்ச் சமூகம் விஞ்ஞானக் கல்வியைத் தனது பிரதான குறியாக ஏன் தேர்ந்தெடுத்தது? சமூக விஞ்ஞானக் கல்வியை ஏன் புறக்கணித்தது? இதனை நீங்கள் எவ்வாறு புரிந்து கொள்கிறீர்கள்?**

ஈழத்தமிழர் மத்தியில் விஞ்ஞானக் கல்விதான் கூடியளவுக்குப் பிரபல்யம் பெற்றுள்ளதென்பது ஒரு பொது அவதானம். அதுவே கூடியளவுக்கு மக்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துள்ளது என்றும் கூறமுடியும். அல்லது இன்னொரு வகையிற் கூறுவதாயின் தமிழ்மக்களுடைய திறமை அதில் தான் கூடியளவுக்கு வெளிப்பட்டு நிற்கின்றதெனலாம். அவ்வாறு கூறுகின்ற பொழுது சமூக விஞ்ஞானக் கல்வி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டதென்றும் கூற முடியாது. ஏனெனில், எண்ணிக்கை ரீதியாகப் பார்த்தால், அதாவது புள்ளிவிபர ரீதியில், விஞ்ஞானப்பட்டதாரிகளை விடச் சமூக விஞ்ஞானத் துறைகளில் பட்டம் பெற்றவர்களே அதிகம் என்பது தான் யதார்த்தம்.

> **ஈழத்தமிழரைப் பொறுத்தவரை காலனித்துவம் இன்றும் முடிவுறவில்லை என்றே கூற வேண்டும். ஒரு நேரம் மேற்கத்திய காலனித்துவம் நிலவி இருந்தபோதெல்லாம். அந்தத் தொடர்ந்து நிலவிய காலனித்துவம் அதாவது சிங்களக் காலனித்துவம் என்பது நீடித்துவிடும் தமிழர் கல்வி முறை இந்தக் காலனித்துவ வரைமுறைக்குள் தான் இன்றும் வளர்ச்சியடைந்து வருகின்றது. 1956 ஆண்டு தேசியமொழி சிங்களத்தைத் தொடர்ந்து ஆங்கில மொழியைத் தாண்டி தேசியமாக இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனால் தொழில் வாய்ப்புகள் குறுகிவிடுகிறது. சிங்களவர் அதனைப் பயன்படுத்தி சாராரின் சலுகையில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர் முன்னணியில் நின்றனர். எனினும் அவர்கள் மிஷனரிமாரின் கல்விச் செயற்பாடுகள் காரணமாக ஆங்கில மொழி அறிவினை முன்னேற்ற பெற்றுக்கொண்டவர்களாக இருந்தனர்.**

எனினும் சமூக விஞ்ஞானத்தின் பங்களிப்பு உண்மையில் பட்டதாரிகள் என்ற மட்டத்தில் அல்லது அதற்குக் குறைந்ததொரு மட்டத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட ஒரு சாராரை ஆக்கிக் கொடுப்பதுடன் மட்டுப்படுத்தப்பட்டு வருகின்றதெனலாம். அதற்கு மேலாகச் சென்று ஈழத்தமிழரின் திறமையை வெளிக்கொணரும் வகையிற் சமூக விஞ்ஞானிகளை உருவாக்குகின்றது எனக் கூற முடியாது. அதற்குரிய காரணம் நான் முன்பு சொன்னவற்றிலிருந்து தான் புலனாகின்றது. அதாவது ஈழத் தமிழர் கல்வியை மரபுரீதியான ஓர் அணுகுமுறைக்குள் உட்படுத்தத் தவறியிருந்த நிலையில் கல்வியைத் தங்களுடைய பிரதேசத்துக்கு அப்பால் கொண்டு சென்று பயன்படுத்துவதற்குரிய வாய்ப்புக்களைத் தேடுவதொன்றாகத்தான் நோக்கினர். அவ்வகையில் விஞ்ஞானக் கல்விதான் அந்த வாய்ப்பினை அவர்களுக்குத் தரக் கூடியதாயிருந்தது. முந்நிலை 1956 ம் ஆண்டுக்குப்பின்பு 1960 களிலும் 1990 களிலும் மேன் மேலும் கூர்மையடைந்து வந்திருப்பதை அவதானிக்க முடியும்.

ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்று, கொண்டு விஞ்ஞானக் கல்வியைக் கற்றவர்கள் காலத்தில் தொழில் வாய்ப்புக்களைப் பெற முடிந்தது. மருத்துவம், பொறியியல், உயிரியலின் கீழ் வருகின்ற ஏனைய துறைகளான விலங்கியல், விவசாயம் போன்ற வாண்மைப் பாடநெறிகளைப் பயின்றோர் சமூக விஞ்ஞானத்தைக் கற்றவர்களை விடக் கூடியளவு தொழில்வாய்ப்புக்களைப் பெறக்கூடிய தகைமை பெற்றவர்களாக விளங்கினர். ஈழத் தமிழருக்கு (தமது தாயகத்துக்கு அப்பால் கூட) தொழில் வாய்ப்புக்கள் ஏனைய மட்டங்களில் அருகியிருந்த நிலையில் இவற்றை நோக்கியே அவர்களுடைய கவனம் கூடியளவுக்குத் திரும்பியது. கல்வி என்பது நெறிமுறைசார் அறிவுக்காகவோ, அல்லது பிரதேசத்துடன் ஒன்றிய பொருளாதார மேம்பாட்டிற்கான மனித மூலதனமாகப் பார்க்கப்படுவதற்காகவோ இல்லாமல் வெளியே எடுத்துச் சென்று அதன் நன்மைகளைப் பெற வேண்டுமென்பதாக வெளியே எத்தகைய கல்விக்கு வாய்ப்பு அதிகமோ அந்தவகையான கல்வியைத்தான் மக்கள் நாடி நின்றனர்.

இத்தகைய பரிணாமத்தின் ஒரு தொடர்ச்சியாகத்தான் ஆங்கிலத்தில் கல்வி கற்க வேண்டும் (ஆங்கில அறிவு விருத்தி என்பதல்ல) என்ற சில வகைக் கூக்குரல்களும் ஒலிக்கின்றன. மற்றவர்களுடைய தேவை என்பதனூடாகத் தான் எமது தேவை என்ன? என்பது நோக்கப்படுகின்றது. எமது பிரதேசத்தின் எமது வளங்களைப் பயன்படுத்தி என்னவாறு செய்யப்பட்டதென்று? அத்தகைய வெளி நோக்கிய பார்வையினால் விஞ்ஞானக் கல்வி முன்னிலைபெற்று வந்தது. இதனால் சமூக விஞ்ஞானக் கல்வி ஏன் தாழ்வடைய வேண்டுமெனக் கேட்பின் அதற்கு இன்னொரு விளக்கத்தையும் கொடுக்கலாம். பொருள்முதல் நன்மையினால் உந்தப்பட்டு எல்லோரும் விஞ்ஞானக் கல்வியை நாடிச் செல்கின்ற பொழுது அத்தகைய தகைமை எல்லோருக்கும் இல்லாதவிடத்தும் பாடசாலை மட்டத்தில் விஞ்ஞானப் பாடநெறிக்கு அனுமதி பெற்றோர் அல்லது அப்பாடத் துறையில் திறமையும், தகைமையும் அற்றவர்கள் சமூக விஞ்ஞானத்திற்குள் வந்து விழுவதைக் காணலாம். ஏனைய துறைகளுக்கு பொருந்தாதவர்களைக் கொட்டுகின்ற ஒரு தொட்டி போன்று ஈழத்தமிழரைப் பொறுத்தவரையில் சமூக விஞ்ஞானக் கல்வித்துறை வளர்ந்துள்ளது. அதனால் அதனை நாடுவோர் ஒரு குறிப்பிட்ட தகைமையை எட்டியபின்பு அதனைத் தொடர்ந்து கற்று இன்னும் மேலாகச் சென்று சமூக விஞ்ஞானிகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றஆர்வம் குன்றியவர்களாக் காணப்பட்டனர். எனவே திறமையின் வெளிப்பாடு என்பதாக அத்தகைய ஒரு செல்நெறி வளர்ச்சியடையவில்லை. அதன் விளைவாகவே ஏராளமான சமூக விஞ்ஞானப் பட்டாதாரிகள் அல்லது சமூக விஞ்ஞானக் கல்வி கற்றோர் உருவாக்கப்பட்டிருக்கின்றனேரேயன்றிச் சமூக விஞ்ஞானிகள் உருவாக்கப்படவில்லை. ஏனைய சமூகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது எங்கள் மத்தியில் சமூக விஞ்ஞானிகளின் தொகையும் அவர்களது பங்களிப்பும் குறைவாகவே உள்ளது. மறுபுறம் இயற்கை விஞ்ஞானிகள் அதிகமாக உருவாகி உள்நாட்டில் மாத்திரமன்றி உலகில் நாலாபக்கங்களிலும் தொழில் செய்வதையும் கண்கூடாகக் காண முடிகின்றது.

**இன்று உயர்கல்வியின் உச்சங்களை ஆங்கில மொழியின் துணையின்றித் தொட முடியுமா?**

ஏற்கனவே கூறப்பட்ட விடைகளில் ஓரளவு இதற்குரிய விடையும் வெளிப்பட்டுள்ளது. ஈழத்தமிழரைப் பொறுத்தவரையில் கல்வியை அறிவு விரிவாக்கம் என்ற ஒரு நிலையில் அல்லது தமது தாயகப் பகுதியின் பொருளாதார முன்னேற்றம் என்ற நிலையில் அணுகாது பெருமளவுக்குத் தங்களுக்குத் தொழில் வாய்ப்பை வேறொரு தளத்தில் தரக்கூடிய ஒரு கருவி என்ற முறையில் தான் நோக்கியிருந்த காரணத்தினால், அக்களத்தில் எத்தகைய கல்வி மூலம் அதிக முன்னேற்றம் காண முடியுமென்பதை இனங்கண்டு, அத்தகைய கல்வியைக் கற்க முற்பட்டார்கள். அது மாத்திரமன்றி அந்தக் கல்வியை எந்த முறையிற் கற்றுக் கொண்டால் கூடியளவுக்கு நன்மைகளைப் பெறமுடியுமென்று கண்டு கொண்டார்களோ அந்த முறையிலேயே கற்றுக் கொள்ள முற்பட்டனர். அவ்வாறான உரிய முறை என்பதில் எந்த மொழியிற் கற்பதென்பதும் ஒன்றாகும் அதன் விளைவாகவே ஆங்கிலத்தைக் கல்வி மொழியாகத் தெரிவு செய்தமையாகும். இதனைக் காலனித்துவ ஆட்சி ஊக்குவித்ததென்பதிலும் மறுப்பில்லை. பிரித்தானியர் 1833 கோல்புறூக் சீர்திருத்தங்களை இலங்கையில் அமுல்படுத்திய போது அந்த அமுலாக்கத்தில் கல்வி சீர்திருத்தமும் ஒரு முக்கிய பகுதியாகும். ஈழத்தமிழர் விடயத்தில் அது பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய தொன்றாயிருந்தது. பிரித்தானியர் தமது பணித்துறையைக் கட்டியெழுப்பச் சிக்கனமான வழிமுறைகளைத் தேடிய பொழுது ஆங்கிலத்தில் கல்வி கற்றவர்களை அதற்கென அமர்த்திப் பணித்துறையை முன்னெடுத்துச் சென்றனர்.

கல்வியை எந்த முறையிற் கற்றுக் கொண்டால் கூடியளவுக்கு நன்மைகளைப் பெற முடியுமென்று கண்டு கொண்டார்களோ அந்த முறையிலேயே கற்றுக் கொள்ள முற்பட்டனர். அவ்வாறான உரிய முறை என்பதில் எந்த மொழியிற் கற்பதென்பதும் ஒன்றாகும் அதன் விளைவாகவே ஆங்கிலத்தைக் கல்வி மொழியாகத் தெரிவு செய்தமையாகும். இதனைக் காலனித்துவ ஆட்சி ஊக்குவித்ததென்பதிலும் மறுப்பில்லை. பிரித்தானியர் 1833 கோல்புறூக் சீர்திருத்தங்களை இலங்கையில் அமுல்படுத்திய போது அந்த அமுலாக்கத்தில் கல்வி சீர்திருத்தமும் ஒரு முக்கிய பகுதியாகும்.

ஈழத்தமிழரின் தொழில்வாய்ப்புப் பொறுத்து ஆங்கில மொழியைக் கற்பதன் மூலம் அத்தகைய வாய்ப்புக்கள் கிடைப்பதை உத்தரவாதப்படுத்தமுடியும். இன்னமும் முனைப்புடன் இறுக்கிப் பிடித்துக் கொண்டுள்ளனர். ஆனால் ஆங்கிலத்தில் கற்பது மனித மூலதனத்தை விரிவாக்கும். அதுவும் உத்தம நிலையில் விரிவாக்கும் என்று பார்க்கின்ற பொழுது ஒரு முரண்பாடு தோன்றுவதை அவதானிக்கலாம். எந்த ஒரு சமூகமும் மனித மூலதனத்தை உத்தம நிலையிற் பேணுவதன் மூலம் தான் நன்கு முன்னேற முடியும்.

முந்திய ஒரு வினாவில் முன்வைக்கப்பட்ட மரபு ரீதியான கல்வியினது எதிர்பார்க்கை அதுவேயாகும். அவ்வாறு மனித மூலதனத்தை உத்தமநிலையிற் பேணுவதாயின் நாட்டிலுள்ள மொத்த சனத்தொகை யில் ஆகக் கூடிய சதவீதத்தினர், முடியுமாயின் நூற்றுக்கு நூறு வீதத்தினரும் கல்வியறிவைப் பெறக் கூடியவாறு கல்வி வாய்ப்புக்கள் அமைந்திருக்க வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தாய்மொழிக் கல்வி தவிர வேறு மொழியொன்று இருக்க முடியாது. ஏனெனில் அதுவே அவர்களுக்கு தனிப்பட்ட முறையிலும் சமூக ரீதியாகவும் ஒன்றிணைத்து மிக இயல்பான முறையில் வழங்கப்படக்கூடிய ஒன்றாகும். இவ்வாறு தாய்மொழிக் கல்வியை வழங்கிஅதன் மூலம் அறிவை விரிவாக்கி மனித மூலதனத்தையும் கட்டியெழுப்புகின்ற பொழுது ஏராளமான மக்கள் நன்மையடைந்து மனித மூலதனமும் உத்தம நிலையிற் பேணப்படும்.

ஆனால் மாறாக ஆங்கிலம் போன்ற பிறிதொரு மொழி மூலம் கல்வியைக் கொடுக்கின்ற போது நாட்டின் அனைத்து மக்களுக்கும் சமவாய்ப்புக்களை கொடுப்பது என்பது எந்த விதத்திலும் நடைமுறையில் இடம் பெற முடியாததொன்று. இலங்கையோ ஈழத்தமிழ்ச் சமூகமோ அதற்கு விதிவிலக்காக அமைய முடியாது. தாய்மொழிக்கல்வி தவிர்ந்த பிறமொழிக் கல்வி மக்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துவதாகவே அமையும். இது சமூகமொன்றின் அபிவிருத்தியை நீண்ட காலத்தில் உத்தரவாதப் படுத்துமெனக் கூறமுடியாது. ஆங்கில மொழியிற் கற்பது ஒரு குறுகிய காலத்தில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள உதவியுள்ளது. அதுவும் எமது பிரதேசத்துக்கு அப்பாலேயே தொழில் வாய்ப்புக்களைத் தந்துள்ளதென்பதையும் உணர-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஆங்கில மொழியைக் கற்பது என்ற விடயத்தில் மிக ஆழப் புதைந்திருக்கின்ற உண்மை இதுவேயாகும்.

எனினும் ஆங்கிலம் கட்டாயமாக்கப்படுகிற காலம் என்பது ஈழத் தமிழர்களை பெரு நிலைக்கு வந்திருக்கின்ற காரணத்தினால் அதனைப் பலரும் தவறவிட்டனர். ஆனால் எந்த ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திலும் நீண்ட காலம் என்று அர்த்தமொன்றுள்ளது. அதன் எதிர்பார்க்கைகள் அச்சமூகம் குறுகிய காலத்தில் கற்கவியலாத எதிர்கொள்ளக் கூடிய நிலைகளை விட மாறுபட்டவையென்பதைக் கருத்திலெடுப்பது அவசியமாகும். இந்தப் பொதுவிதிக்கு அமைவாகத் தான் விரைந்து அபிவிருத்தியடைந்த பல உலக நாடுகள் அனைத்தும் தத்தம் தாய்மொழியிலேயே கல்வி வழங்கி மனித மூலதனத்தைக் கட்டியெழுப்புகின்றன. முதல் நிலையில் அபிவிருத்தியடைந்த வல்லரசு நாடுகள் உட்பட சீனா, ஜப்பான், தென்கொரியா, ஸ்கண்டினேவிய நாடுகளாகிய நோர்வே, சுவிடன், டென்மார்க், போன்றவற்றையெல்லாம் அதற்கான எடுத்துக்காட்டுக்களாகக் கொள்ள முடியும்.

உயர் கல்வியின் உச்சங்களைத் தொடுவதற்குக் கல்வியைத் தாய் மொழியிற் கற்கும் அதே சமயம் அறிவை நன்கு விரிவாக்கிக் கொள்வதற்கு வாய்ப்பாக முக்கியமாக ஆங்கிலத்தையும் தேவையான பிறமொழிகளையும் கற்றுக் கொள்வது அத்தியாவசியமானது. அதன் கருத்து யாதெனில் ஓர் இரண்டாவது மொழி என்ற தரத்தில் ஆங்கிலத்தின் முக்கியத்துவம் எவ்வகையிலும் மறுக்க முடியாததொன்றென்பதேயாகும்.

எனினும் முன்வைக்கப்பட்ட வினா, உயர்கல்வியின் உச்சங்களைத் தொடுவதென்பது சாத்தியம் தென்பதால், உயர் கல்வியின் உச்சங்களைத் தொடுவதற்குக் கல்வியைத் தாய் மொழியிற் கற்கும் அதே சமயம், அறிவை நன்கு விரிவாக்கிக் கொள்வதற்கு வாய்ப்பாக முக்கியமாக ஆங்கிலத்தையும் தேவையான பிறமொழிகளையும் கற்றுக் கொள்வது அத்தியாவசியமானது. அதன் கருத்து யாதெனில் ஓர் இரண்டாவது மொழி என்ற தரத்தில் ஆங்கிலத்தின் முக்கியத்துவம் எவ்வகையிலும் மறுக்க முடியாததொன்றென்பதேயாகும்.

பொருளாதார வரலாறு அவர்கள் தமது சொந்த அரசை வைத்திருந்த காலத்தில் தமது வர்த்தகத்தினூடாகச் செழிப்பைக் கட்டியெழுப்பிக் கொண்டமை போதியளவான ஆதாரங்கள் உண்டு. உதாரணத்திற்கு யாழ்ப்பாண இராச்சியம் வீழ்ச்சியடைந்த பின்பு கூட ஒல்லாந்தர் காலம் வரை அவர்கள் வர்த்தகத்தினூடாகப் பெருவளமை மேம்பாடடைந்திருந்தமையைப் பேராசிரியர் அரசரெட்ணம் அவர்களுடைய ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இவ்வாறு அன்று வர்த்தகத்திற்குப் பயன்பட்ட தமிழ்மொழி இன்றைய டும் பயன்பாடற்றதென்று கொள்வது தர்க்கரீதியாக ஏற்றுக் கொள்ள முடியாததொன். அவ்வகை நுறையாதும் வர்த்தக சிறப்பு எப்போது தோன்றியதென நோக்கில், அது ஒல்லாந்தர் தமிழர் வர்த்தகத்தின் இடையூறாக அமைந்து தமிழருக்கு நன்மை கிடைப்பதைத் தடுக்க முற்பட்டமையின் விளைவினாலேயாகும். உள்நாட்டவர் பெற்றுக் கொண்டிருந்த நன்மைகளையும் தம்பக்கம் திருப்பி விடுவதே இந்தத் தடைகளின் பிரதான நோக்கமாயிருந்தது. அதன் போது, நன்கு சிந்தியாது மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள் ஒல்லாந்தருக்கு எதிர்பார்த்த நன்மைகளைக் கொடாது மறுதலை விளைவுகளை ஏற்படுத்தியமையையும் கண்டு கொள்ள முடியும். அதற்கு சில உதாரணங்களைக் காண முடியும். அவற்றுள் ஒன்று பருத்தியை பயன்படுத்தி உடுதுணி உற்பத்தி செய்யும் கைத் தொழில் பிரபல்யம் பெற்றிருந்தது. அதனால் தான் உயர் செலவில் உற்பத்தி செய்து கொண்டு வருகின்ற துணிகளை விற்க முடியாது இருப்பதைக் கண்டு கொண்ட ஒல்லாந்தர் உடுதுணி மீது அதிகளவான வரியை விதித்து அதன் விலையை உயர்த்தி விட்டனர்.

இந்நிலையில் தமது துணிகளுக்கும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளுக்கும் சந்தையில் எந்த வித்தியாச வேறுபாடுமின்றி விலை சமநிலை அடையுமெனத் தமது பொருட்களுக்குக் கேள்வி அதிகரிக்குமென எதிர்பார்த்தனர். ஆனால் இந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவில்லை. முன்னரில் உள்நாட்டில் உற்பத்தியாக்கிய உடுதுணி, தமிழர் பகுதிகளில் நிலவியிருந்த தேவை, காலநிலை போன்றவற்றைக் கருத்திலெடுக்காது இறக்குமதி செய்யப்பட்டவற்றை விடத் தரமான துணியினால் ஆக்கப்பட்டதாக இருந்தமையால் மக்கள் அவையையே விரும்பி வாங்கினர். எனவே வெளிநாடுகளில் இருந்துவந்தவை சமமான விலையில் விற்கப்பட்ட போதும் அவற்றுக்குப் பெருமளவு கேள்வி இருக்கவில்லை. ஆனால் வரி காரணமாக உற்பத்தியில் நிலைத்திருக்க முடியாதவர்கள் அதனைக் கைவிட்டு வன்னிப் பிரதேசங்களுக்கு குடிபெயர்ந்தனர். அதன் காரணமாக ஏற்றுமதிகளில் இருந்து கிடைத்த வருமானம் டச்சுக்காரருக்கும் கிடைக்காமல் போகவே நிலைமையை முற்றாகவே அகற்றி உடுதுணி உற்பத்தியை அனுமதித்ததையும், அதன் பின் வன்னிக்குச் சென்றவர்கள் மீள வந்து தமது தொழில்களை ஆரம்பித்தமையையும் காணலாம். இது ஈழத் தமிழரின் பொருளாதார வரலாற்றின் ஒரு சிறு மாத்திரமே. இது போன்ற ஏனைய உதாரணங்களையும் காட்ட முடியும். ஆகவே செயற்கைக் கட்டுப்பாடுகள் தான் ஈழத்தமிழரின் வர்த்தகத்தைச் இல்லாதொழித்ததன்றி தமிழ்மொழி வர்த்தகத்துக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியல்ல என்பது காரணமாயிருக்கவில்லை. ஆனால் நீங்கள் கேட்ட இன்றைய உலகமயமாக்கத்துடன் இணைத்துப் பார்க்கின்ற பொழுது ஆங்கிலம் தான் மிக முக்கியமான மொழியாக இருக்கின்றது என்பதிற் சந்தேகமில்லை.

எனினும் வர்த்தகத்தினது அடிப்படைத் தத்துவம் அது ஒப்பிட்டு நன்மைகள் தத்துவம் என்பதாகும். இந்த தத்துவத்தின் அடிப்படை உள்ளீடு யாதெனில் எல்லாரும் ஒன்றையே செய்து கொண்டு இருந்தால் ஒப்பீட்டு நன்மைகளின் பலனைப் பெற்றுக் கொள்ள முடியாது என்பதேயாகும். ஆகவே எல்லாவற்றிலும் முழுநிலை நன்மை படைத்த ஒரு நாடு கூட முழுநிலை நன்மை உண்டாகுவதற்காகத் தானே எல்லாவற்றையும் (உற்பத்தி) செய்து நன்மை பெறுவதென்பது துர்லபம். மாறாக எல்லா வகையான சாத்தியங்களிலும் எதில் ஒப்பீட்டு நன்மை அதிகமாகியுள்ளதோ, அதனைத் தான் செய்து கொண்டு ஏனையவற்றை மற்றவர்களுக்கு விட்டு விடுவதன் மூலம் தான் தானும் நன்மையடைந்து மற்றவர்களும் நன்மையடைவதனால் மொத்த நன்மைகள் பெருகுகின்றன.

மொழி விடயத்திலும் ஒப்பீட்டு நன்மைகளின் தத்துவம் செயற்படுமென்றே நான் கருதுகின்றேன். எல்லாரும் பயன்படுத்துகின்ற ஆங்கிலமெனின் வர்த்தக அனுபவங்களைப் பூரணமாக எடுத்துக் கொள்ளாது. தமிழ் மொழிகள் வர்த்தக அலுவல்களை எமது பிரதேசத்தில் மேம்படுத்துவதன் மூலம் எமது நன்மையைப் பெருக்கி மொத்த நன்மைகளை விரிவாக்கிக் கொள்ள முடியும். இந்த ஒரு பணியில் தான் புதிய கைத்தொழில் மயவாக்கத்திற்குட்பட்ட ஆசிய நாடுகளாகிய தென்கொரியா, தாய்லாந்து, மலேசியா, தாய்வான் என்பனவும் ஏன் சீனாவும் ஜப்பானும் கூட நன்மையடைந்துள்ளனவெனலாம். அவர்கள் எல்லாரும் தத்தம் மொழியைதான் பயன்படுத்துகின்றார்கள். எனினும் வசதி கருதி ஆங்கில மொழியை இரண்டாவது மொழியாக் கொள்ளவும் அவர்கள் தவறவில்லை. இங்கு முக்கியமானதென்னவெனில் உள்ளதை உள்ளவாறு முழுநிலையில் ஏற்றுக் கொள்ளாது, யதார்த்த நிலைமையின் நன்மைகளை எவ்வகையிலும் விட்டுக்கொடாது, வேண்டப்படும் சிலவகைச் சரிப்படுத்தல்களை மேற்கொண்டு எமது மட்டத்திலான நன்மைகளையும் எடுத்துக் கொள்வதாகும்.

இது விடயத்திற் சீனாவின் அனுபவம்சிறப்பாக நோக்கற்பாலது மொழி விடயத்தில் மாத்திரமன்றிப் பொருளாதார நன்மை விடயத்திலும் தற்போதைய உலகமயமாக்கச் சூழலுக்கேற்பத் தனது சமவுடைமை அரசியல் சித்தாந்தத்தைக் கூடச் சரிப்படுத்தல்களுக்குட்படுத்தி அரசியல் மட்டத்தில் எதுவிதத்திலும் அதனை விட்டுக் கொடுக்காது. பொருளாதார மட்டத்திலிருந்து அரசியல் பொருளாதாரம் என்ற எண்ணக்கருவினை நன்குணர்ந்து அவர்கள் செயலாற்றுகின்றனர். உரிய நன்மைகளைக்கறந்து வருகின்றது. இது போன்றதோர் அனுகு முறையினையே ஈழத் தமிழரும் பின்பற்ற முற்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் உலகமயமாக்க சக்திகளுக்குத் தமிழ் மொழி தாக்குப் பிடிப்பது மாத்திரமன்றித் தமிழ் மொழி மூலமான நன்மைகளையும் சேர்த்துப் பெறுவதன் மூலம் எமது நன்மைகளை நன்கு விரிவாக்கிக் கொள்ளவும் முடியும்.

தமிழ் மொழியைத் தொடர்ந்து எல்லாவற்றுக்கும் பயன்படுத்துவதன் மூலம் வர்த்தகம் வளராது என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. வர்த்தகத்தை பிராந்திய மட்டத்திலோ அல்லது உள்நாட்டு மட்டத்திலோ வளர்ப்போமானால் அதை வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்ல அதிக காலம் எடுக்காது. அதற்குரிய வேண்டியளவான ஆங்கிலத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆங்கிலம் மட்டுமன்றி ஏனைய மொழிகள் தேவையென்றால், குறிப்பாக தென்கிழக்காசியாவிற்குள் செல்லச் சீனமொழி தேவை என்றால் அதையும் நாங்கள் கற்கவேண்டும். அது போன்று தான் ஜப்பானிய மொழியையும். இன்று ஆசிய பசுபிக் பிராந்தியத்தைப் பொறுத்தவரை இந்த இரு மொழிகளும் ஆங்கிலம் என்பதை விட அதிகளவு பயன்பாட்டில் உள்ளன. அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய இருநாடுகளையும் நோக்கின் அவை ஆங்கில மொழியைப் பிரதானமாக பேசுகின்ற நாடுகள் ஆனால் அவை பல்கலைக்கழக மட்டத்திலேயே சீனமொழி. யப்பானிய மொழி ஆகியவற்றை நன்கு வளர்க்க முற்பட்டுள்ளனர். ஏனெனில் ஆசிய பசுபிக் பிராந்தியம் தான் அவற்றின் வர்த்தக மையம். அந்தக் களத்தில் வெற்றியடைய வேண்டுமானால் ஆங்கிலத்தால் பயனில்லை. ஆங்கில நாடு உட்பட ஐரோப்பிய சந்தை என்பது இன்று அவுஸ்திரேலியர்க்கும் நியூசிலாந்துக்கும் மாறிவிட்டது. எனவே தம்மை அண்மித்துள்ள ஆசிய பசுபிக் பிராந்தியத்தை நாடி நிபதைக் காண முடிகின்றது. நாடி நிற்பதைக் காணமுடிகின்றது. அதே போல் நாமும் எமது மொழியைச் சர்வதேச மொழியின் பொருளாதார

வர்த்தகத்தை பிராந்திய மட்டத்திலோ அல்லது உள்நாட்டு மட்டத்திலோ வளர்ப்போமானால் அதை வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்ல அதிக காலம் எடுக்காது. அதற்குரிய வேண்டியளவான ஆங்கிலத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆங்கிலம் மட்டுமன்றி ஏனைய மொழிகள் தேவையென்றால், குறிப்பாக தென்கிழக்காசியாவிற்குள் செல்லச் சீனமொழி தேவை என்றால் அதையும் நாங்கள் கற்கவேண்டும். அது போன்று தான் ஜப்பானிய மொழியையும். இன்று ஆசிய பசுபிக் பிராந்தியத்தைப் பொறுத்தவரை இந்த இரு மொழிகளும் ஆங்கிலம் என்பதை விட அதிகளவு பயன்பாட்டில் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவல்களை முன்னெடுத்துக் கொண்டு நாம் உற்பத்தி செய்கின்ற பொருட்களை விற்கக் கூடிய சந்தைகள் எங்கெங்கு இருக்கின்றனவோ அவ்வச் சந்தைகளில் ஏனையோரை மிஞ்சவைப்பதற்கு வேண்டிய மொழிகளையும் கற்றுக் கொள்ளலாம்.

**பொருளாதாரத்திற்கும் கல்வி முறைமைக்கும் மத்தியிலான ஊடுதொடர்பு எவ்வாறானதாக இருக்க வேண்டும்?**

கல்விக்குரிய மொழியென்று பார்க்குமிடத்து எந்த மொழியில் நாம் அறிவை இலகுவாகப் பெறமுடியுமோ அந்த மொழியில் தான் கல்வி கற்க வேண்டும். அந்த வகையில் தாய் மொழிதான் சிறந்ததென்பது ஏற்கனவே எடுத்துக்காட்டப்பட்டது. ஆங்கிலக் கல்விக்கூடாக ஆங்கிலத்தைக் கற்பதன் மூலம் தான் முன்னேறலாம் என்பது போன்ற கருத்துக்களெல்லாம் உண்மையில் சரியான வகையில் ஏற்கக் கூடியவையல்ல. மாறாக ஒரு தற்காலிக நிலையில் ஏதாவது அரசியல், பொருளாதார வரலாற்று நிர்ப்பந்தங்கள் காரணமாக ஒரு குறுகிய காலத்தில் ஆங்கிலம் பயன்கொடுத்தது என்பது நன்கு இனம் காணப்பட வேண்டும்.

எமது நாடு, எமது பொருளாதாரம், எமது பகுதிநிலைக் கொள்கை எமது பொருளாதார முகாமை என்ற கருத்துக்கள் உறுதியடையும் ஒரு சூழலில் எமது மொழியை மனித மூலதனத் திரட்டலுக்குப் பயன்படுத்துவதன் மூலம் தான் மனித மூலதனத்தை உத்தம நிலையில் திரட்டிக் கொள்ள முடியும். அவ்வாறு செய்து எமது வளங்களைப் பெருக்கிக் கொள்வதன் மூலம், எமது வளங்களையும் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான காரணமாக எமது மொழியையும் நாடி மற்றவர்களை வரச் செய்ய வேண்டுமேயன்றி நாம் மற்றவர்களின் மொழி, வளம் என்பவற்றை நாடி அலைய வேண்டிய அவசியமில்லை.

ஈழத்தமிழரைப் பொறுத்த வரை ஏற்கனவே காட்டப்பட்டவாறு காலனித்துவம் என்பது மேலைத்தேசம் எனத் தொடங்கி இன்று சுதேசிய மட்டத்திலும் இன்னமும் தொடர்வதாய் குறுகிய காலம் என்பது எமது நிலையில் நீடித்துக்கொண்டே செல்கிறது. எமது வளங்களை நாமே முகாமை செய்து, எமது பகுதியின் பொருளாதாரக் கொள்கையை நாமே வகுத்து பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யக் கூடிய அரசியல் சூழ்நிலை இன்னும் தான் ஏற்படவில்லை. அதன் விளைவாகவே கல்வி வேறொரு மொழியில் பெறப்பட வேண்டியதென்ற நிலைமையும் கூடவே வருகின்றது. ஆனால் அதனை மாற்றியமைக்கக்கூடிய சிந்தனைகளையும் வளர்க்க வேண்டிய ஒரு கட்டம் எம்மை அண்மித்து விட்டதென்றே கூறலாம்.

எமது நாடு, எமது பொருளாதாரம், எமது பகுதிநிலைக் கொள்கை எமது பொருளாதார முகாமை என்ற கருத்துக்கள் உறுதியடையும் ஒரு சூழலில், எமது மொழியை மனித மூலதனத் திரட்டலுக்குப் பயன்படுத்துவதன் மூலம் தான் மனித மூலதனத்தை உத்தம நிலையில் திரட்டிக் கொள்ள முடியும். அவ்வாறு செய்து எமது வளங்களைப் பெருக்கிக் கொள்வதன் மூலம், எமது வளங்களையும் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான காரணமாக எமது மொழியையும் நாடி மற்றவர்களை வரச் செய்ய வேண்டுமேயன்றி நாம் மற்றவர்களின் மொழி வளம் என்பவற்றை நாடி அலைய வேண்டிய அவசியமில்லை. அந்த வகையில் தமிழ்ப் பிரதேசங்களில் செயற்படும் பல்கலைக்கழகங்கள் கூடத் தமிழரின் சிறப்பை வெளிக்காட்டுவதைத் தமது அடிப்படை நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் அவை தமிழரின் சிறப்பை எத்தளவுக்கு வெளிக்காட்டியுள்ளன. தமிழரின் சிறப்பு என்பது தமிழ்த்துறைக்கு மாத்திரம் உரியதல்ல. அது எத்தளவுக்கு தமிழில் பல்வேறு விடயங்களும் செய்யப்படுகின்றன, இயக்கப்படுகின்றன என்பதைப் பொறுத்தே தவிர; தமிழை ஒரு பாடமாகக் கற்பதனால் மட்டும் ஏற்பட்டுவிடாது. தமிழ்த்துறையால் மட்டும் தமிழ் சிறப்படைகிறதென்றால், பண்டித வித்துவான்கள் மட்டத்தில் அது முன்பு எவ்வாறிருந்ததோ அந்த நிலையில் தான் தொடர்ந்தும் இருக்கும். மொழியை எந்தளவுக்கு விசாலமுடையதாக மாற்றிப் பொருளாதார சமூக அலுவல்களுக்கு அதனை இசைவுள்ளதாக ஆக்குகின்றோமோ அந்தளவுக்கு உயர்வான பொருளாதார சமூக முன்னேற்றத்தை அது கொடுக்கும். அந்த வகையில் தாய்மொழியை விட அபிவிருத்திக்கு வேறு எந்த மொழியும் சிறப்பானதொன்றாக இருக்க முடியாது. அத்தகைய ஒரு பரிமாணத்தில் தான் பொருளாதாரத்துக்கும் கல்வி முறைமைக்கும் மத்தியிலுள்ள ஊடுதொடர்பு அமைந்திருக்க வேண்டும். இப்பரிமாணத்தினுள் வேண்டப்படும் மாறுபாடுகளை இனங்கண்டு உரியவாறு செய்து கொள்ளலாம்.

**ஈழத்தமிழரின் பொருளாதாரத்தை வளப்படுத்துவதில் கல்விமுறை போன்று எவ்வெவ் கூறுகளுக்கு முதன்மை வழங்க வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

கல்விக்கான மொழி என்பதை விடுத்துப் பார்க்குமிடத்து இது எமது பொருளாதார வளங்களில் கூட்டமைப்பைப் பொறுத்ததாகும். முன்னையில் எமது வளங்களைத் தான் எமது முன்னேற்றத்துக்குரிய சாதனங்களாக மாற்றிக் கொள்ள வேண்டும். ஆனால் எமது பிரதேசப் பொருளாதார வளங்கள் பற்றிய ஒரு சரியான மதிப்பீடு இன்னமும் செய்யப்படவில்லை. வடக்கு கிழக்குப் பகுதி மாகாண பிரதேசம், இத்தகைய வளங்களை முறையாகப் பயன்படுத்த முடியாது. அதனால் வெளிநோக்கிய முறையில் தான் அபிவிருத்தி இடம்பெற வேண்டுமென்ற ஒரு பழம் கருத்து இன்னமும் நிலவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. ஆனால் இது ஏற்புடையதொன்றன்று ஏனெனில் எமது வளங்களை விட பொருளாதாரச் சாத்தியம் குறைந்த வளம் கொண்ட நாடுகள் பல இன்று பாரிய முன்னேற்றமடைந்துள்ளன. உதாரணமாக மத்திய கிழக்கு நாடுகள் வரண்ட பாலைவனங்கள். இங்கு எண்ணெய் தவிர வேறேதும் இல்லை. எனினும் அதனை உரிய வகையில் பயன்படுத்தி நவீன பொருளாதாரங்களை அவர்கள் கட்டியயெழுப்பியுள்ளனர். இலங்கை வளம் நிறைந்ததாயிருந்தும் அந்த நாடுகளுக்குப் பணிப்பெண்களை அனுப்பித் தனது பொருளாதாரத்தை வளம்படுத்தும் ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளது. ஆகவே நாம் எம்மத்தியிலுள்ள வளங்களை வரண்டவையென்று ஒதுக்கி விடாது. உரியவகையில் அவற்றை அபிவிருத்தி செய்து எமது பொருளாதாரத்தை உறுதி பெறச் செய்ய முடியும். வெளி நோக்கிப் பார்க்கும் ஒரு கல்வி முறைக்கு இடமளிக்காது எமது மூல வளங்களுக்கு ஒத்திசைவான கல்விப் பரிமாணங்களை இனம் கண்டு அவற்றுக்கு முதன்மை வழங்க வேண்டும்.

ஓர் எடுத்துக்காட்டுநிலையில், எமது பிரதேசத்திற்கு உகந்த சில கல்வி முறைகளை இனம் காண்பது கடினமன்று நீண்ட கரையோர வளத்தை ஆதாரமாகக் கொண்டு கரையோர உயிரியல், மீன்பிடிக்கல்வி பற்றிக் கவனம் செலுத்த முடியும். வளங்களை உரிய முறையில் பெயர்த்துக் கொள்வது என்பது ஒன்று, பெயர்க்கப்பட்டவற்றிற்குப் பெறுமதியைச் சேர்த்துக் கொள்வதென்பது இன்னொன்று. இவ்வகையில் தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றங்கள் முக்கியமானவை. உதாரணமாக மீன்களை மீன்களாகவே விற்பனை செய்யாமல் அவற்றினை நீண்ட நாட்கள் வைத்துப் பயன்படுத்தக் கூடிய வகையில் சுத்தம் செய்து தகர டப்பாக்களில் அடைத்தல் அல்லது சில செய்முறைகளுக்கு உட்படுத்தி அவற்றின் பெறுமதியைக் கூட்டுவதன் மூலம் உற்பத்தி வேலைவாய்ப்பு என்பவற்றை விரிவாக்கும் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்.

இவ்வகையில் தொழில் நுட்ப அறிவு அவசியமாகின்றது. தொழில் நுட்ப அறிவு அவசியம் என்பதற்காக இயற்கைவிஞ்ஞானக் கல்வியை வலியுறுத்தி இன்றைய துரதிஷ்ட நிலை போலச் சமூக விஞ்ஞானத்தை ஒதுக்கி விடலாம் என்பதல்ல. இந்த நிலையில் முன்னேற்றத்திற்குரிய கல்விஎனும் போது, பொருளாதார சமூக முன்னேற்றம் என்று கூறுகின்றோமே தவிரத் தனியே பொருளாதார முன்னேற்றம் என்று கூறுவதில்லை. இன்று எங்கும் சமூகத்தை முதன்மைப்படுத்தி சமூகப் பொருளாதார வளர்ச்சி, சமூகப்பண்பாட்டு முன்னேற்றம் சமூக அரசியல் அபிவிருத்தி என்பது போன்றதொனியில் தான் பேசப்படுகின்றது. எனவே பொருளாதாரத்தை வளப்படுத்தும் கல்வி என்பது கூடச் சமூகத்தையும் அதனுடன் இணைத்து முன்னேறுவதொன்றாகவே இருக்க வேண்டும். இது பல்பரிமாணத்தன்மை கொண்டதாகவன்றி வேறு வகையினதாக அமைய முடியாது.

**கல்வியியல் என வரும் பொழுது வகுப்பறை முகாமைத்துவம் ஆசிரியர் பயிற்சி. பாட ஏற்பாட்டு விருத்தி என்பவற்றிற்கு அப்பால் ஒரு பொருளியல் நோக்கில் கல்வித்துறையானது எவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டுமென நீங்கள் கருதுகிறீர்கள்?**

இவ்வினாவுக்கான பதில் முந்திய வினாவுக்கான விடையிலிருந்து ஊற்றெடுக்கின்றதெனலாம். இடைநிலைக் கல்வி என்று வரும்போது தூய முகாமைத்துவ அம்சங்களுக்குப் புறம்பாக அது ஒரு பல்துறைசார் பாடத்திட்டத்தை அதாவது மாணவர்களை முற்றாக சமூக விஞ்ஞானக் கல்வி தூய விஞ்ஞானக் கல்வி என்ற பிரிநிலைக்குட்படுத்தாது ஒரு பல்பரிமாண நோக்கினை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருப்பது அவசியமாகும். எத்தகைய கல்வி வசதிகள் வழங்கப்படுகின்றன என்பது ஒரு புறமிருக்க, வழங்கப்படும் வசதிகள் எந்நிலையிலிருந்தாலும், எல்லாருக்கும் அவை சம அளவிற் கிடைப்பதை உத்தரவாதப்படுத்திக் கொள்ள வேண்டும். பொருளாதார அபிவிருத்தியின் ஒரு பிரதான குறிகாட்டி சமமான வருமானப் பரம்பல் எனக் குறிக்கப்படுகின்றது. உண்மையில் கல்வியிற் சமவாய்ப்புக்களை வழங்குவது அதற்கான ஒரு முன்கூட்டிய தேவை எனலாம். கல்வி வாய்ப்புக்களும் அவ் வாய்ப்புக்களின் ஊடாக சமமாக விளங்கும் கல்வி வசதிகளும் ஏற்றத்தாழ்வுடையவையாயிருக்குமாயின், அத்தகைய சமமின்மை வருமான முறைக்கும் நிலைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு அதன் விளைவாக வர்க்க வேறுபாடுகளுக்கு உட்பட்ட ஒரு சமூகம் தான் தோற்றுவிக்கப்படுகின்றது. தாய்மொழி தவிர்ந்த பிறிதொரு மொழியிற் கல்வி புகட்டு-

> தமிழ் கற்பதனால் மட்டும் தமிழ் சிறப்படைகிறதென்றால் பண்டித் வித்துவான்கள் மட்டத்தில் அது முன்பு எவ்வாறிருந்ததோ அந்த நிலையில் தான் தொடர்ந்தும் இருக்கும். மொழியை எந்தளவுக்கு வியாபகமுடையதாக மாற்றிப் பொருளாதார சமூக அலுவல்களுக்கு அதனை இசைவுள்ளதாக ஆக்குகின்றோமோ அந்தளவுக்கு உயர்வான பொருளாதார சமூக முன்னேற்றத்தை அது கொடுக்கும். அந்த வகையில் தாய்மொழியை விட அபிவிருத்திக்கு வேறு எந்த மொழியும் சிறப்பான தொன்றாக இருக்க முடியாது. அத்தகைய ஒரு பரிமாணத்தில் தான் பொருளாதாரத்துக்கும் கல்வி முறைமைக்கும் மத்தியிலுள்ள ஊடுதொடர்பு அமைந்திருக்கக் வேண்டும். இப்பரிமாணத்தினுள் வேண்டப்படும் மாறுபாடுகளை இனங்கண்டு உரியவாறு செய்து கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதை ஏற்றுக் கொள்ளாதிருப்பதற்கான காரணங்களுள் இது முக்கியமானதாகும். ஏற்கனவே கூறியவாறு, தாய்மொழிக்குப் புறம்பான ஆங்கிலம் போன்றதொரு மொழியை எல்லாரும் சம தரத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு வகையில் அதனைக் கற்பிப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதென்பது முடியாத ஒரு காரியமாகும். ஆகவே கல்விக்கான அத்திவாரமாகிய போதனை மொழியின் மத்தியில் முதலில் சமத்துவத்தை ஏற்படுத்திக் கொண்ட பின்பு அதனைக் கல்வியின் ஏனைய எல்லாப் பிரிவுகளுக்கும் விரிவுபடுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நூலகங்கள், ஆய்வு கூடங்கள், விளையாட்டுத்துறை வசதிகள் போன்ற இன்னோரன்னவற்றை இது உள்ளடக்குவதாயிருக்கும்.

மத்திய கிழக்கு நாடுகள் வரண்ட பாலைவனங்கள். இந்த எண்ணெய் தவிர வேறெதுவும் இல்லை. எனினும் அதனை உரிய வகையில் பயன்படுத்தி நவீன பொருளாதாரங்களை அவர்கள் கட்டியெழுப்பியுள்ளனர். இலங்கை வளம் நிறைந்ததாயிருந்தும் அந்த நாடுகளுக்குப் பணிப்பெண்களை அனுப்பித் தான் பொருளாதாரத்தை வளம்படுத்தும் ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளது. ஆகவே நாம் நம் மத்தியிலுள்ள வளங்களை வரண்ட ஏட்டுக்கல்வியன்று ஒதுக்கி விட்டு நடைமுறை வகையில் அவற்றை அபிவிருத்தி செய்து எமது பொருளாதாரத்தை உறுதி பெறச் செய்ய முடியும். வெளி நோக்கிப் படிக்கும் ஒரு கல்வி முறைக்கு இடமளிக்காது எமது சூழல் வளங்களுக்கு ஒத்திசைவான கல்விப் பரிமாணங்களை இனம் கண்டு அவற்றுக்கு முதன்மை வழங்க வேண்டும்.

**கடந்த சில தசாப்தங்களாக முனைப்படைந்துள்ள தமிழ்த் தேசியம் தமிழ்த் தேசியவாதம் போன்ற கருத்தாக்கங்கள் தமிழரின் கல்வித்துறையின் மீது எந்த வகையான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதென நீங்கள் கருதுகிறீர்கள்?**

ஒரு வகையில் இன்று ஈழத்தமிழரின் கல்வி பற்றி நாம் கூறுவதெல்லாம் அதனால் ஏற்படுத்தியுள்ள தாக்கம், அதனாலான விழிப்புணர்வு என்று கூடக் கூறலாம். ஏனெனில் தமிழ்த் தேசியம் என்பதைச் சரியானபடி உணர்வதற்கு முன்பாக நாம் இலங்கைத் தேசியம் என்ற வகையில் அதனால் அகப்பட்டிருந்தோம் எனவே அதனுடன் ஒத்திசைவு பெறும் ஒரு வகையிலேயே அதாவது இலங்கைத் தேசியத்தை வளர்க்கக் கூடிய ஒரு வகையிலேயே எமது கல்வியையும் வளர்த்து அதனை வளர்க்க முற்பட்டு இருந்தோம் அது ஈழத் தமிழருக்கு உதவும் நன்மை தரும் என்ற எதிர்பார்க்கைகள் எம்மத்தியில் நிலவியிருந்தன.

அவ்வாறான ஒரு தேசியத்துவ நிலையில் அல்லது அதனுடைய ஒரு பகுதியாகத் தான் எமது கல்வியை இனங்கண்டு எமது விழுமியங்கள் எமது லட்சியங்கள் குழந்தைகளின் முன்னேற்றம் என்ற எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டிருந்தோம் எனினும் அது ஓர் இலவு காத்த கிளியின் கதையாக ஆகிவிட்ட பின்பு தான் தமிழ்த் தேசியம் என்பதை முனைப்புடன் நோக்க வேண்டிய தேவை எழுந்திருக்கிறது. உண்மையில் அவ்வாறு நோக்கிய போது ஒரு பாரிய உண்மை எமக்குத் தெள்ளெ-

வைப் புறப்படுத்துவதாயிருந்தது. அதாவது நாம் ஒருபுறம் எமது மனித வளங்களைச் செழிப்புமிகுந்த எமது இயற்கை வளங்களுடன் மாத்திரம் இணைத்து அதன் மூலமான நன்மைகளை எம்மத்தியில் பகிர்வதற்குப் போட்டியிட்டுக் கொண்டிருந்தோம். மறு புறம், மலைநாட்டிலிருந்த எமது மனித வளங்களை எமது தாயகப் பகுதிக்குப் புறம்பாக எடுத்துச் சென்று மேற்கத்திய, சுதேசிய காலனித்துவக் கொள்கைகளுக்கு ஏற்புடைய வகையில் தீவின் தெற்குப் பகுதியிலான வளங்களுடன் இணைக்க முற்பட்டிருந்தோம்.

இன்றும் படிப்படியாக முனைப்படைந்த ஒரு கூரிய போட்டியின் மத்தியில் தான் செயற்பட வேண்டியிருந்தது. இவ்வாறு உள்ளேயும் வெளியேயும் இடம் பெற்ற போட்டி மூலம், போட்டியின் முன்னணியில் நின்ற வசதிபடைத்தவர்கள் முன்னேற ஏனையோர் பின்தங்கி விட்ட ஓர் ஏற்றத் தாழ்வுடைய சமூகம் தான் உருவாக்கப்பட்டது. அதன் கருத்து யாதெனில், ஈழத்தமிழர் பொருளாதார சமூக முன்னேற்றம் விட்டும் தொட்டும் ஏற்பட்டதாயிருந்ததேயன்றிச் சீரானதொரு முறையில் அனைவரது நலன்களையும் உத்தரவாதப்படுத்துவதொன்றாக ஏற்பட்டிருக்கவில்லை. அது மாத்திரமன்றி எம்மத்தியிலேயே போட்டி போடும் ஒரு சமூகமாகவும் நாம் மாறிவிட்டிருந்தோம். இது எம்மத்தியிலான வளங்கள் சிதைக்கப்படும் ஒரு நிலைக்கும் இட்டுச் செல்வதாயிருந்தது.

இனித் தமிழ்த் தேசியத்துவத்தினூடாக முன்னேற்றம் பற்றித் திட்டமிடுகின்றபோது அந்நிலைப் போட்டியை ஒழித்து அதனை சகோதரத்துவ பகிர்ந்து விரிவுபடுத்தி நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அந்நிலை போட்டி முன்னேற்றத்தைத் தருகிறது. அல்லது அழிக்கிறது என்பதை கூறலாம், எனவே அதனை விடுத்துத் தேசியத்துவத்தினூடாக ஒரு பரந்த பொருளாதார சமூகத்தைக் கட்டியெழுப்பக் கூடிய வகையில் தான் முன்னேற்றத்தை அணுக வேண்டும். இவ்வாறான மாறுபட்ட அணுகுமுறையை உள்வாங்குவதாகவே கல்வித்துறை மீதான தாக்கங்கள் அமைந்திருக்க வேண்டும் எனினும் இன்று கல்வித்துறை மீதான தாக்கங்கள் பழைய நிலைக்கும் புதிய நிலைக்குமிடைப்பட்டதான நிலையொன்று காலத்தைப் பராமரிப்பதற்கான விளங்கியுள்ளதெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பொழுது நடைமுறையில் உள்ள கற்கை நெறிகளும் பாட ஏற்பாடும் எந்தளவுக்கு எமது பொருளாதார சமூகத் தேவையைப் பூர்த்தி செய்கிறது? அவை எத்தகைய மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டும்?

இன்னமும் எமது கல்வி தேசிய மட்டத்தில் தான் கட்டுப்படுகின்ற காரணத்தினால் அதாவது கொழும்பில் உள்ள பரீட்சைத் திணைக்களம், கல்வித் திணைக்களம் போன்றவை தான் எமது கல்வியை இன்னமும் வழிநடாத்துவதால், அது இலங்கை என்கின்ற தேசிய நீரோட்டத்தில் இணைவதற்கான ஒரு முயற்சி என்பதாகக் காணப்படுகிறது. எனினும் ஏனைய மட்டங்களில் அதற்கு ஒத்திசைவான வளர்ச்சிகள் இடம் பெறாத காரணத்தினால் இது பயனற்ற ஒருமுயற்சி என்பதாகவே வர்ணிக்கப்படலாம். ஆகவே இந்நிலையில் ஒரு புறம் தேசிய மட்டத்தில் நீடித்திருக்கும் வரை நிலவுகின்ற கற்கை நெறி பாட விதானம் என்பவற்றின் குறைபாடுகள் புட்டுக் காட்டப்பட வேண்டிய அவசியம். ஆனால் மறுபுறம் முன்னர் கூறியது போல எமது கல்வித் திட்டத்தை நாம் ஆக்குவதற்குரிய ஒரு சந்தர்ப்பத்தைப் பெறுவது மிகவும் அவசியமானது. அவ்வாறு பெறுகின்ற பொழுது முக்கியமாக ஈழத்தமிழருடைய பொருளாதார சமூகவரலாற்றை நன்கறிந்து, அந்த வரலாற்றின் பின்னனிணியில் நாம் எங்கு நிற்கின்றோம் என்பதை எமது சமூகத்திற்கு உணர்த்துவது மிக அவசியமானது.

இந்தவகையில் எந்த ஒரு பாடநெறியை எவர் கற்றாலும் பொருளாதார வரலாறு, சமூக வரலாறு என்பவற்றின் பின்னனியில்தான் அது திட்டமிடப்பட்டிருக்க வேண்டும். அது மாத்திரமன்றி நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துவது தாய்மொழியில் தான் எந்தவொரு கற்கை நெறியும் வழங்கப்பட வேண்டும். பேரா. சிவசேகரம், பேராசிரியர் துரைராஜா நினைவுப் பேருரையில் குறிப்பிட்டதுபோல எந்தளவுக்கு உயர் கல்வியைத் தாய் மொழியிற் கற்பதை நாம் பிற்போட்டுக் கொண்டு செல்கிறோமோ அந்தளவுக்கு அபிவிருத்தியும் குன்றியதொரு நிலையில் தான் நீடித்திருக்கும்" இக் கருத்தை இன்னமும் ஈழத்தமிழர் உள்வாங்குவதற்குப் பெரிதும் சிரமப்படுகிறார்கள். ஆனால் தாய்வழியிலான கல்வி எமது அரசியல் வரலாற்றுடன் சமூக பொருளாதார, பண்பாட்டுப் பின்னணி பற்றிய அறிவு என்ற இரண்டு எடுகோள்களும் பூர்த்தி செய்யப்பட்டிருக்குமாயின் எமது முன்னேற்றத்திற்குரியவாறான ஒரு கல்வித் திட்டத்தை எவ்வாறு வகுத்துக் கொள்ள வேண்டுமென்பது பற்றிய ஒரு தெளிவு பிறக்கும். அந்தத் தெளிவின் அடிப்படையில் எமது மனித வளங்கள் செப்பனிடப்பட்டுக்கட்டியெழுப்பப்படும் போது, ஈழத் தமிழர் முன்னேற்றத்தையம் மேம்பாட்டையும் யாரும் தடுத்துவிட முயடிாது.

இன்று இத்தகைய தெளிவு இல்லாத காரணத்தினால், எமது கல்வி முறைமை பல பக்கங்களிலும் இழுபட்டதாகவும், அவ்வாறு இழுபடும் போது, தவிர்க்க முடியாதவகையில் உண்டாகும் போட்டி ஆக்கபூர்வமானதொன்றாயிராது எமது சமூகத்தை ஊடறுத்துஅதன் முன்னேற்றத்தையும் எதிர்கணியமாகக் கீழ்நோக்கிய பாதையில் எடுத்துச் செல்வனவாகவும் காணப்படுகின்றது. ஆகவே அதனை மாற்றி விடக் கூடிய ஒரு கல்வி முறையைத் திட்டமிட்டு அமுலாக்கம் செய்வதற்குரிய உரிமையை நாம் முதற்கண் பெற்றுக் கொள்வது அத்தியாவசியமானது. ❑

பொருளாதார அபிவிருத்தியின் ஒரு பிரதான குறிகாட்டி சமமான வருமானப் பரம்பல் எனக் குறிக்கப்படுகின்றது. உண்மையில் கல்வியிற் சம வாய்ப்புக்களை வழங்குவது அதற்கான ஒரு முன்கூட்டிய தேவை எனலாம். கல்வி வாய்ப்புக்களும் அவ் வாய்ப்புக்களின் ஊடாக சமமாக விளங்கும் கல்வி வசதிகளும் ஏற்றத் தாழ்வுடையவையாயிருக்குமாயின் அத்தகைய சமமின்மை வருமான முறைக்கும் நிலைகளுக்கும் விரிவு படுத்தப்பட்டு அதன் விளைவாக வர்க்க வேறுபாடுகளுக்கு உட்பட்ட ஒரு சமூகம் தான் தோற்றுவிக்கப்படுகின்றது. தாய்மொழி தவிர்ந்த பிறிதொரு மொழியிற் கல்வி புகட்டுவதை ஏற்றுக் கொள்ளாதிருப்பதற்கான காரணங்களுள் இது முக்கியமானதாகும்.

ஈழநாட்டில் இலக்கண மரபு வைரம் பாய்ந்தது ஆறுமுக நாவலர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் புலோலி வ குமாரசுவாமிப் புலவர், சுன்னாகம் ஆ. முருகேச பண்டிதர் முதலியோர் இலக்கணத் துறையிற் கொடிகட்டிப் பறந்தவர்கள். இவர்கள் தமிழையும் வட மொழியையும் நன்கு கற்று நுண்மாண்நுழை புலமுடையவர்களாகத் திகழ்ந்தனர். இவர்களின் இலக்கண முயற்சிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல அமைவது கணேசையரின் தொல்காப்பிய விளக்கக் குறிப்புக்களே. நவீன மொழியியற் கோட்பாடுகள் தமிழிற் காலடி வைக்கத் தொடங்குவதற்கு முன்னரே ஈழத்தவர்களின் இலக்கண முயற்சிகளில் மொழியின் பார்வை முளைவிடத் தொடங்கிவிட்டதெனலாம். ஈழத்தின் மரபு வழித்தமிழ் புலமையின் இறுக்கம், பலம் முதலியன இவ்விலக்கண முயற்சிகளிலே துல்லியமாகத் தெரிந்தது என்று துணிந்து கூறலாம்.

கலாநிதி எஸ். சிவலிங்கராஜா

வித்துவசிரோமணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும், பக்கம் 27, 1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோம் சோம்ஸ்கி

நோம் சோம்ஸ்கி என்ற மொழியியல் அறிஞர் இந்த நூற்றாண்டின் தலைசிறந்த சிந்தனையாளர்களுள் ஒருவர். தற்காலச் சிந்தனையாளர்களின் வரிசையில் சோம்ஸ்கியையும் உட்படுத்தி ஃபாண்டானா பதிப்பகத்தார் ஜான் லைன்ஸ் அவர்களைக் கொண்டு நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார்கள். மொழியியலில் சோம்ஸ்கி உருவாக்கிய கோட்பாட்டை மாற்றிலக்கண ஆக்கமுறைக் கோட்பாடு (Transformational Generative Theory) என்று அழைப்பார்கள். இக்கோட்பாடு மொழியியலில் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது. மொழியியலில் மாற்றுக் கோட்பாட்டை முன்வைப்பவர்கள் கூட தங்கள் கோட்பாட்டை சோம்ஸ்கியின் கோட்பாட்டோடு ஒப்பிட்டு அவர்களுடைய இடத்தை நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. 1970 ஆண்டுகளின் மொழியியலின் தாக்கத்தையும் இவருடைய மாற்றிலக்கணக் கோட்பாட்டால் உணர முடிகிறது. உளவியல், தத்துவம், மானிடவியல் ஆகிய துறைகளில் இவருடைய தாக்கத்தை உணரும் நிலை ஏற்பட்டது.

> மனிதச் சமூகங்களிலும் குழந்தைகள் தங்களுடைய முதல்மொழி வயதிற்குள் மொழி கற்றலின் பெரும் பகுதியை முடித்துக் கொள்கின்றன. 5 வயதில் இந்த வியக்கத் தோன்றும் ஒன்றும் புதைப்பதைக் கோட்பாட்டைக் கண்டுபிடித்துத் தருவது அந்த ஆக்கமும் மொழியின் வேறுபடுகிறது. அமைப்பும் ஒரு குறிப்பிட்ட மொழியைத் தெரிந்துகொள்ள உதவியாகும். அந்தந்த பிறக்கும் போது மொழி அறிவும் ஆற்றலோடும் தான் மொழி பொதுமைகளோடும் பிறக்கிறது. அதனால் மொழிப் பொதுமைகளுக்குள் மனித மொழி இலக்கணத்தும் உலகப் பொதுமை (தனியாக மனித மூளை அமைப்பிறகும்) இந்தப் பொதுமைகளை உள்ளதை என்று சொல்லக்கூடிய கோட்பாடு விளக்குகிறது.

நோம் சோம்ஸ்கி 1928 - ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7ஆம் தேதி வட அமெரிக்காவில் உள்ள பென்சில் வேனியாவில் உள்ள பிலடெல்பியாவில் பிறந்தார். பிலடெல்பியாவில் உள்ள ஓக்லேன் கண்ட்ரி டே பள்ளியிலும் சென்ட்ரல் உயர் நிலைப் பள்ளியிலும் தம்முடைய கல்வியைத் தொடங்கினார். பின்னர் பென்சில் வேனியா பல்கலைக்கழகத்தில் மொழியியல், கணிதம், தத்துவம் ஆகிய பாடங்களைப் பயின்றார். பென்சில்வேனியா பல்கலைக்கழகத்திலிருந்து முனைவர் பட்டம் பெற்றாலும் தம்முடைய ஆய்வை ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார். பிறகு 1955 முதல் மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

முனைவர் கி. அரங்கன்
மொழியியல் பேராசிரியர்
தமிழ்நாடு

சிகாகோ பல்கலைக் கழகத்தாலும் லண்டன் பல்கலைக்கழகத்தாலும் தில்லிப் பல்கலைக் கழகத்தாலும் முதுமுனைவர் பட்டம் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். சொற்பொழிவாற்ற பல்வேறு நாடுகளாலும் அவர் அழைக்கப்பட்டுள்ளார். 1967 - ஆம் ஆண்டு பெர்க்லியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பெக்மன் சொற்பொழிவும் 1969 ஆம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் ஜான் லாக் சொற்பொழிவும் லண்டன் பல்கலைக்கழகத்தில் ஷியர்மன் நினைவுச் சொற்பொழிவும் சோம்ஸ்கி நிகழ்த்தினார். இருமுறை இந்தியாவின் முக்கிய நகரங்களான தில்லி, ஹைதராபாத், கல்கத்தா, சென்னை, திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் மொழியியல் குறித்தும் அரசியல் குறித்தும் அவர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

## சோம்ஸ்கியும் மொழியியலும்

1957 - ஆம் ஆண்டு அவர் வெளியிட்ட தொடரியல் அமைப்புகள் (Syntactic Structures) என்ற நூல் மொழியியலில் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தியது. அமைப்பு மொழியியல் (Structural Linguistics) முக்கியத்துவம் பெற்றிருந்த அந்தக் காலகட்டத்தில் இந்நூல் பெரும் பரபரப்பை உண்டாக்கியது. அமைப்பு மொழியியல் கோட்பாடு மொழியை ஒரு சமூகத்தின் கூட்டியக்கத்திற்குரிய சாதனமாகவும் ஓர் ஒழுங்கமைப்புடைய மரபுவழிப்பட்ட வாய்மொழிக் குறியீடுகளாகவும் (Language is a system of arbitray Vocal symbols by means of which a society cooperates. Bioch and Trager. P.5) பார்த்தது. மொழியின் அமைப்பை விவரிக்கும் இலக்கணம் அம்மொழியின் அடிப்படைத் தனிமங்களை (elements ) பட்டியலிடுவதும் அவற்றை வகைப்படுத்துவதும் அவற்றின் வருகை முறையை விவரிப்பது ஆகும். மொழியின் அமைப்பு என்பது பல நிலைகளை (levels) உள்ளடக்கியது. ஒலியியல் அமைப்பும் உருபனியல் அமைப்பும் தொடரியல் அமைப்பும் மொழியமைப்பின் முக்கிய நிலைகள். மொழிகள் அனைத்தும் அமைப்பின் அடிப்படையில் சமமானவை . வளர்த்த / வளரா மொழிகள் என்ற வகைப்பாடு மொழியமைப்புக்குப் புறம்பான சமூகக் கண்ணோட்டம் ஆகும். மொழிகள் எல்லாம் சிக்கலான அமைப்பைக் கொண்டவை. அவற்றின் அமைப்பை விவரிப்பது தான் இலக்கணம். எழுத்து வடிவை உடைய மொழியானாலும் பேச்சு வழக்கில்மட்டும் உள்ள மொழியானாலும் அமைப்பு என்பது எல்லா மொழிகளிலும் உள்ளது. ஒவ்வொரு மொழியும் அதனுடைய சமூகத் தேவைகளை சோம்ஸ்கியின் மாற்றிலக்கணக் கோட்பாடு மொழியை ஒரு புதிய கோணத்தில் பார்க்க வைத்தது.

மொழியின் இயல்பை மாற்றிலக்கணக் கோட்பாடு விளக்கிய முறைக்கும் அமைப்பு மொழியியல் கோட்பாடு விவரித்த முறைக்கும் வேறுபாடுகள் உள்ளன. மனித மொழிக்கும் விலங்குகளின் கருத்துப் பரிமாற்றத்துக்கும் அடிப்படையான பண்பு வேறுபாடுகள் உள்ளன என்பதை மாற்றிலக்கணக் கோட்பாடு வலியுறுத்துகிறது. மொழியின் அடிப்படைப் பண்பு வேறுபாடு அதன் படைப்பாற்றல். மொழி பேசுபவர்கள் புதிய புதிய சூழல்களில் புதிய புதிய வாக்கியங்களைப் கேட்கும் போது அவற்றைப் புரிந்து கொள்ளவும் செய்கிறார்கள். இத்தகைய படைப்பாற்றல் விலங்குகளின் கருத்துப் பரிமாற்ற சாதனத்தில் இல்லை என்று கூறப்படுகிறது. விலங்குகளிடமிருந்து மனிதனைப் பிரிக்கக் கூடிய முக்கியமான ஒன்று அவன் பயன் படுத்தும் மொழி இதை மாற்றிலக்கணக் கோட்பாடு வலியுறுத்து கிறது.

மொழியின் இயல்பை மாற்றிலக்கணக் கோட்பாடு விளக்கிய முறைக்கும் அமைப்பு மொழியியல் கோட்பாடு விவரித்த முறைக்கும் வேறுபாடுகள் உள்ளன. மனித மொழிக்கும் விலங்குகளின் கருத்துப் பரிமாற்றத்துக்கும் அடிப்படையான பண்பு வேறுபாடுகள் (qualitative differences) உள்ளன என்பதை மாற்றிலக்கணக் கோட்பாடு வலியுறுத்துகிறது. மொழியின் அடிப்படைப் பண்பு வேறுபாடு அதன் படைப்பாற்றல் (creativity). மொழி பேசுபவர்கள் புதிய புதிய சூழல்களில் புதிய புதிய வாக்கியங்களைப் கேட்கும் போது அவற்றைப் புரிந்து கொள்ளவும் செய்கிறார்கள். இத்தகைய படைப்பாற்றல் விலங்குகளின் கருத்துப் பரிமாற்ற சாதனத்தில் இல்லை என்று கூறப்படுகிறது. விலங்குகளிடமிருந்து மனிதனைப் பிரிக்கக் கூடிய முக்கியமான ஒன்று அவன் பயன்படுத்தும் மொழி இதை மாற்றிலக்கணக் கோட்பாடு வலியுறுத்துகிறது.

மொழியில் எந்த ஒரு வாக்கியத்தையும் இதுதான் நீளமான வாக்கியம் என்று கூற முடியாது. நாம் அதை மேலும் நீட்ட முடியும். இதை இலக்கணத்தின் மீளுமைப் பண்பு (Recursive Property) என்று கூறுவார்கள். சான்றாக.

1) நேற்று வந்த பையன் எங்கள் வீட்டிற்கு வந்தான் என்ற வாக்கியத்தை

2) நம் நம்பிக்கையைப் பார்த்துவிட்டு நேற்று வந்த பையன் எங்கள் வீட்டிற்கு வந்தான் என்றும்

3) நம் நம்பிக்கையைப் பார்த்துவிட்டு நேற்று வந்த பையன் எங்கள் புதிய வீட்டிற்கு வந்தான் என்றும் விவரிக்கலாம்.

வாக்கியங்களின் சில பகுதிகளை நாம் மேலும் மேலும் விரித்துக் கொண்டே செல்லலாம். மீளுமைப் பண்பு இலக்கணத்தின் முக்கியப் பண்பாக உள்ளது. மாற்றிலக்கணக் கோட்பாடு மொழியின் இவ்வடிப்படைத் தன்மையை விளக்குகிறது. விலங்குகளின் கருத்துப் பரிமாற்ற சாதனத்தில் இப்பண்பு காணப்படவில்லை . சோம்ஸ்கியின் கோட்பாடு இதனை வலியுறுத்துகிறது.

இன்னொரு முக்கிய மொழிப்பண்பை நாம் விவரிக்க வேண்டும். மொழியியல் கோட்பாடு ஒரு மொழியின் அமைப்பை விவரிக்கக் கூடிய கருத்தியல் கருவிகளை அளித்தால் மட்டும் போதாது: உலக மொழிகளுக்கு இடையிலான பொதுவான மொழிப்பண்புகளை அது வெளிக்கொணரவும் வேண்டும். தொடரியல் (Syntax) நிலையை எடுத்துக் கொண்டு அப்பண்புகளைச் சுட்டிக் காட்டுவோம். தமிழில் வாக்கியத்தில் வரும் சொற்களின் வரிசை முறையை நாம் மாற்றலாம்.

4) அ. இந்தியாவும் பாகிஸ்தானும் கிரிகெட் பந்தயத்தில் மோதிக் கொள்கின்றன.

ஆ. கிரிகெட் பந்தயத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் மோதிக் கொள்கின்றன.

இ. கிரிகெட் பந்தயத்தில் மோதிக் கொள்கின்றன இந்தியாவும் பாகிஸ்தானும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கியம் (4 அடி) இந்தியாவும் பாகிஸ்தானும் வெவ்வேறு இடங்களில் வருகின்றன. ஆனால், இந்தியாவும் பாகிஸ்தானும் என்ற தொடரில் வரும் சொற்களைப் பிரித்து இட மாற்றம் செய்ய முடியாது.

5) இந்தியாவும் கிரிக்கெட் பந்தயத்தில் பாகிஸ்தானும் மோதிக் கொள்கின்றன.

6) கிரிக்கெட் பந்தயத்தில் இந்தியாவும் மோதிக் கொள்கின்றன பாகிஸ்தானும்.

இது தமிழுக்கு மட்டும் பொருந்தும் விதியல்ல. இவ்விதி மற்ற மொழிகளுக்கும் பொருந்தும்.

7) India and Pakistan agree to continue the bilateral talks

8) India agree continue the bilateral talks Pakistan

சோம்ஸ்கியால் முன்வைக்கப்பட்ட மாற்றிலக்கணக் கோட்பாடு மொழியியலில் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியது என்பதோடு மற்ற துறைகளிலும் அதன் தாக்கத்தை நாம் உணர முடிகிறது. உளவியலில் பெரும் செல்வாக்கோடு விளங்கிய புறநடத்தைக் கோட்பாட்டை கேள்விக்குள்ளாக்கியது. புறநடத்தையாளர்கள் எலி, நாய் போன்ற விலங்குகளைக் கொண்டு நடத்திய பரிசோதனை மூலம் கற்றல் கோட்பாட்டை உருவாக்கினார்கள். இக்கோட்பாட்டை மொழி கற்றலுக்கும் விரிவுபடுத்தினார்கள்.

India and Pakistan என்ற தொடரில் வருகிற சொற்களைப் பிரித்து இட மாற்றம் செய்ய முடியாது. மாற்றிலக்கணக் காரர்கள் உலகில் உள்ள பல மொழிகளை ஆய்வு செய்து அவைகளுக்கு இடையிலான பொதுப் பண்புகளைச் சுட்டி வருகிறார்கள். இவ்வாறு கண்டுபிடிக்கப்படும் மொழிப் பொதுமைகளுக்கு (Language universels) உளவியல் விளக்கம் அளிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

## சோம்ஸ்கியும் உளவியலும்

சோம்ஸ்கியால் முன்வைக்கப்பட்ட மாற்றிலக்கணக் கோட்பாடு மொழியியலில் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியது என்பதோடு மற்ற துறைகளிலும் அதன் தாக்கத்தை நாம் உணர முடிகிறது. உளவியலில் பெரும் செல்வாக்கோடு விளங்கிய புறநடத்தைக் கோட்பாட்டை (Theory of behaviorism) கேள்விக்குள்ளாக்கியது. புறநடத்தையாளர்கள் எலி, நாய் போன்ற விலங்குகளைக் கொண்டு நடத்திய பரிசோதனை மூலம் கற்றல் கோட்பாட்டை (theory of learning) உருவாக்கினார்கள். இக்கோட்பாட்டை மொழி கற்றலுக்கும் விரிவுபடுத்தினார்கள். இதைச் சோம்ஸ்கி மிகக் கடுமையாக விமர்சனம் செய்தார். ஸ்கின்னர் (Skinner) என்ற நூலுக்குச் சோம்ஸ்கி எழுதிய திறனாய்வு மிக முக்கியத்துவம் பெற்றது. புறநடத்தையாளர்களின் கோட்பாட்டால் மொழி கற்றலை முழுமையாக விளக்க முடியாது என்பதை அவர் தெளிவாகச் சுட்டிக் காட்டினார்.

மேலோட்டமாகப் பார்க்கும்போது மொழிகளுக்கு இடையிலான வேறுபாடுகள் முக்கியமானவைகளாகத் தோன்றும். அமைப்பு மொழியியல் கோட்பாடு இவ்வேறுபாடுகளைத் தான் வலியுறுத்தியது. ஆனால் மொழிகளுக்கு இடையிலான ஒற்றுமைப் பண்புகள் ஆழமாக ஆய்வு செய்தால்தான் வெளிப்படும் மாற்றிலக்கணக் கோட்பாடு மொழிகளுக்கு இடையிலான பொதுமைப் பண்புகளை வெளிக்கொணர்வதில் கவனம் செலுத்துகிறது. இம்மொழிப் பண்புகளை யாரும் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதில்லை. குழந்தை பிறக்கும்போது இம்மொழிப் பொதுப் பண்புகளை வெளிக்கொணர்வதில் கவனம் செலுத்துகிறது. இம்மொழிப் பண்புகளை யாரும் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதில்லை. குழந்தை பிறக்கும்போது இம்மொழிப் பொதுப் பண்புகளைக் கொண்டிருக்கிறது. இப்போது மொழிகளிலிருந்து தன்னைச் சுற்றியுள்ள சமூகத்தின் மூலம் அச்சமூகத்தின் மொழியைக் கற்றுக் கொள்கிறது. பொது மொழிகளிலிருந்து ஒரு குறிப்பிட்ட மொழியைத் தன் அனுபவத்தின் மூலம் குழந்தை பெறுகிறது.

எல்லாச் சமூகங்களிலும் குழந்தைகள் தங்களுடைய ஐந்தாவது வயதிற்குள் மொழி கற்றலின் பெரும் பகுதியை முடித்துக் கொள்கிறது. உளவியல் இதை விளக்க வேண்டும் என்றால் புறநடத்தைக் கோட்பாட்டைக் கைவிட்டு பகுத்தறிவுவாத (rationalism) அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டி வருகிறது. அனுபவம் ஒரு குறிப்பிட்ட மொழியைத் தெரிந்துகொள்ள உதவினாலும் குழந்தை பிறக்கும்போதே மொழி கற்கும் ஆற்றலோடும் சில மொழிப் பொதுமைகளோடும் பிறக்கிறது. ஆகையால் மொழிப் பொதுமைகளுக்கும் மனித மன இயல்புகளுக்கும் உடலியலுக்கும் (குறிப்பாக மனித மூளை அமைப்பிற்கும்) நெருங்கிய தொடர்பு உள்ளதை மாற்றிலக்கணக் கோட்பாடு வலியுறுத்துகிறது. மொழிப் பொதுமைகளை விளக்க உளவியல் முன்வர வேண்டியுள்ளது. சோம்ஸ்கியின் மாற்றிலக்கணக் கோட்பாட்டு வளர்ச்சியால் உளவியலில் பகுத்தறிவுவாதம் செல்வாக்கு செலுத்த ஆரம்பித்தது. சோம்ஸ்கியின் மொழியியல் கோட்பாடு உளவியலில் மட்டுமன்றி தத்துவத்திலும் சர்ச்சையைக் கிளப்பியது.

## சோம்ஸ்கியும் தத்துவமும்

தத்துவத்தில் அனுபவவாதமும் (empiricism) பகுத்தறிவுவாதமும் முக்கியமான எதிரெதிரான கோட்பாடுகள். மனிதனிடம் தோன்றும் அறிவுபற்றிய விளக்கப்பாட்டில் இவ்விரு கோட்பாடுகளும் வெவ்வேறு நிலைப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கின்றன. மனிதனிடம் தோன்றும் அறிவு முழுக்க முழுக்க அனுபவம் சார்ந்தது. குழந்தை பிறக்கும்போது ஒரு வெற்றுப் பெட்டி (Blank box) போன்று இருக்கிறது. புலன்களின் வழிப் பெறுகின்ற தரவுகளும் அனுபவமும் அறிவின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணிகளாக அமைகின்றன. அறிவின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாக அமைபவை புலன்களும் புலன்களின் வழியான அனுபவங்களுமே. அமைப்பு மொழியியல் கோட்பாடு இத்தத்துவார்த்த நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்கிறது. மனித மனத்தின் இயல்போ உடலியல் கூறுகளோ எவ்விதப் பங்களிப்பையும் ஆற்றுவதில்லை.

குழந்தை மொழியை முழுக்க முழுக்க தான் பிறக்கும் சமுதாயச் சூழலில் பெறுகிறது. அது தான் பெறும் அனுபவம் மூலம் கற்கிறது. குழந்தையைச் சார்ந்த சமூகம் குழந்தைக்கு வேண்டிய மொழித் தரவுகதைத் தருகிறது. போலச் செய்தல், திரும்பக் கூறல், மாதிரியாக்கம் (anology) போன்றவற்றின் அடிப்படையில் தான் சார்ந்த சமூகத்தின் மொழியைக் கற்கிறது. மேலும் மொழி கற்றல் என்பது பல்வேறு பழக்கங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. பழக்கம் என்பது தூண்டல் எதிர்வினை (stimulus - response) ஆகியவற்றின் தொடர்ச்சியால் உருவாக்கப்படுவது. மொழி கற்றல் என்பதும் தூண்டல் எதிர்வினை ஆகியவற்றின் விளைவாகப் பார்க்கப்படுகின்றது.

பகுத்தறிவாதத்தை ஏற்கும் மாற்றிலக்கணக் கோட்பாடு இவ்விளக்கத்தை எதிர்க்கிறது. குழந்தைகள் பெறும் மொழித் தரவுகள் வளமானவையல்ல. நாம் பேசும்போது தவறான இலக்கண வழு வாக்கியங்களை உண்டாக்குகிறோம். பல வாக்கியங்கள் நிறைவு பெறாமல் குறை வாக்கியங்களாக உள்ளன. ஆகையால் குழந்தை பெறும் தரவுகள் வளமானவை அல்ல. இருப்பினும் குழந்தை தன் ஐந்தாவது வயதில் மொழியின் பெரும் பகுதியை கற்றுத் தனக்குள் ஒரு இலக்கணத்தை உருவாக்கிக் கொள்கிறது. மேலும் பல்வேறு சமூகங்களில் மொழிகளைக் கற்றுக் கொள்ளும் குழந்தைகளை ஆராயும்போது அவர்களுடைய மொழி கற்றலில் சில பொதுத் தன்மைகளை நாம் காண முடிகிறது. குழந்தைகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் உருவாக்கும் மொழிகளின் இலக்கணங்களை ஒப்பிட்டு பார்க்கும் போது சில பொதுத் தன்மைகள் காணக் கிடக்கின்றன. இவற்றை அனுபவவாத அடிப்படையிலான மொழி கற்றல் கோட்பாடு விளக்க முடியாது.

குழந்தைகள் பெறும் மொழித் தரவுகள் வளமானவை அல்ல. நாம் பேசும்போது தவறான இலக்கண வழு வாக்கியங்களை உண்டாக்குகிறோம். பல வாக்கியங்கள் நிறைவு பெறாமல் குறை வாக்கியங்களாக உள்ளன. ஆகையால் குழந்தை பெறும் தரவுகள் வளமானவை அல்ல. இருப்பினும் குழந்தை தன் ஐந்தாவது வயதில் மொழியின் பெரும் பகுதியை கற்றுத் தனக்குள் ஒரு இலக்கணத்தை உருவாக்கிக் கொள்கிறது. மேலும் பல்வேறு சமூகங்களில் மொழிகளைக் கற்றுக் கொள்ளும் குழந்தைகளை ஆராயும் போது அவர்களுடைய மொழி கற்றலில் சில பொதுத் தன்மைகளை நாம் காண முடிகிறது.

மொழி கற்றல் என்பது குழந்தையின் சமூகச் சூழலை தாண்டியது. மனித மனத்தின் ஒரு புலம் (Faculty) மொழி கற்கும் ஆற்றலைக் கொண்டது. மனிதனிடம் காணப்படும் மொழி அறிவு முழுக்க முழுக்க அனுபவத்தால் உருவாக்கப்பட்டதல்ல. அனுபவத்தோடு மனித மனத்தின் இயல்பும் (மனித உடலியலின் கூறும்) மொழி அறிவின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பெரும் பங்கு ஆற்றுகிறது. தன்னைச் சுற்றியுள்ளவர்கள் கூறாத சொற்களைக் கூட குழந்தைகள் உருவாக்குவதை நாம் காணலாம். சான்றாக, அவன் பார்க்குவான் போன்ற வாக்கியங்களையும் கோழி குருவி போன்ற தொகைச் சொற்களையும் குழந்தை உருவாக்குகிறது. இத்தகைய தரவுகள் அவர்களுடைய புறச் சூழலில் கிடைப்பதில்லை. புதிய புதிய சொற்களையும் வாக்கியங்களையும் படைக்கின்ற ஆற்றல் குழந்தைகளிடம் உள்ளது. குழந்தைகளின் மொழி கற்றல் என்பதை மொழிப் பொது இலக்கணத்திலிருந்து (Universal Grammar) ஒரு சமூகத்தின் மொழியைப் பெறும் செயல் என்று நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

## சோம்ஸ்கியும் அரசியலும்

சோம்ஸ்கிக்கு இளமை முதலே அரசியலில் நாட்டம் இருந்தது. சோம்ஸ்கிக்கு ஹேரிஸின் அரசியல் கருத்து பிடித்திருந்ததால் ஹேரிஸிடம் மொழியியல் ஆய்வை மேற்கொள்ளச் சென்றார். சோம்ஸ்கியின் தந்தை ஹீப்ரு (Hebrew) மொழியியலில் நிறைந்த புலமை பெற்றிருந்ததால் சோம்ஸ்கி தம்முடைய முதுகலைப் பட்ட ஆய்விற்குத் தற்கால ஹீப்ருவின் உருபொலியனியல் (Morphophonemics of Modern Hebrew) என்ற பொருளை எடுத்துக் கொண்டார். மொழியியலோடு அரசியலிலும் சோம்ஸ்கிக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு.

அமெரிக்கா வியட்நாம் மீது தொடுத்த போரை அவர் மிகக் கடுமையாக எதிர்த்தார். 1960-70 களில் மாற்றிலக்கணக் கோட்பாட்டில் ஆர்வம் காட்டிய பலர் அமெரிக்காவின் வியட்நாம் ஆக்கிரமிப்பைக் கடுமையாகக் கண்டித்தார்கள். பல பல்கலைக்கழகங்களில் சோம்ஸ்கி காலையில் மொழியியலில் மாற்றிலக்கணக் கோட்பாட்டை விளக்கியும் மாலையில் அமெரிக்காவின் வியட்நாம் கொள்கையைக் கடுமையாக விமர்சித்தும் சொற்பொழிவாற்றினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக வளாகங்களில் சோம்ஸ்கி மொழியியலில் முக்கியமானவர் என்பதோடு அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையை விமர்சிப்பவர் என்றும் பிரபல்யமடைந்திருந்தது.

அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையை - குறிப்பாக வியட்நாம், மத்திய ஆசியா நாடுகளின் வெளியுறவுக் கொள்கைகளை - விமர்சிப்பதில் அறவழித் தீர்வுகளைக் (Moral judgements) கொண்டு வருகிறார். அமெரிக்கர்களில் பலர் அமெரிக்கா வியட்நாம் மீது நடத்திய படையெடுப்பை மிகக் கடுமையாக விமர்சித்தார்கள். அவ்வாறு விமர்சித்ததன் பின்புலம் அமெரிக்க இளைஞர்களையும் அதன் பொருளாதாரத்தையும் இந்தப் போர் பாதிக்கிறது என்பதன் அடிப்படையில்தான். அமெரிக்காவின் நிலைமை பலவீனமடைவதன் பிறகுதான் பலருக்கு இந்த ஞானோதயம் பிறந்தது. அமெரிக்காவின் வியட்நாம் ஆக்கிரமிப்பை எதிர்த்த எல்லா அமெரிக்கர்கள் மீதும் இந்த விமர்சனத்தை நாம் வைக்க முடியாது. பெரும்பாலான அமெரிக்கர்களுக்கு இது பொருந்தும்.

> அமெரிக்கா கருத்தியல் கட்டுப்பாட்டை மிக நுண்மையாகக் கடைப்பிடிக்கிறது. அது முதலாளித்துவக் கொள்கையை ஏற்றுக் கொண்ட நாடு. பேச்சுச் சுதந்திரம் கருத்துச் சுதந்திரம் நிறைந்த ஜனநாயக நாடாக நமக்குக் காட்சி கொடுத்தாலும் அந்நாட்டின் அதிகார வர்க்கமும் அறிவு ஜீவிகளும் பத்திரிகைகளும் முதலாளித்துவக் கொள்கையைத் தவிர மற்ற கருத்தியல் கொள்கைகள் நாட்டில் நிலைகொள்ளாமல் பார்த்துக் கொள்கிறார்கள். முதலாளித்துவக் கொள்கைக்குள் எவ்வித சர்ச்சையை மேற்கொள்ளலாம். ஆனால் முதலாளித்துவக் கொள்கைக்கு எதிராக செயற்படும் கம்யூனிசச் சிந்தனையை வேரூன்ற விடாமல் கருத்தியல் கட்டுப்பாடு பார்த்துக் கொள்கிறது என்பதைச் சோம்ஸ்கி தம்முடைய கட்டுரைகளில் விளக்குகிறார். சிந்தனைச் சுதந்திரம் முதலாளித்துவ எல்லைக் கோட்டையும் அமெரிக்காவின் அதிகார எல்லையை மீறாத நிலைப்பாட்டையும் பார்த்துக் கொள்கிறது.

சோம்ஸ்கி அமெரிக்காவின் இயல்பை மிக இயற்கையாகத் தன்னுடைய பேட்டியில் படம் பிடித்துக் காட்டுகிறார். (Language and Responsibility) அமெரிக்கா முழு உலகிற்கு ஜனநாயகப் பண்பு நிறைந்த நாடாகத் தன்னைக் காட்டிக் கொண்டாலும் அதனுடைய நடவடிக்கைகள் இப்போக்கை உறுதிப்படுத்த வில்லை என்பதற்குச் சோம்ஸ்கி பல சான்றுகள் தருகிறார். அமெரிக்கா கருத்தியல் கட்டுப்பாட்டை (Control of ideogy) மிக நுண்மையாகக் கடைப்பிடிக்கிறது. அது முதலாளித்துவக் கொள்கையை ஏற்றுக் கொண்ட நாடு. பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் நிறைந்த ஜனநாயகநாடாக நமக்குக் காட்சி கொடுத்தாலும் அந்நாட்டின் அதிகார வர்க்கமும் அறிவு ஜீவிகளும் பத்திரிகைகளும் முதலாளித்துவக் கொள்கையைத் தவிர மற்ற கருத்தியல் கொள்கைகள் நாட்டில் நிலை கொள்ளாமல் பார்த்துக் கொள்கிறார்கள். முதலாளித்துவக் கொள்கைக்குள் எவ்விதச் சர்ச்சையையும் மேற் கொள்ளலாம். ஆனால் முதலாளித்துவக் கொள்கைக்கு எதிரான சோசலிச கம்யூனிசச் சிந்தனையை வேரூன்ற சோம்ஸ்கி தம்முடைய கட்டுரைகளில் விளக்குகிறார். சிந்தனைச் சுதந்திரம் முதலாளித்துவ எல்லைக் கோட்டையும் அமெரிக்காவின் அதிகார எல்லையை மீறாத நிலைப்பாட்டையும் பார்த்துக் கொள்கிறது.

அமெரிக்கப் பத்திரிகைகள் முதலாளித்துவ நிறுவனங்களாகச் செயல்படுவதால் அமெரிக்க அதிகார கருத்தியல் நிலைப்பாட்டை ஆதரிக்கவும் பரப்பவும் செய்கின்றன என்று சோம்ஸ்கி வாதிடுகிறார். அமெரிக்க அதிகார முதலாளித்துவக் கருத்தியலை ஊடகங்களின் வழி பரப்பவும் அதனைப் பெரும்பாலானோர் ஏற்றுக் கொள்ளும் விதத்திலும் மக்கள் தொடர்பு சாதனங்கள் செயல்படுகின்றன. சான்றாக, வியட்நாம் மீது அமெரிக்கா தொடுத்த ஆக்கிரமிப்பு கருத்தியல் வழியிலும் அறவழியிலும் தவறானது என்பதைப் பத்திரிகைகள் சுட்டத் தவறிவிட்டன என்று அவர் குறிப்பிடுகிறார். வியட்நாம் நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட அமெரிக்காவுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பது வாதத்தின் மையப் பொருளாக இருக்கும் நிலைப்பாடு அவர்களுடைய வாதங்களில் எழவில்லை என்பதை New York Times எனும் பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் சோம்ஸ்கியும் ஹெர்மனும் குறிப்பிட்டுள்ளார்கள்.

சோம்ஸ்கியின் அரசியல் நடவடிக்கை மனிதன் சுதந்திரமானவன் என்பதிலும் வெளிப்புறச் சூழலின் அச்சமான அதிகார வர்க்க அடக்குமுறையால் கட்டுப்படுத்த முடியாதவன் என்பதிலும் வேர் கொண்டது. சோம்ஸ்கி அமெரிக்காவை விமர்சிக்கும் அதே நேரத்தில் முன்னாள் ரஷ்ய சோவியத் யூனியனின் அடக்குமுறையையும் கடுமையாக விமர்சித்தார். ஒன்றின் அடக்குமுறை வெளிப்படையாக உள்ளது என்றும் மற்றொன்றின் அடக்குமுறையும் கருத்தியல் கட்டுப்பாடும் நுண்மையாக உள்ளன என்றும் அவர் குறிப்பிடுகிறார். சோம்ஸ்கி ஒரு மனித நேயம் மிக்கவர். அவருடைய அரசியல் விமர்சனம் மனிதன் சுதந்திரமானவன் என்ற கருத்தியல் அடிப்படையில் அறநெறிப்பட்ட அரசியல் நடவடிக்கைகளையே அதிகார வர்க்கம் மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

நன்றி உங்கள் நூலகம்
மே — ஜூன் 2005
(அரங்கன் சோம்ஸ்கியின்
நேரடி ஆய்வு மாணவராக இருந்தவர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரும் சிந்திக்கும் திறன்களும்

## அறிமுகம்

மாணவர்களை செழிப்புமிக்கவகையில் சிந்திக்கக் கூடியவர்களாக உருவாக்குவது கற்பித்தலின் முக்கிய இலக்குகளிலொன்றாகும். செழிப்பு மிக்க வகையில் சிந்தித்தல் (Productive thinking) என்பது. ஆக்கத்திறன்மிக்க வகையில் சிந்தித்தல் (Creative thinking) மற்றும் திறனாய்வுமிக்க வகையில் சிந்தித்தல் (Critical thinking) ஆகிய இருவகை சிந்தித்தல் திறன்களையும் ஒன்றிணைப்பதால் உருவாகும் சிந்திக்கும் ஆற்றலாகும். மாணவர்களை செழிப்புமிக்க சிந்தனையாளர்களாக உருமாற்றுவது மாணவர்களின் தனியாள் வளர்ச்சிக்கு உதவுவதோடு ஒட்டு மொத்த சமூக வளர்ச்சிக்கும் ஏதுவாக அமையும் இக்கட்டுரையானது மேற்படி மூன்று எண்ணக்கருக்களையும் அறிமுகஞ் செய்ய முயல்கிறது.

**ஆக்கத்திறன்மிக்க சிந்தனை என்பது புதிய புதிய கருத்தினை உருவாக்குவதாகும். பிரச்சினைத் தீர்வுக்காக புதிய புதிய மாற்று வழிவகைகளை உருவாக்குவதாகும். விரிமுறையாக மாற்றுத் தீர்வுகளை உருவாக்குவதும் அவற்றிலிருந்து குவி முறையாக சிந்தித்து மிகப் பொருத்தமான தீர்வை கண்டறிவதும் திறனாய்வு மிக்க சிந்தனையாகும். ஆக்கத் திறன் மிக்க வகையில் சிந்தித்தலும் திறனாய்வு மிக்க வகையில் சிந்தித்தலும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும். இவ்வாறு ஆக்கத் திறன்மிக்க வகையிலும் திறனாய்வு மிக்க வகையிலும் சிந்தித்து அறிவை ஒன்றிணைக்கும் செயன்முறையே செழிப்பு மிக்க சிந்தனை எனப்படுகிறது.**

## சிந்திக்கும் திறன்களும் வழிமுறைகளும்

ஓர் உதாரணத்தைப் பார்ப்போம் தவணைப் பரீட்சையில் ஒரு வினா இவ்வாறு அமைந்தது

பொருத்தமற்ற சொல்லின் கீழ் கீறிடுக.

நாய். பூனை. தொலைக்காட்சிப் பெட்டி

சகல மாணவர்களும் தொலைக்காட்சிப் பெட்டியின் கீழ் கீறிட்டனர். விடை மிகவும் எளிதானது. ஆனால் ஒரு மாணவி மாத்திரம் பூனையின் கீழ் கீறிட்டாள். இவ்விடை சரியானதா தவறானதா? நேர்கோட்டு முறையில் (Linear) சிந்திக்கும் எவரும் விடை தவறானது என்ற முடிவுக்கே வருவர். நாயும் பூனையும் உயிருள்ளவை. தொலைக்காட்சிப் பெட்டி உயிரற்றது. எனவே அதுவே பொருத்தமற்ற சொல் நாம் அனைவரும் மரபுரீதியான கருத்து நிலைகளுக்கும், மரபு ரீதியாக நிறுவப்பட்ட வழிமுறைகளில் சிந்திப்பதற்கும் பழக்கப்பட்டவர்கள். அவ்வாறு சிந்திப்பதும் செயற்படுவதும் எமக்கு மிகவும் வசதியானது. ஆனால் பெருமை பெற்ற விஞ்ஞானிகளும், கலைஞர்களும். தத்துவஞானிகளும் வேறுபட்ட வகையில், மரபு ரீதியான முறைகளிலிருந்து விலகி நின்றமை காரணமாகவே மனிதகுலம் பயன்பட்டது.

பிக்காஸோ எல்லா ஓவியர்களையும் போன்று சிந்தித்து தனது படைப்புகளை உருவாக்கியிருந்தால் எமக்கு நவீன ஓவியம் கிடைத்திருக்காது. சேர் ஐசாக் நியூற்றன் மரத்திலிருந்து ஆப்பிள் பழம் விழுவதை எல்லாரையும் போல் நோக்கியிருந்தால் எமக்கு புவியீர்ப்பு பற்றி தெரிந்திருக்காது. அதேபோலத்தான் மைக்கல் ஜெக்சன் புதுவிதமாக ஆடி வித்தியாசமான நாட்டியக் காரராக புகழ்பெற்றார். எனவே சில மனிதர்கள் எல்லாரையும் போலன்றி வித்தியாசமாக சிந்திக்கத் தலைப்பட்டமையினால்தான் மனித குலம் வசதியான வாழ்க்கை முறைகளைப் பெற்றுக் கொண்டதோடு மனித நாகரீகமும் விருத்தியடைந்தது.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது சின்னஞ் சிறு மாணவியின் விடை வேறுபட்ட சிந்தனைத் திறனின் விளைவேயன்றி தவறானதல்ல. எல்லாரையும் போல சிந்திக்க மறுப்பது தவறாகிவிடமாட்டாது. ஆசிரியர் அம் மாணவியை அழைத்து அவளது விடைக்கான காரணத்தை விசாரித்த போது அவர் இவ்வாறு கூறினார். "ரீச்சர், எங்களது

**தை. தனராஜ்**
நிபுணத்துவ ஆலோசகர்
தொலைக்கல்வி நவீனமாக்கற் செயற்றிட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் நாய்க்கும், பூனைக்கும் 'லைசென்ஸ்' வாங்குகிறோம். ஆனால் பூனைக்கு வாங்குவதில்லை. எனவே பூனைதான் பொருத்தமற்ற சொல்." வேறுபட்ட சிந்தனையை ஊக்குவிக்கும் அவ்வாசிரியர் அவ்விடையை ஏற்றுக் கொண்டார். எத்தனை ஆசிரியர்கள் அவ்விடையை சரியான விடை என ஏற்றுக்கொள்வார்கள்.?

ஆக்கத்திறன்மிக்க சிந்தனை என்பது புதிய புதிய கருத்தினை உருவாக்குவதாகும். பிரச்சினைத் தீர்வுக்காக புதிய புதிய மாற்று வழிவகைகளை உருவாக்குவதாகும். விரி முறையாக (Divergent ) மாற்றுத் தீர்வுகளை உருவாக்குவதும் அவற்றிலிருந்து குவி முறையாக (Convergent) சிந்தித்து மிகப் பொருத்தமான தீர்வை கண்டறிவதும் திறனாய்வு மிக்க சிந்தனையாகும். ஆக்கத்திறன் மிக்க வகையில் சிந்தித்தலும் திறனாய்வு மிக்க வகையில் சிந்தித்தலும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களாகும். இவ்வாறு ஆக்கத்திறன்மிக்க வகையிலும் திறனாய்வு மிக்க வகையிலும் சிந்தித்து அறிவை ஒன்றிணைக்கும் செயன்முறையே செறிப்பு மிக்க சிந்தனை எனப்படுகிறது. இவ்வாறான செறிப்பு மிக்க சிந்தித்தல் திறனை ஆசிரியர்கள் மாணவர்களில் வளர்ப்பதோடு அதற்கான வாய்ப்புகளையும் வழங்க வேண்டும். இதற்கான பல கருவிகள் உள்ளன. இவற்றையும் பற்றி ஆசிரியர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு பல்வேறு வகையிலும் செறிப்பு மிக்க சிந்தித்தலில் மாணவர்கள் ஈடுபட முடியும் என்பதை அடித்தளமாகக் கொண்டே ஹோவர்ட் கார்ட்னர் (Howard Gardner ) பல்வகை நுண்ணறிவு (Multiple Intelligence) என்னும் தமது கோட்பாட்டை வெளிக் கொணர்ந்தார்.

மிகவும் நவீனமான வலுமிக்க கணனியை விட மனித மூளை சக்தி வாய்ந்தது எனக் கூறப்படுகின்றது. ஒரு மனித மூளையில் மில்லியன் கலங்கள் உள்ளன. அது உலகிலுள்ள மனிதர்களின் மொத்த தொகையை விட 167 மடங்கு அதிகமானதாகும்! மனித மூளையின் ஒரு கலம் சாதாரணமான கணனியை விட அதிக வலுமிக்கது!

## மனித மூளையின் இருபக்கங்கள்

பெரும்பாலான மனிதர்கள் நேர்கோட்டில் தர்க்கரீதியாக சிந்தித்து செயற்படும் போது ஏன் சிலர் மாத்திரம் வேறுபட்ட முறைகளில் ஆக்கத்திறன்மிக்க சிந்தனையாளர்களாக மாறுகின்றனர்? இவ்வினாவுக்கு விடையளிக்க மிகவும் முக்கியமானவர் நோபல் பரிசினை வென்ற அமெரிக்க உளவியலாளரான ரோஜர் ஸ்பெரி (Roger Sperry). மனித மூளையின் இடப்பகுதி பொதுவாக சொற்கள், எண்கள், தர்க்கம், தொடர்ச்சி பகுப்பாய்வு போன்ற கல்விச் செயற்பாட்டு அம்சங்களிலும் மூளையின் வலப்பகுதி ஒத்திசைவு, கற்பனை, நிறங்கள், பகற்கனவு காணல், வெளியுணர்வு பிரக்ஞை (Spatial awareness) முழுமை பற்றிய பிரக்ஞை (Holistic awareness) என்பவற்றிலும் ஈடுபடுகிறது, என ஸ்பெரி கண்டறிந்தார். அதுமாத்திரமன்றி மூளையின் ஒரு பகுதி உயிர்ப்புடன் செயற்படும் போது மற்றப்பகுதி நுண்ணிய மற்ற நிலைக்கு (Relaxed, semi - meditative alpha wave hum ) சென்று விடுகின்றது எனவும் அவர் கண்டறிந்தார்.

இந்த ஆய்வின் அடிப்படையில் பார்க்கும் போது விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் போன்றோரது வலது பக்க மூளை மிகவும் உயிர்ப்புடன் செயற்படுகின்றது என்ற முடிவுக்கு நாம் தூண்டப்படுகிறோம். எனினும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பொதுவாக சகல மனிதர்களுக்குமே இந்த இருபகுதி உள ஆற்றல்களும் முழுமையாக உள்ளன என அறியப்பட்டது. ஆனால் தவறான கல்வி முறை காரணமாக மாணவர்களில் பொதிந்துள்ள முழுமையான ஆற்றல்களும், இயல்பூக்கங்களும் வெளிக்கொணரப்படுவதில்லை. எமது பலவீனமான உள ஆற்றலின் அலைவரிசைதான் பலவீனமானதென்று லேபல் ஒட்டிவிடுகின்றோம். ஆனால் உண்மை என்னவெனில் எமது சில உள ஆற்றல்களை நாம் விருத்தி செய்யும் போது ஏனைய உள ஆற்றல்கள் மங்கியுள்ளன. அவற்றை முயன்றால் உயிர்ப்புடன் இயங்கச் செய்ய முடியும். இவ்வாறு மாணவர்களில் மங்கியிருக்கும் அல்லது உறக்கத்திலிருக்கும் உள ஆற்றலினை இனங்கண்டு தட்டி எழுப்பி, முழுமையாக மலரச் செய்வது ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. ஆசிரியர்கள் முயன்றால் மாணவரில் உறங்கிக் கிடக்கும் "விஞ்ஞானியை, படைப்பாளியை, கலைஞனை" உலகுக்கு கொண்டு வர முடியும்; அல்லது தமது அறியாமை காரணமாக அவனை நிரந்தரமாக சாகடித்து விடவும் கூடும்.

மிகவும் நவீனமான வலுமிக்க கணனியை விட மனித மூளை சக்தி வாய்ந்தது எனக் கூறப்படுகின்றது. ஒரு மனித மூளையில் மில்லியன் கலங்கள் உள்ளன. அது உலகிலுள்ள மனிதர்களின் மொத்த தொகையை விட 167 மடங்கு அதிகமானதாகும்! மனித மூளையின் ஒரு கலம் சாதாரணமான கணனியை விட அதிக வலுமிக்கது!

ஒருவர் பகற்கனவு கண்டு கொண்டிருக்கும் போது அவரது வலப்பக்க மூளை சுறுசுறுப்புடன் இயங்குகிறது. ஒரு விடயத்தை பகுப்பாய்வு செய்யும் போது இடப்பக்க மூளை உயிர்ப்புடன் இயங்குகிறது. இந்த இருபக்கங்களையும் முழுமையாகவிருத்தி செய்வது ஒரு தனியாளின் பூரணமான வளர்ச்சிக்கு இன்றியமையாதது. மாபெரும் விஞ்ஞானிகள் பகற்கனவு காணும்போது, குளிக்கும் போது நடக்கும் போது தான் தமது மாபெரும் கண்டுபிடிப்புக்களை நிகழ்த்தியிருக்கின்றனர். ஆர்க்கிமிடிஸ் என்னும் விஞ்ஞானியை உங்களுக்கு நினைவிருக்கிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபெரும் மேதைகளான ஐன்ஸ்டீன், பிக்காசோ போன்றோர் மூளையின் இருபக்க ஆற்றல் மிகவும் கொண்டிருந்தனர் எனக் கூறப்படுகின்றது.

## ஆசிரியர்கள் ஆக்கத்திறன் பற்றி ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்?

1. உங்களது நுண்மதியின் எல்லைக்கு அப்பாலும் உங்களது ஆற்றலை விருத்தி செய்து கொள்வதுடன் அதன் மூலமாக உங்களது மாணவர்களின் உள ஆற்றல்களையும் விருத்தி செய்ய முடியும்.
2. உலகில் மாற்றங்கள் வேகமாக ஏற்படுகின்றன. சிக்கல் தன்மையும் போட்டித்தன்மையும் அதிகரிக்கின்றன. புதிய புதிய கருத்துக்கள் உங்களது வெற்றிக்கு மாத்திரமல்லாது உங்களது நிறுவனத்தின் வெற்றிக்கும் அவசியமானவை.
3. ஆக்கத்திறன் ஒரு மனிதவளம். உங்களது பாடசாலையில் காணப்படுகின்ற மனித வளத்தை முழுமையாக வளர்த்தெடுப்பது உங்களது கடமையாகும்.
4. உங்களது பிரச்சினைகள் நாளாந்தம் சிக்கலைடைகின்றன. உங்களது அறிவு மாத்திரம் புத்ததாக்க மிக்க தீர்வினைக் கண்டறிய போதுமானதல்ல.
5. உங்களது அறிவுத் தளம் விரிவாக்கப்பட வேண்டும். ஆக்கத் திறன் மிக்க சிந்தனையின்றி உங்களது அறிவுத் தளத்தை விரிவுபடுத்த முடியாது.
6. ஆக்கத்திறன் ஓர் இயற்கையான மனித ஆற்றல். எல்லோரிடமும் இது மறைந்துள்ளது. இதனை வெளிக்கொணரவும் விருத்தி செய்யவும் முடியும்.
7. ஆக்கத் திறன் குறித்து நிறைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல நூல்களும் வெளிவந்துள்ளன. கடந்த தசாப்தங்களில் ஆக்கத்திறன் பற்றி சர்வதேச மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன.
8. ஆக்கத்திறன் விஞ்ஞானம் முதல் வணிகம் வரையிலான சகல கற்கை நெறிகளிலும் பின்னிப் பிணைந்துள்ளது.
9. வினைத்திறன் மிக்க கற்றல்- கற்பித்தலுக்கு ஆக்கத்திறன் அவசியமானது. ஆக்கத்திறனை ஊக்குவிக்கும் ஆசிரியர்களினால் மிகவும் உகப்பான கற்றல் சூழ்நிலையையும் உயர்மட்ட சிந்திக்கும் ஆற்றல்களையும் உருவாக்க முடியும்.

## ஆக்கத் திறன் மிக்க சிந்தனைக்கு எதிரான தடைகள்

ஆக்கத்திறன் மிக்க சிந்தனைக்கும் அதன் அடிப்படையிலான பிரச்சினை தீர்வுக்கும்' எதிரான பல தடைகள் உள்ளன. என்பதை ஆசிரியர் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

மரபுரீதியாக நேர்கோட்டு அடிப்படையில் சிந்தித்தல் ஆக்கத்திறன் மிக்க சிந்திப்புக்கு எதிரான முக்கிய தடையாகும். இத்தகைய சிந்தனைப் போக்கிலிருந்து விடுதலை பெறாமல் ஆக்கத்திறன் மிக்க சிந்திக்கும் ஆற்றலை ஒருவர் பெற முடியாது..

பகற்கனவு காணலும், பிரதிபலித்தலும் நேரவிரயம் எனக் கருதக் கூடாது. நாம் முன்னர் குறிப்பிட்டது போல மாபெரும் கண்டுபிடிப்புகளும், கலைப்படைப்புகளும் பகற்கனவு கண்டபோதும் பிரதிபலிக்கும்போது தான் உருவாக்கப்பட்டுள்ளன. அதேபோல பிரச்சினை தீர்த்தல் என்பது மிகவும் பாரதூரமானவிடயம் எனவும் அதில் வேடிக்கை வினோதங்களுக்கும், நகைச்சுவைக்கும் இடமில்லை. என எண்ணுவதும் ஆக்கத் திறன்மிக்க சிந்திப்புக்கு தடையானவை.

உணர்வுகள், உள்ளுணர்வுகளுக்கு இடமளிக்கக் கூடாது: சகலமும் புறவயம் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்று எண்ணுவதும்,மரபுகளைப் பின்பற்றுதல் மாற்றங்களை விட மேலானவை என நினைப்பதும் ஆக்கத் திறன் மிக்க சிந்திப்புக்கு வழிசமைக்கமாட்டா கட்டமைப்புக்கள் முக்கியமானவை தான். ஆனால் அவை ஆக்கத்திறன்மிக்க சிந்திப்புக்கு தடையாக இருக்கும் போது அக்கட்டமைப்பு க்களிலிருந்து விலகிச் செல்வது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

## முடிவுரை

சிந்தனைத் திறன்களை ஊக்குவிப்பதன் மூலம் ஆசிரியர்கள் மாணவர்களின் முழுமையான ஆற்றலை வெளிக் கொணர முடியும். எனவே சிந்தனைத் திறன்கள் பற்றிய விளக்கமும் அறிவும் ஆசிரியர்களுக்கு அவசியமானவை. ஆக்கத் திறன் மிக்க வகையிலும் திறனாய்வு மிக்க வகையிலும் சிந்திப்பதற்கு மாணவர்களை பயிற்றுவதன் மூலம் அவர்களை செழிப்பு மிக்க சிந்தனையாளர்களாக உருமாற்ற முடியும். இச் செயன்முறைக்கு பல தடைகள் உள்ளன. இதனை ஆசிரியர்கள் உணர்ந்து கொள்ளுதல் மூலம் அவற்றிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு மாணவர்களுக்கு உதவ முடியும்.

வகுப்பறையில் சிந்தனைத்திறன்களை தனியாகக் கற்பிக்க வேண்டுமா அல்லது அதனைக் கலைத்திட்டத்தில் பின்னிப்பிணைத்து விடவேண்டுமா என்பது பற்றிய விவாதமும் உள்ளது. இரண்டு அணுகு முறைகளிலுமே அனுகூலங்களும் பிரதிகூலங்களும் இல்லாமலில்லை. வகுப்பறையில் மாணவர்களின் சிந்தனைத் திறன்களை வளர்ப்பதற்கு பல வழிமுறைகளும், கருவிகளும் உள்ளன. இவைபற்றி இக்கட்டுரையில் எதுவும் குறிப்பிடவில்லை. உதாரணமாக வகுப்பறையில் சிந்தனைதிறனகளை வளர்க்க விரும்பும் ஆசிரியர்கள் எட்லர்ட் டி போனோ (Edward je Bono ) வின் புடைநிலைச் சிந்தனை (Lateral thinking ) பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளுதல் சாலச் சிறந்தது. ❑


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்டத்திலான வாண்மை விருத்தி

## - சில குறிப்புக்கள்

கல்வி முறைமையின் தரத்தை முன்னேற்றுவதற்குப் பல வழிகள் உள்ளன. பாடசாலைச் செலவினத்தை அதிகரிக்கலாம். பாடசாலையினதும் வகுப்பறையினதும் ஒழுங்கமைப்பை மாற்றலாம். மாணவர்களுக்கு அதிகமானதும் சிறந்ததுமான போதனை உபகரணங்களை வழங்கலாம். ஆசிரியர் ஆயத்தப் பயிற்சி மற்றும் பூர்வாங்க பயிற்சிகளின் தரத்தை மேம்படுத்தலாம். "பாடசாலை மயக் காரணிகள்" (SCHOOLING FACTORS) என்றழைக்கப்படும் இத்தகையவற்றில் மாற்றங்கள் வளர்முக நாடுகளில் பிள்ளைகளின் கற்றலில் ஆழமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன (லொறின் W. அண்டேசன் - 1991).

கல்வி முறையின் தரத்தை முன்னேற்றுவதற்கான பல காரணிகளில் பாடசாலையின் முக்கிய மனிதவளமாகிய ஆசிரியர் வளமும் ஒரு பிரதானமான காரணியாகும். இன்று ஆசிரியரது வகிபாகம் ஒரு சமூக வினையூக்கி என வரையறுக்கப்படுகின்றது. சகிப்புணர்வையும் புரிந்துணர்வையும் வளரச் செய்யும் ஒரு கருவியாக ஆசிரியர் கருதப்படுகின்றார்.

கற்பித்தல் என்பது ஒரு சிக்கலான செயலாகும். அது ஒரு கலை நுட்பம் மட்டுமல்லாது ஒரு அறிவியலுமாகும். கற்பித்தல், பொறுத்தன்மை, ஆர்வம், அறிவு என்பவற்றை பரப்ப வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இன்று கற்பித்தல் தொடர்பாக பரவலாக எழுந்துள்ளது. இவ்வகையான எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப கற்பித்தல் நிகழ வேண்டுமாயின் கற்பித்தல் என்ற உன்னதச் செயலுக்கு ஏற்றவாறான திறன்கள், விழுமியங்கள் மனப்பாங்கு என்பன ஆசிரியர்களிடத்து தொடர்ச்சியாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

கற்பித்தல் என்பது ஒரு சிக்கலான செயலாகும். அது ஒரு கலை நுட்பம் மட்டுமல்லாது ஒரு அறிவியலுமாகும். கற்பித்தல் பொறுத்தன்மை ஆர்வம் அறிவு என்பவற்றை பரப்ப வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இன்று கற்பித்தல் தொடர்பாக பரவலாக எழுந்துள்ளது. இவ்வகையான எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப கற்பித்தல் நிகழ வேண்டுமாயின் கற்பித்தல் என்ற உன்னதச் செயற்பாட்டிற்கு ஏற்றவாறான திறன்கள், விழுமியங்கள் மனப்பாங்கு என்பன ஆசிரியர்களிடத்து தொடர்ச்சியாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

ஆசிரிய வளவிருத்தி பாலது குறித்த சில காலங்களுக்கு அல்லது சந்தர்ப்பங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படுவதொன்றல்ல. தற்போது தேசியக்கல்வியியற் கல்லூரிகளால் வழங்கப்படும் முன்சேவை ஆசிரிய கல்வி, அல்லது ஏனைய நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் தொடருறு ஆசிரிய கல்வியான பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வியியல் கல்வி முதுமாணி போன்ற ஆசிரியர் கல்வியும்; ஆசிரிய பயிற்சி கலாசாலைகளில் வழங்கப்படும் ஆசிரிய பயிற்சியும் ஒரு ஆசிரியரின் முழு சேவைக் காலத்திற்கும் போதுமானதல்ல. வேறு கோணத்தில் நோக்கின் அவ்வப்போது வழங்கப்படும் சேவைக்கால பயிற்சி செயலமர்வுகளால் மட்டும் சமூக வினையூக்கி என்ற ஆசிரிய வகிபாகத்திற்கான திறன்களை, விழுமியங்களை மனப்பாங்குகளை ஆசிரியரிடத்தே வளர்த்துவிட முடியாது.

பாடசாலை தவிர்ந்த ஏனைய நிறுவனங்களை நோக்கும் போது அங்கு மனித வள முகாமைத்துவ விருத்தி (HRD) என்றதொரு பகுதி தனியாக தாபிக்கப்பட்டு அதன் மூலமாக திறனை ஊழியர்களின் தொடர்ச்சியான பயிற்சி அல்லது விருத்தி செயற்பாடுகள் தொடர்கின்றன. இது தரமான ஒரு வேலைப்படையை அபிவிருத்தி செய்தல், தரமான ஒரு வேலைப்படையை நிறுவனத்தில்

க. சுவர்ணராஜா
தேசிய கல்வியியற் கல்லூரி
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணிப் பாதுகாத்தல், நிறுவன இலக்குகளை முறையாக அடைந்து கொள்ளல் என்றவாறு அமைகின்றது.

பாடசாலைகளைப் பொறுத்தளவில் ஆசிரிய வள விருத்தி என்பது ஒரு மனித விருத்திச் செயற்பாடாகும். எனவே பாடசாலை மட்டத்தில் பாடசாலை எனும் இயங்குதளத்தில் ஆசிரிய வள விருத்திக்கான திட்டங்களும், சந்தர்ப்பங்களும் உருவாக்கப்படுதல், அதனை நடைமுறைப்படுத்தல் அவசியமானதாகும்.

தேசிய கல்வி நிறுவனத்தின் 2002 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா உரையில் பேராசிரியர் ஸீ.எம். மத்தும பண்டார பின்வரும் ஒரு குறிப்பை முன் வைக்கின்றார்.

"எமது பிறப்பு உரிமையாகிய சுற்றாடலும் இயற்கையின் கொடைகளுமே இன்று மோசமாக சீர்குலைந்து வருகின்றன. சந்தேகமோ, பயமோ இன்றி ஒரு மரக்கறியை அல்லது மீனை தானும் வாங்கமுடியாத நிலைக்கும் இயற்கையான நீரூற்றுக்களிலிருந்து ஒரு மிடரு நீரைத்தானும் பருக முடியாத நிலைக்கும் நாம் உள்ளாகியுள்ளோம். இத்தகைய பாரிய சவால்களை எதிர் நோக்கக் கூடிய ஓர் எதிர்கால சமுதாயத்தை உருவாக்கும் அளவுக்குப் பொருத்தமான மனப்பாங்குடன் கூடிய அறிவுமிக்க பல்வகைத் திறன்களைக் கொண்ட ஆசிரிய பரம்பரையினர் எம்மிடத்தே இருப்பதாக நேர்மையாக ஏற்றுக்கொள்ளும் நிலையில் நாம் இன்று இருக்கின்றோமா? இந்த சவால்களை எதிர் கொள்ளக் கூடிய ஆசிரியர்களாக முன் செல்ல வேண்டுமானால் கல்விப் பரப்பில் ஒரு பாரிய நோக்கு ரீதியான மாற்றம் (PARADIGM SHIFT) ஏற்பட வேண்டுமென நம்புகின்றேன்" எனக் குறிப்பிடுகிறார்.

மேற்கண்ட குறிப்பு பண்புத் தரமிக்க ஆசிரிய வளவிருத்தி தொடர்பான இன்றைய தேவையை தெளிவாக எடுத்துரைக்கின்றது. பண்புத் தரமிக்க ஆசிரிய வள விருத்தியானது ஒரு தொடர் செயற்பாடாகவும், ஆசிரியரின் இயங்குதளத்தில் இடம் பெறுவதாகவும், ஆசிரியர்களின் பிரதிபலிப்புகளிலிருந்து கட்டியெழுப்பப்பட்டதாகவும் அமையும் போது தான் அது சாத்தியமானதொன்றாக அமையும்.

ஆசிரிய வளவிருத்தி தொடர்பான பல்வேறு வகையான நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து ஆழ்ந்த விமர்சனங்கள் முன்வைக்கப்படாத போதிலும் ஆசிரிய வள விருத்தியில் ஈடுபடும் நிறுவனங்களிடையே ஒரு பனிப்போர் நிகழ்ந்த வண்ணமே உள்ளது. ஆசிரிய வள விருத்தி முயற்சிகளை ஒருங்கிணைக்கும் செயற்பாடுகள் பல தோல்வியிலேயே முடிவடைகின்றன. அரச நிறுவனங்கள் மட்டுமின்றி இன்று தனியார் நிறுவனங்களும் ஆசிரிய வள விருத்தியில் தமது பிரவேசத்தை மெதுவாக ஆரம்பித்துள்ளன. எது எவ்வாறு இருந்த போதும் ஆசிரிய வள விருத்தியானது பாடசாலை மட்டத்திலேயே தொடர்ச்சியாக முன்னெடுக்க முடியும் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொன்றாகும். ஏனெனில் ஆசிரிய வளவிருத்தி நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்த காலத்துடன் நிறைவடைந்த பின்தொடர் செயற்பாடுகள் தொடர்பாக ஒரு மதிப்பீடற்ற நிலையே காணப்படுகின்றது. ஆகவே தொடர்ச்சியான ஆசிரிய வள விருத்தி பாடசாலை மட்டத்திலேயே இடம்பெறுதல் அவசியமானதாகும்.

> ஆசிரியர்களுக்கிடையிலான ஆரோக்கியமான தொடர்பாடல் இடம்பெறுவதற்கு அவர்களிடையே பாடசாலையின் தூரநோக்கு, பணி இலக்கு பற்றிய தெளிவான விளக்கம் காணப்படல் வேண்டும். இந்நிலையில் எந்தவொரு செயற்பாட்டினையும் பாடசாலையின் தூரநோக்கினை அடைவதற்கான நிலையை கருத்திற் கொண்டு மதிப்பிடும் ஆற்றல் உருவாகும். இந்நிலையானது எல்லா ஆசிரியர்களின் செயற்பாட்டினையும் பாராட்டும் அல்லது நெறிப்படுத்தும் நேர்நிலை மனப்பாங்கு ஆசிரியர்களிடம் உருவாகும். இந்த நற்போக்கானது யார் சொல்வது, என்ன சொல்வது எவருடாக சொல்வது எந்த வழியில் சொல்வது என்ன பயன் படச் சொல்வது என்ற தொடர்பியல் பண்பாட்டினை தோற்றுவிப்பதாக அமையும்.

## பாடசாலை மட்டத்திலான ஆசிரிய வள விருத்தி நுட்பங்கள்

பாடசாலை மட்டத்திலான ஆசிரிய வள விருத்தியின் போது பின்வரும் நுட்பங்களை நாம் கைக்கொள்ளலாம் அவையாவன:

### 1) ஆரோக்கியமான தொடர்பாடல் நுட்பம்

பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களுக்கிடையிலான தொடர்பாடல் ஆரோக்கியமாக அமையும் நிலையில், அவர்களுக்கிடையிலான கருத்துப் பரிமாற்றங்களும், ஆக்கபூர்வமான விமர்சனங்களும், ஒருவருக்கொருவர் உதவும் அக்கறையுணர்வும், ஆசிரிய வள விருத்திக்கு சாதகமாக அமையலாம்.

ஆசிரியர்களுக்கிடையிலான ஆரோக்கியமான தொடர்பாடல் இடம்பெறுவதற்கு அவர்களிடையே பாடசாலையின் தூரநோக்கு (VISION) பணி இலக்கு (MISSION) பற்றிய தெளிவான விளக்கம் காணப்படல் வேண்டும். இந்நிலையில் எந்தவொரு செயற்பாட்டினையும் பாடசாலையின் தூரநோக்கினை அடைவதற்கான நிலையை கருத்திற் கொண்டு மதிப்பிடும் ஆற்றல் உருவாகும். இந்நிலையானது எல்லா ஆசிரியர்களின் செயற்பாட்டினையும் பாராட்டும் அல்லது நெறிப்படுத்தும். நேர்நிலை மனப்பாங்கு ஆசிரியர்களிடம் உருவாகும். இந்த நல்போக்கானது யார் சொல்வது, என்ன சொல்வது எவருடாக சொல்வது எந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில் சொல்வது என்ன பயன்படச் சொல்வது என்ற தொடர்பியல் பண்பாட்டினை தோற்றுவிப்பதாக அமையும்.

தொடர்பியல் பண்பாடு உருவாகும் போது ஒருமித்த உணர்வு ஏற்பட்டு தமது நோக்கினை அடைவதற்காக நாம் அடைந்துள்ளவை எவை, அடைய வேண்டியவை எவை என்பன தெளிவாகும் நிலை ஏற்படும். இத்தெளிவான நிலையானது, விருத்தி பற்றிய தேவையை இயல்பாகவே ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படுத்தும்.

> தற்போது எதிர்நோக்கப்படும் கல்விப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தாம் கொண்டுள்ள இலட்சியம், திட்டங்கள், அபிப்பிராயங்கள் பற்றிய பொருத்தப்பாட்டினை மீள நோக்குதல். உதாரணமாக பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பாக தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மீள நோக்குதல்.

**2) ஆசிரியர்களின் பிரதிபலிப்பினை அடிப்படையாகக் கொண்ட நாட்டம்.**

ஆசிரியர்கள் நாளாந்த வகுப்பறைச் செயற்பாடுகள் சிலவற்றை ஒரு ஒழுங்கு முறையாக நினைவு கூருவதற்கான ஒரு நடைமுறை பிரதிபலிப்பு ஆகும். பொதுவாக பிரதிபலிப்பு பின்வருமாறு அமையலாம்.

1. கற்பித்தல் கற்றல் அனுபவமொன்றை மீட்டு அது தொடர்பாக தாம் கொண்டுள்ள அறிவினை ஆழ்முறை மதிப்பீட்டுக்குள்ளாக்குதல். உதாரணமாக மெல்லக்கற்போர் தொடர்பான பரிகார நடவடிக்கைகளுக்கு ஒரு ஆசிரியர் கொண்டுள்ள திறன்கள் போதுமானவையா என நடந்து முடிந்த வகுப்பறைச் செயற்பாடுகளைக் கருத்திற் கொண்டு சிந்தித்தல்.
2. குறித்த சில சூழ்நிலைகளில் ஆசிரியர்களின் செயற்பாடுகள் தொடர்பான விமர்சனங்களை தமது சொந்த அனுபவங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தல். உதாரணமாக ஒரு குறிக்கப்பட்ட ஆசிரியரின் வகுப்பறையில் நடந்த நிகழ்வில் அவ் ஆசிரியரின் பங்கு பற்றிய விமர்சனத்தை தனது நடைமுறை அனுபவத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தல்.
3. தாம் மேற்கொண்ட வாண்மை விருத்தி கற்கை நெறியில் அல்லது செயலமர்வில் கற்றுக் கொண்ட கோட்பாடுகளை வகுப்பறையில் நடைமுறைப்படுத்திய போது பெற்ற அனுபவங்களை சுய மதிப்பீட்டுக்குள்ளாக்குதல். உதாரணமாக மீளவலியுறுத்தல் என்ற ஸ்கின்னரின் கோட்பாட்டினை பயன்படுத்திய போது பெற்றுக் கொண்ட விளைவுகளை மதிப்பீட்டுக்குள்ளாக்குதல்.
4. தற்போது எதிர்நோக்கப்படும் கல்விப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தாம் கொண்டுள்ள இலட்சியம், திட்டங்கள், அபிப்பிராயங்கள் பற்றிய பொருத்தப்பாட்டினை மீள நோக்குதல். உதாரணமாக பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பான தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மீள நோக்குதல்.

மேற்கண்டவாறு பல்வேறு விதமான பிரதிபலிப்புச் சிந்தனைகள் ஆசிரியர்களிடத்து எழுவதற்கு பாடசாலை மட்ட வாண்மை விருத்தி செயற்பாடுகள் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

ஆசிரியர்களின் பிரதிபலிப்புக்களின் முடிவுகள் பாடசாலை மட்ட வாண்மைவிருத்தியின் கருப்பொருளாக அமையும்போது அந்த ஆசிரியர்களின் சுய வாண்மை விருத்தி நோக்கிய அடித்தளம் இடப்படும். அத்துடன், உணர்வுகளை ஏற்றுக் கொள்ளல், பாராட்டுதல், உற்சாகப்படுத்தல் எனும் விருத்தியடைதல், எண்ணங்களை ஏற்றல், தெளிவுபடுத்தல், விசாரணையில் ஈடுபடல், தகவல்களை வழங்குதல் போன்ற திறன்களும் விருத்தியடையும்.

**பாடசாலை மட்ட வாண்மை விருத்தியும் தொழில் வழிப்படுத்துனரும்**

தொழில் வழிப்படுத்துனர் (MENTOR) என்போர் அனுபவமும் முதிர்ச்சியும் நற்குணமும் கொண்ட ஒரு உதவியாளர் எனலாம். பாடசாலைகளில் பணிபுரியும் அனுபவம் குறைந்த கனிஷ்ட ஆசிரியர்களுக்கு உதவும் சிரேஷ்ட ஆசிரியர்களை நாம் தொழில் வழிப்படுத்துநர் என அழைக்கலாம்.

தேசியக் கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கையில் (1992 டிச) தொழில்வழிப்படுத்துனர் தொடர்பாக பின்வருமாறு ஒரு குறிப்பு முன் வைக்கப்படுகின்றது.

" ஒவ்வொரு பாடசாலையிலும் வழிகாட்டி சிரேஷ்ட ஆசிரியர் குழு ஒன்று இருத்தல் வேண்டும். அவர்கள் அனுபவம் பல்திறப்புலமை, நல்லொழுக்கம், மேம்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் பாடசாலை அபிவிருத்திக்கும், மாணவ அபிவிருத்திக்கும் பங்களிப்பு கல்வி தொழிலுக்குப் பங்களிப்பு, வயது முதிர்ச்சி, நம்பிக்கை, எல்லாவற்றிற்கும் மேலாக நேர்மை என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுபவர்களாவர். பின்வருவன அவர்களின் பணியாகும்.

அ. தொலைக்கல்வியுடன் இணைந்த ஆசிரிய கல்விக்கு உதவுதல்

ஆ. குறிப்பாக புதிதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் இருத்தல்.

இ. பாடசாலை முகாமையிலும் மேற்பார்வையிலும் அதிபருக்கு உதவுதல்.

ஈ. புதிய கொள்கைகளைச் செயற்படுத்துவதிலும் பாடசாலை முன்னேற்றத்திலும் காரண கர்த்தாவாகச் செயற்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. செயற்படு ஆராய்ச்சியில் ஈடுபடலும் ஏனையோருக்கு வழிகாட்டலும்.

**வழிகாட்டி**

சிரேஷ்ட ஆசிரியர்கள் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிலிருந்து முறையான செயற்கிரம மொன்றின் மூலம் தெரிவு செய்யப்படல் வேண்டும். இப்பதவிக்கு பொருத்தமான மேலதிக ஊதியம் அவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும் என்பதாகும்.

மேற்கண்டவாறான தேசிய கல்வி ஆணைக்குழுவின் சிபார்சுகள் பாடசாலைமட்டத்தில் தொழில் வழிப்படுத்துனர்களின் தேவையை வலியுறுத்துகின்றது.

தொழில் வழிப்படுத்துனர் (MENTOR )என்ற பதம் முதன்முதலாக HOMER ரினால் எழுதப்பட்ட ஒடிசி என்ற நூலில் பயன்படுத்தப்படுகின்றது. இங்கு தனது மகனை நல்வழியில் பராமரிப்பதற்காக ஒடிசியஸ் மன்னனால் நியமிக்கப்பட்ட நம்பகமான, சினேகபூர்வமான ஆலோசனை ஒருவரை குறிக்கும் பதமாக அமைந்தது. இன்று மனிதவள விருத்திக்கான மனித சக்தியை தூண்டும் ஒரு வகிபாகமாக தொழில்வழிப்படுத்தலாக (MENTOR) அமைகின்றது.

concise Oxford Dictionary இல் Mentor என்ற பதம் பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றது.

Mentor: An Experienced and Trusted Adviser, An Institution with Trains and consels new Employees OR Students.

பாடசாலைமட்ட வாண்மைவிருத்தியில் கனிஷ்ட ஆசிரியர்களின் தொழில் வழிப்படுத்துனர்களாக சிரேஷ்ட ஆசிரியர்கள் அமையும் போது பின்வரும் சாதக நிலைமைகள் பாடசாலையினுள் கட்டியெழுப்பப்படலாம்.

1. புதிய ஆசிரியர்களை அன்புடன் வரவேற்று அவர்களது வாண்மை விருத்தியில் அக்கறை செலுத்தும் நல்மனப்பாங்குடைய சிரேஷ்ட ஆசிரியர் குழு ஒன்று காணப்படும். இதனால் புதிய ஆசிரியர்களின் பிரச்சினைகள், தேவைகள் இனங்காணப்பட்டு உதவிகள் வழங்கப்படும் நிலை உறுதிப்படுத்தப்படும்.
2. புதிய ஆசிரியர்களுடன் அனுபவங்களையும் வளங்களையும் பகிர்ந்துக் கொள்வதற்கான தயார் நிலையில் சிரேஷ்ட ஆசிரியர்கள் காணப்படுவர்.
3. பாடசாலை மட்டத்தில் சிரேஷ்ட ஆசிரியர்கள், கனிஷ்ட ஆசிரியர்கள் என்ற மோதல்களும், பாகுபாடும் இன்றி நல்ல நண்பர்களாக பாடசாலையின் பொது நோக்கினை (Vision) கருத்திற் கொண்ட ஆசிரியர் குழாம் ஒன்று உருவாகும்.
4. எல்லா ஆசிரியர்களும் உயர்தேர்ச்சி மட்டத்தினை நோக்கி செயல்படும்.அக ஊக்கமும் ஒன்றிணைந்த வகையில் செயற்பட்டு பாடசாலையில் சிறந்த கவின் நிலை உருவாகும்.
5. ஆசிரியர்கள் மத்தியில் ஆக்கபூர்வமான விமர்சனங்களும், ஒருவரை ஒருவர் பதிலீடு செய்யும் நிலையும் தோன்றும்.
6. உயர் ஆசிரியர் தராதரங்கள், விழுமியங்கள் நோக்கிய முனைப்பும், நவீன விடயங்களை அறிந்து பரீட்சித்துப் பார்க்கும் துணிவும் ஆசிரியரிடையே வளரும்.
7. மாணவர்களின் அடைவுமட்டத்தில் எல்லா ஆசிரியர்களும் ஆழ்ந்த அக்கறை கொண்டிருப்பர்.
8. பாடசாலை வளர்ச்சிபற்றிய பிரதிபலிப்பு சிந்தனை எல்லாமட்டத்திலும் வளர்த்தெடுக்கப்படும்.
9. சுயமதிப்பீட்டின் ஊடாக தம்மை வளர்த்துக் கொள்ளும் கலாசாரம் பாடசாலை மட்டத்தில் பல்கி பெருகும்
10. பாடசாலை அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் நல்லுறவு உருவாகும்.
11. எல்லா மட்டங்களிலும் பொறுப்புணர்வும் தன்னம்பிக்கையும் கட்டியெழுப்பப்படும்.

தொழில்வழிப்படுத்துனர்கள், ஏனைய ஆசிரியர்களுக்கு நண்பர்களாகவும், கலாசாரப் படுத்துனர்களாகவும், சமரசப்படுத்துனர்களாகவும் இணைந்து செயலாற்றுபவர்களாகவும், தொடர்ந்து கற்பவராகவும் காணப்படுநிலையில் பாடசாலை மட்ட வாண்மை விருத்தி அதன் இலக்குகளை எளிதாக அடைந்து விட முடியும்.

**உசாத்துணை நூல்கள்**


1. UDAI VEER Modern Teaching And Curriculum Management, Avmol Publications Pvt.Ltd. India - 2004
2. லொறின் ய. அன்டேசன். ஆசிரியர் வினைதிறனை அதிகரித்தல். Nate, இலங்கை - 1999
3. Wijesiri Gunasekara .W, Eduction in Srilanka Nawina, Maharagama 2002
4. Hal Portner, Being Mentored Corwin Pressing Thousand Oaks California 2002
5. Gordoin F Shea Mentor in Vina Books pvt.Ltd New Delhi, 2004.


**கடந்த இதழில் இடம்பெற்ற "இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை" எனும் கட்டுரையின் தொடர்ச்சி செப்டெம்பர் இதழில் தொடரும் (ஆ—ர்)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி : ஒரு பன்முகப் பார்வை

"கல்வி: ஒரு பன்முகப்பார்வை" என்னும் பொதுத் தலைப்பில் தமிழரின் கல்விப் பிரச்சினைகள், சவால்கள் மற்றும் வளர்ச்சி மேம்பாடு பற்றிய கல்வி மாநாடு 2005 யூலை மாதம் 21ம்,22ம்,23ம் திகதிகளில் யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்றது. இந்த மாநாட்டை "அகவிழி"யும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை"யும் இணைந்து நடத்தின. இதில் பல்வேறு கல்வியாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


இம்மாநாடு பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

1. தமிழ்ச் சமூகத்தில் கல்வி குறித்த விழிப்புணர்வையும் அவை குறித்த பன்முக உரையாடல்களையும் ஏற்படுத்துதல்.
2. சமூகத்தில் ஏற்பட்ட போர் மற்றும் இயற்கைப் பேரிடர்கள் மூலமாக தமிழர் கல்வி எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் சவால்களையும் இனங்காணுதல்.
3. சமகால புதிய கல்விச் செல்நெறிகளை இனங்காணுதல்.
4. நவீன கல்விச் செல்நெறிகளுக்கும் சமூகத் தேவைகளுக்கும் ஏற்ற வகையில் தமிழர் கல்வியின் எதிர்கால வளர்ச்சியினை நெறிப்படுத்தல்.

மாநாட்டின் நோக்கங்களுக்கு ஏற்றவகையில் பின்வரும் விடயங்கள் தொடர்பான அம்சங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

1. தமிழர் கல்வி : ஊற்றுகளும் ஓட்டங்களும்
2. தமிழ் மரபின் தளமும் வளமும்
3. கல்வி: மரபும் மாற்றமும்
4. கல்வியும் மொழியும்
5. கல்வியும் முகாமைத்துவமும்
6. கல்வியும் கலைத்திட்டமும்

மாநாடு மூன்று தினங்களில் ஆறு அமர்வுகளாக நடைபெற்றது. முதல் நாள் காலை அமர்வு தொடக்க விழாவாக அமைந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். மேலும் மூன்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த ஆசிரியமணிகளான திரு. க.சிவராமலிங்கம், ஆசிரியமணி பஞ்சாட்சரம், செல்வி யோகாம்பிகை செல்லையா ஆகியோர் கௌரவிக்கப்பட்டார்கள்.

தொடக்கவிழா கலாசாலை அதிபர் ஆ. சிறிஸ்கந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரையை அகவிழி ஆசிரியர் தெ. மதுசூதனன் நிகழ்த்தினார். திரு. ஆறு. திருமுருகன் மூன்று மூத்த ஆசிரியர்களையும் அறிமுகம் செய்தார். மேலும் மாநாட்டுத் தொடக்கவுரையை பேரா.சபாஜெயராசாவும் மாநாட்டு சிறப்புரையை பேரா.வி. நித்தியானந்தனும் நிகழ்த்தினார்கள்.

**மாநாட்டில் அமர்வுகளும் அவற்றில் இடம்பெற்ற ஆய்வுப் பொருள்களும் பின்வருமாறு அமைந்தன.**

**அமர்வு —1**

**தமிழர் கல்வி — ஊற்றுகளும் ஓட்டங்களும்**

1. தமிழர் பாரம்பரியக் கல்வி
2. யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்
3. வட்டுக்கோட்டைச் செமினரி
4. காவிய பாடசாலை
5. சைவ ஆசிரியர் கலாசாலை
6. சைவ பரிபாலன சபை
7. இந்துக் கல்லூரிச் சபை
8. சைவ வித்தியா விருத்திச் சங்கம்.
9. ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம்

**அமர்வு — 2**

**தமிழ் மரபின் தளமும் வளமும்**

1. ஆறுமுக நாவலர்
2. சுவாமி விபுலானந்தர்.
3. பண்டிதமணி க. கணபதிப்பிள்ளை
4. பேரா.கணபதிப்பிள்ளை
5. தனிநாயகம் அடிகள்.
6. ஏ.எம்.ஏ.அஸீஸ்

**அமர்வு — 3**

**கல்வி — மரபும் மாற்றமும்**

1. புதிய கல்விச் செல்நெறிகளும் மாற்றமுறும் தமிழர் கல்விச் சிந்தனை மரபும்
2. தமிழ்ப் பாரம்பரியத்தில் ஆசிரியர்
3. மாறும் கல்வி உலகில் ஆசிரியர்
4. தமிழ்ப் பாரம்பரியத்தில் கல்வி ஒரு மறு வாசிப்பு
5. ஆசிரியர் மையக் கல்வியிலிருந்து மாணவர் மையக் கல்வி நோக்கி

**அமர்வு — 4**

**கல்வியும் மொழியும்**

1. கல்வியும் மொழியும் ஒரு மதிப்பீடு.
2. எதிர்கால நோக்கில் கல்வியும், மொழியும்
3. மரபு வழித் தமிழ் இலக்கணக் கல்வி
4. தமிழ் மொழி இலக்கியம் சாராப் பாடங்களைப் பயில்வதற்கான மொழி
5. கல்வியும் மொழி பெயர்ப்பும்.

**அமர்வு —5**

**கல்வியும் கலைத்திட்டமும்**

1. தமிழரின் தேவைகளும் கலைத்திட்டமும்.
2. கலைத்திட்ட அமுலாக்கமும் பொறுப்பும் (அதிபர், ஆசிரியர் சமூகப், பாடநூல் ஆணையினரின் பொருத்தப்பாடு)
3. மையப்படுத்தப்பட்ட கலைத்திட்டத்தால் தமிழர் கல்வி எதிர்கொள்ளும் சவால்கள்
4. கலைத்திட்டமும் எதிர்காலத் தேவைகளும்
5. மறைக் கலைத்திட்டமும் மொழி விருத்தியும்

**அமர்வு —6**

**கல்வியும் முகாமைத்துவமும்**

1. பாடசாலைத் தலைமைத்துவத்தில் அதிபர் வகிபங்கு
2. பாடசாலை முகாமைத்துவத்தில் ஆசிரியர் பொறுப்பு
3. தமிழர் கல்வியின் எதிர்கால முன்னேற்றத்தில் கல்வி முகாமைத்துவம்
4. வகுப்பறை முறைமையும் மாற்றங்களும்
5. மாற்றங்களை முகாமை செய்தல்.
6. சமூக வளங்களும் பாடசாலை முகாமைத்துவமும்.

இந்த மாநாட்டில் பல்வேறு கல்வியாளர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.குறிப்பாக கல்வியின் பன்முகப் பார்வைக்கான விரிதளம் நோக்கிய சிந்தனைகளும் கருத்துப் பகிர்வுகளும் கலந்துரையாடல்களும் பன்முக ரீதியில் வெளியிப்பட்டன. குறிப்பாக ஆசிரிய மாணவர்கள் கருத்தாடல்களில் கலந்து சிறப்பித்தமை சிறப்பாக இருந்தது. மாநாட்டில் கட்டுரை வாசிப்பாளர்களாக பேரா.சபா. ஜெயராசா , பேரா பொ. பாலசுந்தரம் பிள்ளை, பேரா . வி. நித்தியானந்தன், பேரா.அ. சண்முகதாஸ், பேரா. இரா. கனகரத்தினம், பேரா.வ. ஆறுமுகம் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தார்கள். மேலும் கலாநிதி சிவலிங்கராஜா, கலாநிதி மகேஸ்வரன், கலாநிதி கமலநாதன் கலாநிதி திருநாவுக்கரசு , கலாநிதி கலாமணி ஆகியோரும் கலந்து கொண்டார்கள். இதைவிட க. சண்முகலிங்கம், எம். கனகலிங்கம், ச. ரவீந்திரநாதன், மு.ராதாகிருஷ்ணன், பா. தனபாலன், தற்பரன் , செ. சேதுராஜா, தர்மானந்தசிவம், பாஸ்கரன் ஆகியோரும் கலந்து கொண்டார்கள். மாநாட்டின் பொதுதலைப்புக்கேற்றவாறு கல்வியின் மீதான விமர்சனப் பார்வை விரிந்திருந்தது. மாநாட்டின் நோக்கம் ஈடேறும் வகையில் சிறப்பாக கருத்தாடல் பகிர்வு ஆழமாகவே இருந்தது. ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாத வெளியீடு

# இலங்கையில் முகாமைத்துவக் கல்வி

மா. சின்னத்தம்பி

தலைவர், கல்வியியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



பக்கம்
xiv + 268

அளவு
145mmx215mm

விலை
ரூ 450

ISBN
955 9429 68 X

பொருளடக்கம்: I கண்ணோக்கு, II முகாமைத்துவ கல்வி வளர்ச்சி, III கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி, IV கலைத்திட்டம், V பிரச்சனைகளும் பலவீனங்களும், VI முகாமைத்துவ கல்வி அபிவிருத்தி, நூல் விபரப்பட்டியல், சுட்டி

## வெளிவரவுள்ள கல்வியல்துறைசார் நூல்கள்

- நவீன கல்விச் சிந்தனைகளின் போக்கு — பேராசிரியர் சோ. சந்திரசேகரன், கல்விப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்
- ஒப்பீட்டுக் கல்வி — பேராசிரியர் சோ. சந்திரசேகரன், கல்விப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்
- வகுப்பறைகளில் கல்வி சமவாய்ப்பு — திரு. உலகநாதர் நவரட்ணம், பணிப்பாளர், தமிழ் மொழிப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்
- செயல்வழி ஆராய்வு ஓர் அறிமுகம் — திரு. தை. தனராஜ், முன்னாள் பணிப்பாளர், தமிழ் மொழிப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்

## குமரன் புத்தக இல்லம்

39 36வது ஒழுங்கை, கொழும்பு 6
தொலைபேசி: [illegible]
தொலைநகல்: [illegible]
மின் அஞ்சல்: kumbhlk@sltnet.lk
இணையத் தளம்: www.kumarenbook.com

361 1/2 டாம் வீதி (கே.பி.டி. சிக்னல் அருகில்), கொழும்பு 12
குமரன் அச்சகம், சென்னை - 26
இந்தியா
தொலைபேசி: [illegible]

இம்மாதம் அடுத்த வெளியீடு


சர்வதேச கல்வி நிறுவனம் (International Academy of Education), சர்வதேச கல்வி பணியகம் (International Bureau of Education), யுனெஸ்கோ (UNESCO) ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட கல்விசார் செயற்பாடுகள் பற்றிய கைந்நூல் தொடரின் (Educational Practices Series) தமிழாக்கம்

இவ் வரிசையின் முதல் வெளியீடு

# பிள்ளைகள் எவ்வாறு கற்கிறார்கள்?

**(How Children Learns)**

கலாநிதி ஸ்டேலா வொஸ்னியாடோ



தமிழ் மொழிப் பெயர்ப்பாளர்
பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

மொழிபெயர்ப்பு
திருமதி. புஷ்பா சிவகுமாரன்

பக்கம்
60

ISBN
955 9429 69 8

விலை
ரூ 60

## இவ்வரிசையில் வெளிவரவுள்ள ஏனைய நூல்கள்

1. கற்பித்தல் (Teaching)
2. பெற்றோரும் கற்றலும் (Parents and Learning)
3. பயனுறுதி வாய்ந்த கல்விசார் நடைமுறைகள் (Effective educational practices)
4. கணிதத்தில் மாணவரின் அடைவினை மேம்படுத்தல் (Improving student achievement in Mathematics)
5. போதித்தல் (Tutoring)
6. மேலதிக மொழிகளைக் கற்பித்தல் (Teaching Additional Languages)
7. பிள்ளைகள் எவ்வாறு கற்கிறார்கள்? (How children learns?)
8. நடத்தைப் பிரச்சினைகளைத் தவிர்த்தல் - பயனுள்ள வழிமுறைகள் (Preventing Behaviors- What works)
9. பாடசாலைகளில் HIV/AIDS நோய்களைத் தவிர்த்தல் (Preventing HIV/AIDS in Schools)
10. கற்றலுக்கான ஊக்கம் (Motivation to learn)
11. கல்வி மற்றும் சமூக மனவெழுச்சிசார் கற்றல் (Academic and Social emotional learning)
12. வாசிப்பை கற்பித்தல் (Teaching Reading)
13. பாடசாலைகளிலும் முன்பள்ளி நிலையில் மொழியறிவை மேம்படுத்தல் (Promoting pre-school language)

அகண்ட ஆழ்ந்த அறிவிற்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயா மெடிக்கல் கிளினிக்

**Dr. ஜெயகாந்தரஜா**

நிலாவெளி வீதி,
திருகோணமலை.

026-2223589
0777-177221

சாஸ்திரி கூழாங்குளம்
செல்லையா ஞாபகார்த்த

# சித்த ஆயுர்வேத மருத்துவ நிலையம்

**Dr. சத்தியநாதன்**

**Dr. சாந்தி சத்தியநாதன்**

153, குருமன்காடு,
வவுனியா.

சாஸ்திரி கூழாங்குளம்.
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org